


புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2040 செப்டம்பர் 03, 2009 புரட்சி 8 முழக்கம் 34 விலை: ரூ.2.50


## ‘டெக்கான் கிரானிக்கல்’ ஏடும் அம்பலப்படுத்துகிறது

# அர்ச்சகர் பயிற்சி முடித்தோரின் அவலம்!

‘பெரியார் நெஞ்சில் தைத்த முள்’ அகற்றப்படவில்லை என்று ‘டெகல்கா’ வார ஏடு வெளியிட்ட கட்டுரையை கடந்த ‘புரட்சி பெரியார் முழக்கம்’ வெளியிட்டது. அதே செய்தியை ‘டெக்கான் கிரானிக்கல்’ நாளேடும் (ஆக.29, 2009) உறுதி படுத்தியிருக்கிறது. அர்ச்சகர் பயிற்சி முடித்த தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப் பட்டோருக்கு உடனடி யாக வேலை வாய்ப்புகள் கிடைத்துவிட்டதாக தி.க. வின் ‘விடுதலை’ செய்தி வெளி யிட்டது. ஆனால், பயிற்சி முடித்த மாணவர்களுக்கு பயிற்சி முடித்து இரண்டு ஆண்டுகள் முடிந்த பிறகும் அதற்கான சான்றிதழ்களையே தமிழக அரசு வழங்கவில்லை என்ற அதிர்ச்சி யான உண்மைகள் இப்போது வெளி வரத் தொடங்கியுள்ளன.

‘டெகல்கா’வைத் தொடர்ந்து இப்போது ‘டெக்கான் கிரானிக்கல்’ நாளேடு வெளியிட்டுள்ள கட்டுரை யில் தந்துள்ள தகவல்கள்:

தமிழக அரசு நடத்திய அர்ச்சகர் பயிற்சி பெற்ற 207 மாணவர்களுக்கு பயிற்சி முடிந்து ஓராண்டுக்குப் பிறகும் அதற்கான சான்றிதழ்கள் வழங்கப்பட வில்லை.

இப்போது - பயிற்சி முடித்த மாணவர்களுக்கு ஓராண்டுக்குப் பிறகும் சான்றிதழ்கள் வழங்கப் படாதது குறித்து, அறநிலையத் துறை அமைச்சர் பெரிய கருப்பனிடம் கேட்டபோது, சான்றிதழ்கள் வழங்க உச்சநீதிமன்றம் தடை ஏதும் விதிக்க வில்லை. சான்றிதழ் வழங்கப்படாத காரணத்தால்தான், பயிற்சி முடிந்தவர் களுக்கு, வேலை கிடைக்கவில்லை என்றால், இது பற்றி, விவாதித்து, முடிவெடுப்போம் என்று கூறியுள் ளார். பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படவில்லை என்பது இதன் வழியாக அறநிலையத் துறை அமைச்சர் உறுதிப்படுத்தி யுள்ளார்.

செந்தில்குமார் என்ற தலித் இளைஞர் (வயது 24) அறநிலையத் துறை வெளியிட்ட பத்திரிகை விளம் பரத்தைப் பார்த்து கோயில்களுக்குள் நிலவும் தீண்டாமை ஒழிவதாக பெருமையுடன் கருதி, அர்ச்சகர் பயிற்சிக்கு விண்ணப்பித்தார். ஓராண்டு பயிற்சியையும் முடித்தார். இதற் கிடையே உச்சநீதிமன்றம் பார்ப்பன ரல்லாதாரை அர்ச்கராக நியமிக்க தடைவிதித்து விட்டது. திருவல்லிக் கேணி பார்த்தசாரதி கோயில் நிர்வாகத்தின் கீழ் இவர் வைணவ சம்பிரதாயங்களுக்கான பயிற்சியில் சேர்ந்தார். ஆனால் செயல்முறைப் பயிற்சிக்காக கோயில் கர்ப்பக்கிரகத் துக்குள் சென்று பயிற்சி எடுக்கும் நிலை வந்தபோது, தங்களை, கோயில் அர்ச்சகர்கள் கர்ப்பக்கிரகத்துக்குள் அனுமதிக்கவில்லை என்று செந்தில் குமார் கூறினார்.

“கோயிலுக்குள் நாங்கள் திவ்ய பிரபந்தம் பாடக்கூட அர்ச்சகர்கள் அனுமதிக்கவில்லை. அப்போதுதான் பார்ப்பன ஆதிக்கத்தை தகர்ப்பது என்பது எவ்வளவு கடினமானது என்பதைப் புரிந்து கொண்டேன்” என்று செந்தில்குமார் கூறுகிறார்.

வன்னியர் சமுகத்தைச் சார்ந்த இராமசாமி என்ற மாணவர், வைணவத்தில் ஈடுபாடு இருந்த காரணத்தால், தான் படித்து வந்த பி.காம். பட்டப் படிப்பையும் பாதியில்

(4 ஆம் பக்கம்)

# கோவையில் தி.க.விலிருந்து விலகி கழகத்தில் இணைந்த தோழர்கள்





கோவையில் வீரமணியின் திராவிடர் கழகத்திலிருந்து, தி.க. மாவட்ட துணைத் தலைவர் சொக்கம்புதூர் ந. தண்டபாணி தலைமையில் தி.க. தோழர்கள் விலகி, கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச்செயலாளர் கு.இராம கிருட்டிணன் முன்னிலையில் பெரியார் திராவிடர் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

தி.க. தலைமை பெரியார் கொள்கையை பரப்பா மல், கல்வி நிறுவனங்களின்வளர்ச்சிக்கே பாடுபடு கிறது என்றும், ஏனைய அரசியல் கட்சிகளைப் போலவே மகனை வாரிசாக்க முயலுகிறது என்றும் - விலகி வந்த தோழர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை யில் குற்றம் சாட்டியுள்ளனர்.

ஈழத் தமிழர் இனப் படுகொலை உச்சக் கட்டத் தில் நடந்த நேரத்தில், காங்கிரஸ் - தி.மு.க. வெற்றியைக் கொண்டாடி மகிழ்ந்து கொண்டிருந்தவர்தான் தமிழர் தலைவரா என்று கேள்வி எழுப்பியதோடு, இந்த துரோகத்தை வரலாறு மன்னிக்காது என்றும் அவர்கள் கடுமையாக சாடியுள்ளனர்.

பெரியார் கொள்கைக்காக களத்தில் நிற்கும் ஒரே அமைப்பு பெரியார் திராவிடர் கழகம் தான் என்று கூறி கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

கோவை காந்திபுரம் பெரியார் படிப்பகத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செய லாளர் கோவை இராமகிருட்டிணன் முன்னிலையில் கடந்த ஆகஸ்ட் 30 ஆம் தேதி காலை இந்த உணர்ச்சிபூர்வமான இணைப்பு நிகழ்ச்சி நடந்தது. படிப்பகம் முழுதும் கூட்டம் நிரம்பி படிப்பகத்துக்கு வெளியிலும் ஏராளமானோர் திரண்டு, இந்த இணைப்பைப் பாராட்டி வரவேற்றனர். அதே நிகழ்ச்சியில் சூலூரைச் சார்ந்த சுபாஷ் என்ற தோழரும், துடியலூரைச் சார்ந்த சக்தி என்ற தோழரும் பெரியார் திராவிடர் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

### விலகிய தோழர்கள்:

சொக்கம்புதூர் ந. தண்டபாணி (கோவை மாவட்ட தி.க. துணை தலைவர்), வழையூர் மு. செல்வம் (கோவை மாவட்ட தி.க. இளைஞரணி தலைவர்), கணபதி சா. கிருட்டிணமூர்த்தி (கோவை மாவட்ட தி.க. இளைஞரணி அமைப்பாளர்), அரி புரம் மதன் (கோவை மாவட்ட தி.க. இளைஞரணி இணைச் செயலாளர்), அரிபுரம் பிரேம்குமார் (அரிபுரம் தி.க. கிளைச் செயலாளர்), பழையூர் தி.க. தோழர்கள்: ராஜேஷ், கதிர், மூர்த்தி, சபரி, சாகர். கணபதி தி.க. தோழர்கள்: ராஜேஷ், கணேசன், லட்சுமிகாந்தன், சொக்கம்புதூர் தி.க. தோழர்கள் ந. நித்தியானந்தம், ஆகாஷ் (எ) கைலாஷ், அரிகரன், அருண் குமார், குணா. அரிபுரம் தி.க. தோழர்கள்: பார்த்தீபன், தமிழ்ச்செல்வன், ராஜன் செல்வம், பொன்ராஜ், ஆட்டோ சுரேஷ், பாப்பா நாயக்கன் பாளையம் தி.க. தோழர்கள்: சுந்தர்ராசு, சுகுமார், அறிவழகன், ராஜா, சரவணன், ஆனந்த், ராமசந்திரன், தியாகராஜன், செந்தில், ராசுகமல், அருண்குமார், ரஞ்சித், அண்ணாதுரை, உதயா, அசோக்குமார் ஆகியோர் விலகிய தோழர்கள் ஆவர்.

**‘விலகியது ஏன்’ அறிக்கை 4 ஆம் பக்கம்**

தலையங்கம்

# பகுத்தறிவும் வாழ்வுரிமையும்

மூடநம்பிக்கைகளை எதிர்த்து மக்களிடையே பகுத்தறிவு பிரச்சாரங்களைக் கொண்டு செல்லும் இயக்கம் பெரியார் இயக்கம் ஒன்றுதான். ஆனால், கடந்த சில காலமாகவே இந்த பகுத்தறிவு பிரச்சார இயக்கங்களே எதிர் நீச்சல் போடும் நிலைக்கு முடக்கப்படுகின்றன என்பது வேதனையான உண்மை. குறிப்பாக பெரியாா திராவிடர் கழகம் மூடநம்பிக்கை ஒழிப்பு ஊர்வலங்கள் நடத்தினாலோ, தீ மிதி மூடநம்பிக்கைகளை அம்பலப்படுத்த முயற்சித்தாலோ காவல்துறை அனுமதிப்பது இல்லை. ஒவ்வொரு முறையும் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து நீதிமன்றம் வழியாகவே காவல்துறை தடையை நீக்க வேண்டியிருக்கிறது.

மக்களின் மூடநம்பிக்கைகளைப் பயன்படுத்திக் கொள்ள நாடு முழுதும் குறி சொல்லும் கூட்டம், சாமியார் கூட்டம் புற்றீசல் போல் பெருகி வருகின்றன. இவர்களின் மோசடிகள் முழுமையாக வெளியே வருவதில்லை. வெளியே வரும் சில சம்பவங்களில் மட்டும், இவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

சேலம் மாவட்டம் ஆத்தூர் அருகே உள்ள நரசிங்கபுரத்தில் 6 குழந்தைகள் அடுத்தடுத்து கொல்லப்பட்டிருக்கின்றனர். ஒவ்வொரு குழந்தையும் இறப்பதற்கு ஒரு சில மணி நேரத்துக்கு முன்பு அந்த ஊரைச் சேர்ந்த ஒரு பெண் 'சாமியாடி' சில மணி நேரத்தில் குழந்தை இறக்கப் போகிறது என்று 'குறி' சொல்லி வந்திருக்கிறார். தமது கூற்றை உண்மை என்று நம்ப வைப்பதற்காக பிரசாதத்தில் நஞ்சு கலந்து, குழந்தைக்கு தர வைத்திருக்கிறார். கிராம மக்களும் 'தெய்வ குற்றத்தினால்' தான் தங்கள் வீட்டுக் குழந்தைகள் இறந்ததாக நம்பினர். அப்பாவி கிராம மக்களின் நம்பிக்கையை மூலதனமாக்கி குழந்தைகளை சாகடித்த குறி சொல்லும் பெண்ணும், அவரது கணவரும் கைது செய்யப் பட்டுள்ளனர். 'சன்' தொலைக்காட்சி இத்தகைய பல மோசடிகளை அம்பலப்படுத்தி வருகிறது. இந்த மோசடிகள் மீதெல்லாம் காவல்துறை எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை. உண்மையான மக்களாட்சி ஒன்று இங்கே நடக்குமானால், அரசே இந்த மூடநம்பிக்கைகளை எதிர்த்து மக்களிடம் பகுத்தறிவுப் பிரச்சாரத்தை செய்ய வேண்டும்.

'இந்து முன்னணி' போன்ற அமைப்புகள் இத்தகைய பகுத்தறிவு விழிப்புணர்வு பிரச்சாரத்தை கடுமையாக எதிர்ப்பதோடு, பக்தர்களை புண்படுத்துவதாக கூக்குரலிடுகின்றன. பகுத்தறிவு பிரச்சாரங்களை தடுக்க முயல்கின்றன. 'சன்' தொலைக்காட்சி இந்த மோசடிகளை ஒளிபரப்புவதைக்கூட சகிக்காமல், போராட்டம் நடத்தினார்கள். இராம கோபாலன் என்ற பார்ப்பனர் பகுத்தறிவு பிரச்சாரம் நடந்தாலே - உடனே அதை எதிர்த்து அறிக்கை விடுவதையும் போராட்டம் நடத்துவேன் என்று மிரட்டுவதையும் வழக்கமாக்கிக் கொண்டுள்ளார்.

இராமகோபாலன்கள் இப்போது - ஒரே கிராமத்தில் மூடநம்பிக்கையினால் 6 குழந்தைகள் பலியாகியிருக்கின்றனவே; இதற்கு என்ன பதிலை கூறப்போகிறார்கள்? பாதிக்கப்படுவது பார்ப்பனர்கள் அல்லவே; தீண்டப்படாதவரும் 'சூத்திரரும்' தானே?

பகுத்தறிவுப் பிரச்சாரத்தை முடக்கும் காவல்துறையும், இந்து முன்னணிகளும், பார்ப்பன இராம கோபாலன்களுமே இத்தகைய 'உயிரைப் பலிவாங்கும்' மூடநம்பிக்கைகளுக்கு பாதையமைத்துத் தருகிறார்கள் என்று பகிரங்கமாகவே நாம் குற்றம் சாட்டுகிறோம்.

உள்ளூரில் புற்றீசல் போல் பெருகி வரும் இந்த மோசடிகளை தமிழக அரசு ஏன் தடை செய்யக் கூடாது? சோதிட மூட நம்பிக்கையால் எத்தனையோ குடும்பங்கள் சீரழிகின்றனவே! உயிர்ப் பலிகள் நடக்கின்றனவே! சாமியார்கள் பேச்சை நம்பி எவ்வளவோ 'கிரிமினல்' நிகழ்வுகள் ரகசியமாக நடந்து கொண்டிருக்கின்றனவே!

திருவண்ணாமலையிலே சாராயம் குடித்து சுருட்டுப் பிடித்து குறிச் சொல்லி பணம் சுரண்டிய ஒரு 'பெண்' கைது செய்யப்பட்டு, பிணையில் வெளிவந்து, மீண்டும் குறி' சொல்லக் கிளம்பிவிட்டதாக கூறப்படுகிறது. இவர்கள் மீதெல்லாம் குண்டர்கள் சட்டம் - தேசிய பாதுகாப்புச் சட்டம் பாய்வதில்லையே! உயிரைப் பறிக்கும் மூடநம்பிக்கைகளை ஒடுக்குவதற்கு இந்த சட்டத்தைப் பயன்படுத்த இந்த ஆட்சி தயாராக இல்லை. மாறாக தமிழின உணர்வுகளை நசுக்குவதற்குத்தான் முறைகேடாக, இந்த சட்டங்களைப் பயன்படுத்தத் துடிக்கிறார்கள்.

மூடநம்பிக்கைக்கு எதிரான விழிப்புணர்வு பகுத்தறிவு பிரச்சாரத்தின் தேவை மனித வாழ்வுரிமையோடு இணைந்து நிற்பதை, இப்போதாவது கம்யூனிஸ்ட் கட்சிகளும், மனித உரிமை அமைப்புகளும், பெரியார் - அண்ணா கொள்கைக்கான இயக்கங்களாக தங்களைக் கூறிக் கொண்டிருப்பவர்களும் தமிழ் தேசியம் பேசுவோரும் புதிய ஜனநாயகப் புரட்சியாளர்களும் உணர்ந்து, மக்களிடம், பகுத்தறிவு சிந்தனைகளை விதைக்க முன்வரக் கூடாதா? என்று கேட்க விழைகிறோம். இது - ஏதோ, பெரியார் இயக்கத்துக்கான பிரச்சினை அல்ல. சமுதாயப் பிரச்சினை; மக்களின் வாழ்வுரிமைப் பிரச்சினை என்பதை கவலையோடு சுட்டிக்காட்டுகின்றோம்.

# அண்ணா நூற்றாண்டில் தமிழகத்தின் அவலம்: சாதி – தாலி மறுப்பு திருமணம் நடத்தினால் கைதா?

சுயமரியாதை - தாலி மறுப்பு - சாதி மறுப்பு போன்ற புரட்சிகர திருமணங்களை நடத்தி இந்தியாவுக்கே வழிகாட்டும் பெருமையை உருவாக்கியது பெரியார் இயக்கம். தாலி கட்டாமல் - புரோகிதர் இல்லாமல் - மணமக்கள் மாலை மாற்றிக் கொண்டாலே அத்திருமணம் சட்டப்படி செல்லத்தக்கதே என்று சுயமரியாதைத் திருமணச் சட்டத்தைக் கொண்டுவந்தார் முதல்வர் அண்ணா. அண்ணாவின் நூற்றாண்டு காலத்தில் இத்தகைய திருமணங்களையே நடத்தக் கூடாது என்று ஆர்.எஸ்.எஸ். இந்து முன்னணி கும்பல் மிரட்டும் அவலங்கள் நிகழத் தொடங்கிவிட்டன.

கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூரில் புதிய ஜனநாயக தொழிலாளர் முன்னணி, புதிய ஜனநாயக கட்டிட தொழிலாளர் சங்கம் ஆகிய அமைப்புகள் இணைந்து சாதி மறுப்பு திருமணம் ஒன்றை மக்கள் மன்றத்தை முன் நடத்தி, அதன் வழியாக பெண்ணுரிமை - சாதி ஒழிப்பு பிரச்சாரத்தை செய்திட திட்டமிட்டனர். திருமணம் என்பது தனிப்பட்ட விழா என்றாலும், உள்ளூர் ஆர்.எஸ்.எஸ். - விசுவ இந்து பரிஷத் அமைப்புகள் குடியிருப்பு பகுதியில் இத்தகைய சாதி, தாலி மறுப்பு திருமணங்களை நடத்தக் கூடாது என்று எதிர்ப்பு தெரிவித்து, திருமணத்தை தடுத்து நிறுத்த முயன்றனர். காவல்துறை மதவெறி சக்திகளின் சட்டவிரோத செயல்பாடுகளை தடுக்காமல், திருமணத்துக்கு ஏற்பாடு செய்த தோழர்கள் பரசுராமன், அவரது துணைவியார் தமிழ்ச்செல்வி மற்றும் ராணி ஆகியோரை கைது செய்துள்ளனர்.

ஆளும் கட்சி ஆதரவு ஏடான 'தினகரனே' இந்த செய்தியை வெளியிட்டிருக்கிறது. சாதி - மத - மூடநம்பிக்கை ஒழிப்புப் பிரச்சாரத்தை மக்களிடம் மேலும் தீவிரமாகக் கொண்டு செல்ல வேண்டிய அவசியத்தை இச்சம்பவம் உணர்த்துகிறது.

# சென்னையில் கழக சுவரொட்டிகள்







# சோ.வி. ஆதவன் பிறந்த நாள்

பல்லாவரம் கழகத் தோழர் ஆ.பா. செல்வராசு - செ. சொர்ணம் ஆகியோரின் மகன் செ.சோசப் ஸ்டாலின் - விசயலட்சுமி (சாதி மறுப்பு மணம் புரிந்தோர்) மகன் சோ.வி. ஆதவன், முதலாம் ஆண்டு பிறந்த நாள் - பல்லாவரம் பெரியார் இல்லத்தில் கழகக் குடும்ப விழாவாக சிறப்புடன் 26.8.2009 அன்று மாலை நடைபெற்றது. பெரியார் இல்லத்தின் முதல் தள விரிவாக்கத்தை கழகத் துணைத்தலைவர் ஆனூர் செகதீசன் திறந்து வைத்தார். பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் பிறந்த நாள் வாழ்த்துரை வழங்கி உரையாற்றினார். கழக ஏட்டுக்கு ரூ.1000 நன்கொடை வழங்கப்பட்டது. கொட்டும் மழையிலும் தோழர்கள் திரண்டு வந்திருந்தனர்.

# 'வன்னி வதை முகாம் தமிழர் விடுதலை இயக்கம்'

'வன்னி வதை முகாம் தமிழர் விடுதலை இயக்கம்' என்ற மனித உரிமைகளுக்கான அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. ஈழத்தில் 3 லட்சம் தமிழர்கள் முகாமுக்குள் வதைபடுவதோடு விடுதலைப் புலிகள் என்று சந்தேகிக்கப்படுவோரை சித்திர வதை செய்து சுட்டுக் கொல்லும் செய்திகள் வந்து கொண்டிருக் கின்றன. உடடினயாக தமிழர்களைக் காப்பாற்ற இந்தப் பிரச்சினைக்காக சர்வதேச மட்டத்தில் அழுத்தம் தரும் நடவடிக்கைகளை மேற்கொள் வதற்கான ஆலோசனைக் கூட்டம் ஆகஸ்டு 31 அன்று மாலை 4 மணி யளவில் சென்னையில் கூடியது.

'மக்கள் கண்காணிப்பகம்' ஏற்பாடு செய்திருந்த இக்கூட்டத்தில் பழ. நெடுமாறன் (தமிழர் தேசிய இயக்கம்), விடுதலை இராசேந்திரன் (பெரியார் திராவிடர் கழகம்), தியாகு (தமிழ்த் தேச விடுதலை இயக்கம்), மணியரசன் (த.தே. பொ.க.), ஹென்றி டிபேன் (மக்கள் கண் காணிப்பகம்), பேராசிரியர் கல்விமணி (பழங்குடி இருளர் இயக்கம்), சூரிய தீபன் (படைப்பாளிகள் இயக்கம்), வழக்கறிஞர் பிரிட்டோ ('வான்முகில்' அமைப்பு) மற்றும் அமலதாஸ், தேவ சகாயம், அய்.ஏ.எஸ்., பத்திரிகையாளர் அய்யநாதன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

வதைபடும் தமிழர்களை உடனடி யாக விடுதலை செய்வதற்கான முயற்சி கள் பற்றி ஆலோசிக்கப்பட்டது. சர்வ தேச மனித உரிமை அமைப்புகளின் கவனத்துக்கு இப்பிரச்சினைகளை கொண்டு செல்வது எனவும், தமிழகம் தழுவிய பிரச்சார இயக்கங்களின் மூலம் உண்மையான மக்கள் கருத்தை உருவாக்குவது எனவும் முடிவு செய்யப் பட்டது.

## 'விடுதலை'யே இதுவா, உன் கதி?

ஆகஸ்ட் 15 இந்தியாவுக்கு சுதந்திரம் என்று அறிவித்த போது, அது 'துக்க நாள்' என்று சிம்மமென முழங்கியது 'விடுதலை'.

பெரியார் உயிருடன் இருக்கும் வரை 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற முழக்கத்தை முகப்பில் கம்பீர மாக ஏந்தி வந்தது 'விடுதலை'.

ஈரோட்டில் தி.க. நடத்திய 'விடுதலை' பவளவிழா மேடையில் 'விடுதலை'க்காக இந்தியாவின் அஞ்சல்துறை-அஞ்சல் உறை ஒன்றை வெளியிடும் நிகழ்ச்சி நடந்த போது, 'தேசிய கீதம்' இசைக்க எல்லோரும் எழுந்து நின்று மரியாதை செலுத்தினார் களாம்.

வீரம் செறிந்த 'விடுதலை' யே! உன்னையே இந்திய தேசியத்துக்கு அடிமையாக்கி விட்டார்களே! அய்யகோ!

### சிங்கள கைக்கூலி பத்திரிகையாளர் நீக்கம்

சென்னையில் இலங்கை தூதரக அதிகாரியாக இருந்த அம்சா என்பவர், தமிழக பத்திரிகையாளர்கள் பலரை கவனிக்க வேண்டிய வழிகளில் கவனித்து, தமது வலைக்குள் சிக்க வைத்திருந்தார். அவர்களில் முதன்மையானவர் 'ஜூனியர் விகடன்' வார ஏட்டில் இணை ஆசிரியராக இருந்த விகாஷ் என்பவர், விடுதலைப் புலிகளுக்கு எதிராகவும், சிங்கள ராணுவத்தை நியாயப்படுத்தியும் செய்திகளை உருவாக்கி வெளியிடுவதே இவர்களின் தொழில்.

ஈழத்து கருணாவின் துரோக பேட்டியை வெளியிடுவதில் இவர்கள் முனைப்புக் காட்டினார்கள். இப்போது 'ஜூனியர் விகடன்' வார ஏடு - கையூட்டு பெற்றதற்காக அந்த நபரை தமது நிறுவனத்திலிருந்து நீக்கம் செய்துள்ளது. நக்கீரன், தினத்தந்தி, மாலை முரசு, ராணி போன்ற வெகு சில ஏடுகளே தன்மானத்துடன் அம்சாக்கள் பக்கம்தலைவைத்துப் பாராமல் புறக்கணித்தன என்பதைக் குறிப்பிட வேண்டும்.

### கரூரில் கழகம் நடத்திய 'விழிப்புணர்வு' பேரணி

முள்வேலிக்குள் முடக்கப்பட்ட 3 லட்சம் ஈழத் தமிழர்களையும் விடுவித்து அவர்களின் வாழ்விடங்களுக்கு திருப்பி அனுப்பக் கோரி, கரூரில் பெரியார் திராவிடர் கழகம் சார்பில் விழிப்புணர்வு பிரச்சாரம் புதிய முறையில் நடத்தப்பட்டது. மக்களை பிரச்சினையின் பக்கம் ஈர்க்க மோட்டார் சைக்கிளில் தோழர்கள் அணிவகுத்து கோரிக்கைகளை எழுப்பிச் சென்றனர். தூத்துக்குடி பால் அறிவழகன், கண்களை கட்டிக் கொண்டு மோட்டார் சைக்கிளில் வந்தார். மாவட்ட பொறுப்பாளர்கள் கு. ராசா, கு.கி. தனபால், க. முருகேசன் உள்ளிட்ட தோழர்கள் பலரும் பங்கேற்றனர்.

# 'அம்மன் தேர்' தீண்டாமைக்கு எதிராக கழகம் ஆர்ப்பாட்டம்



சங்கராபுரம் அருகே உள்ளது பூட்டை கிராமம். இங்குள்ள மாரியம்மன் கோயில் இந்து அறநிலையத் துறையின் கட்டுப் பாட்டில் உள்ளது. ஆனாலும் இந்தக் கோயிலின் தேர் ஊர்வலத்தில் தீண்டாமை பின்பற்றப் பட்டு வருகிறது. பூட்டையில் தலித் மக்கள் வாழும் பகுதிக்கு தேர் ஊர்வலம் வருவதில்லை. சாதி ஆதிக்கவாதிகள் இப்படி தடை போட்டு, தலித் மக்கள் மீது தீண்டாமையை திணித்து வந்தனர்.

இந்தத் தீண்டாமைக்கு எதிராக கடவுள் மத நம்பிக்கையற்ற பெரியார் திராவிர் கழகம் களத்தில் இறங்கியது. மாரியம்மனை தலித் பகுதிக்கு அழைத்து வரவேண்டும் என்று சங்கராபுரத்தில் கடந்த ஆகஸ்டு 8 ஆம் தேதி பகல் 12 மணியளவில் விழுப்புரம் மாவட்ட பெரியார் திராவிடர் கழகம் ஆர்ப்பாட்டம் நடத்தியது. தோழர் ச.கா. இளையராசா தலைமையில் கழகப் பொறுப்பாளர்கள் கி.சாமிதுரை, அமிர்தலட்சம், கண்ணன், ஆசைத்தம்பி தமிழ்த்தாசதுரை, சாக்ரடீசு, செம்பகவல்லி, அய்யனார் உள்ளிட்ட பலர் பேசினர். ஆர்ப்பாட்டத்தில் பூட்டை கிராம மக்கள் ஏராளமாகக் கலந்து கொண்டனர். தீண்டாமையைக் கண்டித்து கண்டன முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து தேர்த் திருவிழா நடத்தலுக்கு காவல்துறை அனுமதி மறுத்துள்ளது என்று கழகத் தோழர் அய்யனார் தெரிவிக்கிறார்.

# 10 ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் வாடுவோரை விடுதலை செய்யக் கோரி ஆர்ப்பாட்டம்

20.8.09 அன்று மாலை 4 மணிக்கு கோவை தமிழ்நாடு உணவகம் அருகில் கோவையில், 10 ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் வாடும் தண்டனை சிறைவாசிகளை அண்ணா நூற்றாண்டில் விடுதலை செய்யக் கோரி கழக சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு பொதுச்செயலாளர் கு. இராமகிருட்டிணன் தலைமை தாங்கினார். வழக்கறிஞர் ப.பா. மோகன், எம்.ஒய். அப்பாஸ் (மாவட்ட செயலாளர், பாப்புலர் ப்ரண்ட்ஸ் ஆப் இந்தியா), ஆர்.எம். மற்றும் த.மு.மு.க. பொறுப்பாளர்கள் சாகுல் அமீது , பல் நாசர் (மாவட்ட தலைவர், இந்திய தவ்ஹீத் ஜமாத்), பொன் சந்திரன் (பியுசி.எல்.), நீலவேந்தன் (ஆதித் தமிழர் பேரவை), கோவை இரவிக்குமார் (ஆதித் தமிழர் விடுதலை முன்னணி), வழக்கறிஞர் நிக்கோலசு ஆகியோர் பங்கேற்று பேசினர். ஆர்ப்பாட்டத்தில் 200க்கும் அதிகமான தோழர்கள் கலந்து கொண்டனர்.




# தோழர் மோகனாம்பாள் நினைவேந்தல்



சீரிய கழகச் செயல்வீரர் சேத்துப்பட்டு சிகாமணியின் துணைவியார் மறைந்த மோகனாம்பாள் நினைவேந்தல் நிகழ்ச்சி 7.8.2009 அன்று மாலை 6.30 மணியளவில், சென்னை-101, அண்ணா நகர் மேற்கு விரிவாக்கம், தமிழ்நாடு அரசு அலுவலர்கள் குடியிருப்பு வளாகத்தில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் சேத்துப்பட்டு ச. தனசேகர் தலைமையில் நடைபெற்றது.

தோழர் மோகனாம்பாள் படத்தை திறந்து வைத்துப் பேசிய இரா. கிருத்துதாசு காந்தி, இ.ஆ.ப. அவர்கள், 'சடங்குகள் சம்பிரதாயங்களைப் பின்பற்றுவதால் துன்பம் தான் விளையும்' என்று விளக்கிப் பேசினார்.

வழக்கறிஞர் சு. குமாரதேவன், மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சியைச் சார்ந்த இரா. பச்சைமலை, எழுத்தாளர் அ. மார்க்ஸ், கழக துணைத் தலைவர் ஆனூர் செகதீசன், கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் இரங்கல் உரையில் பகுத்தறிவு கருத்துகளை விளக்கிப் பேசினர்.

கூட்டுறவு அமைச்சரின் நேர்முக உதவியாளர் செந்தமிழ்ச்செல்வன், தமிழ்நாடு தலைமைச் செயலகச் சங்கத்தின் செயலாளர் மு. சுந்தரராசன், தலைமைச் செயலகம் எரிசக்தித் துறை உதவிப் பிரிவு அலுவலர் ராஜேஸ்வரி, உள்துறை உதவிப் பிரிவு அலுவலர் கு. செல்வகணபதி, தலைமைச் செயலகம், சிறுதொழில் துறை உதவிப் பிரிவு அலுவலர் செய காமராஜ் ஆகியோரும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றினர். மோகனாம்பாள் மகள் சி.தமிழரசி தனது நன்றியுரையில், 'நானும் என் தாய் தந்தை வழியில் பெரியார் கொள்கை வழிப்பட்ட வாழ்க்கைப் பயணத்தைத் தொடருவேன்' என்று உறுதி கூறினார்.

## கணியூரில் கழகப் பொதுக் கூட்டம்

உடுமலை அருகே உள்ள கணியூரில் பெரியார் திராவிடர் கழகப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. கு.மயில்சாமி, மா. மோகன் முன்னிலையில் செ.தமிழ்ச்செல்வன் தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் மாவட்ட செயலாளர் கா. கருமலையப்பன், ஆட்சிக்குழு உறுப்பினர் இரா. மனோகரன் உரைக்குப் பின் கழகப் பொதுச்செயலாளர் கு.இராமகிருட்டிணன், ம.தி.மு.க. மாநில வெளியீட்டுச் செயலாளர் ஆ.வந்தியதேவன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மடத்துக்குளம் ஒன்றிய பொருளாளர் நா.ப. கதிரவன், காரத்தொழுவு மயில்சாமி, ஜோத்தம்பட்டி மோகன், கணியூர் தமிழ்ச்செல்வன் ஆகியோர் சிறப்பாகச் செய்திருந்தனர்.

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

## மகனை வாரிசாக்குகிறார் வீரமணி

## பெரியார் கொள்கைக்கும், ஈழத் தமிழருக்கும் துரோகம்

# விலகி வந்த தி.க. தோழர்கள் சரமாரி குற்றச்சாட்டு

*திராவிடர் கழகத்திலிருந்து விலகுவது ஏன்? என்பதை விளக்கி, கோவை தி.க. தோழர்கள் சார்பில் சொக்கம்புதூர் ந. தண்டபாணி விடுத்துள்ள அறிக்கை!*

1. தந்தை பெரியாரின் கொள்கைகளை மாறிவரும் சமூகச் சூழலுக்கேற்ப பரப்பவும், வெகு மக்களிடம் கொண்டு செல்லவும் முனையாமல், திராவிடர் கழகத் தலைமை முற்றும் முழுதாய் பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக நிர்வாகத் தலைமையாக மாறிவிட்டதோடு, அந்நிறுவனங்களின் முழுநேர (லிமிடெட் கம்பெனி) நிர்வாகியாகவும், அதன் வழியாக வரும் வருமானத்திற்கு பங்கம் வராமல் காக்கவுமே செயல்படுகிறது. கி.வீரமணி கல்லூரியாய் இருந்ததை பல்கலைக்கழகமாக உயர்த்துவதற்காகத்தான் கவனம் செலுத்துகிறார். அதற்காகவே ஜெயலலிதாவையும், கலைஞரையும் மாறி மாறி ஆதரித்து, ஆளும் கட்சிகளின் நடைபாவாடையாக திராவிடர் கழகத்தை மாற்றிவிட்டார்.
2. தந்தை பெரியாரே, தனக்கு வாரிசு, 'தனது எழுத்தும் பேச்சுமான' கொள்கையே என தெளிவுபடுத்தியதை மறைத்து, பெரியாரின் குடிஅரசு இதழின் எழுத்துக்களை இதுவரை கி.வீரமணி தொகுத்து வெளியிடவில்லை. "பெரியார் திராவிடர் கழகம் வெளியிட முன் வந்த போது அதற்கு எதிராய் பெரியாரின் எழுத்துக்கு தானே, வாரிசு என்று நீதிமன்றம் சென்று தடை பெற்றது. கி.வீரமணி பெரியாருக்கு செய்யும் துரோகத்தையே வெளிச்சம் போட்டு காட்டுகிறது.
3. பெரியாரின் எழுத்துக்கும் பேச்சுக்கும் தானே வாரிசு எனச் சொல்லும் வீரமணி, இயக்கத்திற்கு உண்மையாய் உழைத்த பலரையும் வெளியேற்றி விட்டு, கடந்த மூன்றாண்டுகளுக்கு முன்பு வரை இயக்கத்திற்குள் வராத தனது மகன் வீ. அன்பு ராஜை, இயக்கத்தின் தலைமைப் பொறுப்புக்கு கொண்டு வருவதில் தீவிரம் காட்டி வருகிறார். பெரியார் நாட்டிற்களித்த சொத்தை தனது வீட்டுச் சொத்தாக மாற்றவும் ஆன பணிகள் வேகமாய் நடைபெற்று வருகின்றன.
4. பெரியாரின் கொள்கை பரப்புதலை விட்டு விலகி நீண்டகாலமாய் பெரியாரின் சொத்தை பாதுகாக்கிறேன் என்ற பெயரால், மற்ற அரசியல் கட்சிகளை போலவே திராவிடர் கழகத் தலைமை செயல்பட்டு வருகிறது. 'சமூக நீதி'க்காகவும், மனித சமத்துவத்திற்காகவும் மானிட விடுதலைக்காகவும் பெரியாரால் உருவாக்கப்பட்ட திராவிடர் கழகத் தலைமையிலும், அதன் அறக்கட்டளை நிர்வாகத் தலைமையிலும், தனது மகனை வாரிசாக்க முன்னிறுத்தி செயல்பட்டு வருகிறார் கி.வீரமணி.
5. எல்லாவற்றிற்கும் மேலாக தமிழர் தலைவர் என தமக்கு சூட்டிக் கொண்ட பட்டத்திற்கு கொஞ்சமும் சம்பந்தம் இல்லாமல், ஈழத்தில் தமிழ் இனம் படுகொலை செய்யப்பட முழு முதற் காரணமாய் இருந்த இந்திய காங்கிரஸ் அரசு மீண்டும் ஆட்சிக்கு வர கடந்த பாராளுமன்ற தேர்தலில் காங்கிரசுக்கு ஆதரவளித்தார்.

   பாராளுமன்ற தேர்தல் முடிவுகள் வந்து கொண்டிருந்த நேரத்தில், ஈழத்தில் கொடூரமான இனக் கொலை நடந்து கொண்டிருந்த போது தமிழர் தலைவர் என சொல்லிக் கொள்ளும் கி.வீரமணி, 'கலைஞர் டி.வி.'யில் காங்கிரஸ் தி.மு.க. தேர்தல் வெற்றியை கொண்டாடிக் கொண்டு உற்சாகத்தில் மிதந்தபடி இருந்தார்.
6. இந்தியாவின் முழு பின்னணியோடு ஈழத்தில் சிங்கள இனவெறியரசு, போர் தொடங்கிய நாள் முதல் தமிழகத்தில் ஈழத் தமிழருக்கு ஆதரவான போராட்டம் தன்னை தாண்டி சென்றுவிடக் கூடாதென மயிலை மாங்கொல்லை பொதுக்கூட்டம் தொடங்கி, "கலைஞர் திட்டமிட்டு நடத்திய தமிழர் வரலாற்றில் அழியாத துரோக நாடகத்திற்கு முற்றும் முழுதாய் துணை நின்றதோடு, தமிழகத்தில் ஈழத் தமிழருக்கு ஆதரவான சக்திகளின் போராட்டம் வெகுமக்கள் போராட்டமாக மாறாமல், "கலைஞர் ஈழ மக்களை காப்பார் காப்பார்" என நம்ப வைத்து நாடகமாடி 50 ஆயிரத்துக்கும் மேலான தமிழர் படுகொலைக்கு துணை போன துரோகத் தளபதிதான் இந்த தமிழர் தலைவர்.

எனவேதான் தி.க. தலைமை தமிழின துரோக தலைமை மனித நேய துரோக தலைமை என தெரிந்து தெளிந்து அதனிலிருந்து விலகி, பெரியாரின் கொள்கைகளை காக்கவும், பரப்பவும், தமிழினத்தை காக்கவும் உண்மையாய் பாடுபடும், போராடும் தலைமையை ஏற்று பெரியார் திராவிடர் கழகத்தில் இணைகிறோம் - என்று அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

---


*(முதல் பக்கத் தொடர்ச்சி)*

நிறுத்திவிட்டு, அர்ச்சகர் பயிற்சியில் சேர்ந்தார்.

"இந்த பயிற்சியில் சேர்ந்ததால் எனக்கு ஏற்கனவே இரண்டாண்டு வீணாகிவிட்டது. இப்போது மீண்டும் பி.காம். பட்டப் படிப்பையே தொடர விரும்புகிறேன். என்னுடைய ஏழைக் குடும்பத்தைக் காப்பாற்ற நான் ஏதாவது ஒரு வேலைக்குப் போக வேண்டும்" என்று கூறுகிறார். இராமசாமி திருவண்ணாமலைக்கு அருகே உள்ள பெலகூர் எனும் கிராமத்தைச் சார்ந்தவர்.

இவருடன் படித்த இவரின் நண்பரான பச்சையப்பனின் கதை (27) இன்னும் பரிதாபமானது. இவரது கிராமத்துக்கு அருகே உள்ள தனியார் கோயில் நிர்வாகங்கள். இவரை அர்ச்சகராக்க மறுத்துவிட்டன. "பார்ப்பனரல்லாதார் அர்ச்சகரா வது மிக மிகக் கடினமானது என்பதை நான் உணர்ந்து கொண்டேன்" என்று கூறும் அவர், மீண்டும், விவசாய வேலைக்கு திரும்பிவிட்டார். பயிற்சி பெற்ற 207 பேரில் 3 பேர் மட்டும் பார்ப்பனர்கள். அவர்களுக்கு மட்டும் அரசு சான்றிதழ் இல்லாமலே அர்ச்சகர் வேலை கிடைத்துவிட்டது என்று இந்த மாணவர்கள் கூறினர்.

மயிலை கபாலீசுவரன் கோயிலில் - நான்காவது தலைமுறையாக அர்ச்சகராக இருக்கும் சாம்பமூர்த்தி (59), ஏழாவது படிக்கும் தனது மகன் அபிஷேக் சாமிநாதன், 'சார்ட்டட் அக்கவுண்ட்' படிக்க விரும்புவதாகவும், அர்ச்சகர் வேலையில் தமக்கு உதவ அவன் விரும்பவில்லை என்றும் கூறுகிறார். கடந்த 150 ஆண்டு காலமாக தமது குடும்பம் பாரம்பர்யமாக கபாலீசுவரன் கோயிலில் அர்ச்சகராக இருந்து வருகிறது என்றும் அவர் கூறினார்.



**விரட்டப்படும் பச்சையப்பன்**

மற்றொரு பிரபல சென்னை கோயிலில் அர்ச்சகராக இருக்கும் அருணாச்சலமும் தனது மகன், அர்ச்சகர் பதவிக்கு வர விரும்பவில்லை என்கிறார். இவரது மகன் அமெரிக்காவில் கணினி மென் பொருள் துறையில் உயர் அதிகாரியாக அய்ந்து ஆண்டு காலம் பதவியில் இருந்துவிட்டு, இப்போது சென்னை அய்.அய்.டி.யில் (இந்திய தொழில்நுட்ப நிறுவனம்) கவுரவ பேராசிரியராக வேலை செய்கிறாராம். இது தவிர ஏழைகள் முன்னேற்றத்துக்கு சேவை செய்கிறாராம். 'இந்த வேலையே எனக்கு திருப்தி தருகிறது; அர்ச்சகர் வேலை வேண்டாம்' என்று கூறுகிறாராம்.

பாலகிருஷ்ண சாமிகள் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) என்ற அர்ச்சகர், தனது மகன் குமார், ஆசிரியர் வேலைக்குப் போக முடிவு செய்து விட்டதாக கூறுகிறார். அர்ச்சகர் வேலையில் போதுமான வருமானம் வருவது இல்லை என்றும் அவர் கூறினார். இத் தகவல்களை 'டெக்கான் கிரானிக்கல்' நாளேட்டின் கட்டுரை வெளியிட்டுள்ளது.

அர்ச்சகர் தொழில் பரம்பரை அடிப்படையில் தரப்பட வேண்டும்



**மீண்டும் விவசாய வேலைக்குத் திரும்பிய இராமசாமி**

என்று உச்சநீதிமன்றம் வரை போகும் பார்ப்பனர்கள், தங்களது பிள்ளைகள் மட்டும் பரம்பரைத் தொழிலை விட்டுவிட்டு, பேராசிரியர்களாகவும், சார்ட்டட் அக்கவுண்டர் களாகவும் ஆக விரும்புகிறார்கள் என்பதை கவனிக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் அறநிலையத் துறை கட்டுப் பாட்டிலுள்ள கோயில்களில் கூட பயிற்சியின்போது மாணவர்கள், கோயில் கர்ப்பகிரகத்துக்குள் அனுமதி மறுக்கப்பட்டதை தி.மு.க. ஆட்சி தட்டிக் கேட்க வில்லை.


பயிற்சி முடித்த மாணவர்களுக்கு ஓராண்டு காலமாக சான்றிதழ்கள் வழங்கப்படவில்லை என்பதில்கூட இந்த அரசு கவனம் செலுத்தவில்லை. இந்த பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள கோயில்களில் அர்ச்சகர் பதவிகளை தர மறுக்கும் சாதி ஆதிக்கவாதிகளின் தலையீட்டை தடுத்து, அவர்களுக்கு பதவிகளைப் பெற்றுத் தரும் முயற்சிகளிலும் இந்த ஆட்சி ஈடுபடவில்லை. உச்சநீதிமன்றம் விதித்த தடையை நீக்கும் முயற்சிகள் ஏதும், தமிழக அரசு எடுக்காத நிலையில் 'கலைஞர் சாதுர்யமாக காய் நகர்த்துவதாக' புகழாரம் சூட்டிய வீரமணிகள், பெரியார் நினைவிடத்தில் இதற்காக கலைஞருக்கு கல் வெட்டு வைத்து பெருமைப்படுத்தியதோடு தங்கள் கடமையை முடித்துக் கொண்டு விட்டார்கள். ●

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. ✆ 9840940400

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 4th September 2009

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2040 செப்டம்பர் 10, 2009 புரட்சி 8 முழக்கம் 35 விலை: ரூ.2.50

## நான் பலிகடா ஆகிறேன்

“இருந்தால் என் வைப்பாட்டி மகனாக இரு; இழி மகனாக இரு; இல்லாவிட்டால் நாட்டை விட்டு, இந்து மதத்தை விட்டு வெளியேறு அல்லது ஜெயிலில் இரு” என்றால், “இது உங்கப்பன் உங்க அம்மா சம்பாதித்த நாடா? அவர்கள் பிறந்த நாடா? என் நாட்டில் உனக்கு என்ன வேலை? வெளியேறு, வெளியேறு, மான வெட்கங் கெட்டவனே, வெளியேறு” என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது.

சமுத்திரம் எனக்கு முழங்கால் அளவு தண்ணீர்தான்.

அட முட்டாள்களா! உங்களுக்கும் சேர்த்துத் தானே பாடுபடுகிறேன்.

விஷமப் பிரச்சாரம் செய்யும் உங்களில் ஒருவன் வாயில்கூட ‘நான் ஏன் சூத்திரன்’ என்பது வருவதில்லையே. டில்லியோடு எழவு எடுப்பதற்கு முன் உங்களோடு எழவு எடுக்க வேண்டியிருக்கிறதே!

தமிழன் யோக்கியதை எனக்குத் தெரியும். 75 வருடமாய் தெரியும். தமிழனுக்கு ஆக நான் பலிகடா ஆகிறேன்.

மானமுள்ளவர்கள் வாருங்கள். முடியாத யோக்கியர்கள் யோக்கியர்களுக்குப் பிறந்தவர்கள் வாலை அடக்கிக் கொண்டு யோக்கியமாய் வாழுங்கள்.


– தந்தை பெரியார்

‘விடுதலை’ 15.11.1973

(இறப்பதற்கு சுமார் ஒன்றரை மாதங் களுக்கு முன் எழுதியது)

# எரி நெருப்பை பொட்டலம் கட்டாதீர்!

*‘தி சண்டே இந்தியன்’ வார ஏடு ‘யாருக்கு சொந்தம் பெரியார்?’ என்ற அட்டைப்பட முதன்மைச் செய்தியை (ஆக.26) வெளியிட்டுள்ளது. அதில் தமிழ் இதழாசிரியர் அசோகன், பாமரன், பிரபஞ்சன் ஆகியோரின் சிறப்புக் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. கட்டுரைகள் தொடர்ந்து பெரியார் முழக்கத்தில் வெளியிடப்படும். எழுத்தாளர் பிரபஞ்சன் கட்டுரை இங்கே வெளியிடப்படுகிறது.*



பெரியார், பெரியாரியத்தை அவருடைய தந்தையின் மண்டிக் கடையிலிருந்து தொடங்கினார். அப்பா, வீட்டில் பிராமண போஜனம் செய்வித்து, நடமாடும் தேவர்களை மகிழ்வித்துக் கொண்டிருந்தபோது, அந்த அக்கப்போர்ச் செலவைக் கடையில் அமர்ந்தபடி விமர்சித்தார் அவர். பெரியாரின் கருத்துக்கள், மொழியும் மொழிப் பரவல் கொண்ட பூகோள வரம்புக்குள்ளும், அதாவது தமிழ், தமிழினம் என்ற எல்லைக்குள்ளும்கூட அடங்கிக் கொள்ளாதவை. மாறாக, எங்கெல்லாம் மனிதர்களுக்குள் உயர்வு தாழ்வு பேதம் நிலவுகிறதோ, நிறத்தாலும் பிறப்பாலும், வரலாற்றாலும், ஒடுக்கப்பட்டும் தாழ்த்தப்பட்டும் மனிதகுலம் நிலைபெற்றிருக்கிறதோ அங்கெல்லாம் எடுத்துச் செல்லத்தக்க கருத்துக்கள். அவர் உலக மனிதராக, உலகப் பெருஞ்சொத்தாக, உலகக் கருத்தாளராக விளங்குகிறார். பெரியாரியத்தை மலையாளத்திலும், ஏனைய இந்திய மாநிலங்களுக்கும் கறுப்பர் இனச் சூழ்நிலைகளுக்குள்ளும் கொண்டு செல்லலாம். அவர் கருத்துக்கள் மனிதகுலம் அத்தனைக்கும் பொது. இன்னும் சொன்னால், பெரியார் கருத்துக்கள், படைப்புகள் பெரியாருக்கே சொந்தமானது கூட இல்லை. இதை அவரே ஒப்புக் கொள்வார்.

கடவுள் மனித குலத்தை உருவாக்கினார் என்கிற புராணத்தைப் புதைகுழிக்கு அனுப்பிய டார்வின், உழைக்கும் வர்க்கத்துக்கு, இழக்க ஒன்றுமற்ற மனித குலத்துக்குப் பொன்னுலகைக் காட்டித் தந்த மார்க்ஸ், ஏங்கெல்ஸ், மனித மனசுக்குள் மறைந்திருக்கும் இன்னொரு மனிதரைக் கண்டு பிடித்துச் சொன்ன பிராய்ட் மற்றும் யுங் போன்றவர்களின் படைப்புகள் அவர்களின் சொத்துக்களைப் பாதுகாத்த மானேஜர்களுக்கு மட்டுமே சொந்தம் என்றால், அது எவ்வளவு பெரிய நகைச்சுவையோ, அப்படியேதான் நம் மண்ணுக்குப் பெரியாரின் படைப்புகள்.

வளமான செழுங்குடிச் செல்வர் இராமசாமி, ஒரு மைனரைப் போல் தன் இளமையில் சுற்றித் திரிந்த அந்த இளைஞர், சமூக வாழ்க்கைக்குள் வந்து தன் சொத்தக்களையும், சற்றேறக்குறைய ஒரு கருமி போல சொத்து சேர்த்து ஓர் இயக்கத்தை உருவாக்கி, மூத்திரவாளியைச் சுமந்து கொண்டு பிரச்சாரம் செய்து, தன்னையும் தன் அறுபது ஆண்டுகால அறிவுச் சொத்தையும் கொடுத்துச் சென்றது, தன் கருத்துப் பரவலுக்கும் பரப்புக்கும்தான் இருக்க முடியுமே தவிர வேறு எதற்காக இருக்க முடியும்? பெரியார் படைப்புகளைத் தானே தந்து சென்றார். பூட்டுகளையும் சாவிகளையுமா தந்து சென்றார்?

1967க்குப் பிறகு திராவிட இயக்கங்கள்தானே ஆட்சியில் இருந்தன. அல்லது அப்படிச் சொல்லிக் கொண்டவைதானே அதிகாரத்தில் இருந்தன. பெரியாரின் வாரிசுகளாகத் தம்மை இப்போது முன் நிறுத்திக் கொள்பவர்கள், தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. இரண்டுக்குமே ஆதரவளிக்கத்தானே செய்தார்கள். அந்த அரசுகள் துணை கொண்டு, சாமி சிதம்பரம் விட்ட இடத்திலிருந்து தொடங்கிப் பெரியாரின் வரலாற்றை முழுமை செய்து மிகக் குறைந்த விலையில் வெளியிட்டுப் பரவச் செய்திருந்தால், சகல இந்திய மொழிகளிலும் வெளியிட்டு, ஆங்கிலத்திலும் பிரஞ்சு மொழியிலும் கொண்டு சென்றிருந்தால் பெரியார் திராவிடர் கழகம் செய்வதற்கு வேலையே இருந்திருக்காதே. பெரியார் இறந்து சுமார் முப்பத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகும், அதைச் செய்யாதவர்கள் செய்ய முன் வருபவர்களையும் மறிக்க நினைப்பது பெரியாருக்குச் செய்யும் தொண்டாகக் கருத முடியுமா? வெளியேறியவர்களாலும், வெளியேற்றப்பட்டவர்களாலுமே எஞ்சிய இன வரலாறுகள் எழுதப்படுகின்றன என்பதே உலக வரலாறு.

கல்கி அவர்களின் படைப்புகளை நாட்டுடைமை ஆக்க, அவர் மகன் ராஜேந்திரன் சம்மதிக்கவில்லை என்கிறார் தமிழக முதல்வர். கல்கி ராஜேந்திரனும், காந்தி கண்ணதாசனும் அவர்களின் தந்தையர்களின் படைப்புகளை நாட்டுடைமை ஆக்கச் சம்மதிக்காதது, அவர்கள் சொந்த, குடும்பப் பிரச்சினை மற்றும் அதற்கு அவர்களிடம் நியாயமான காரணங்கள் இருக்கக் கூடும். தந்தையரின் சொத்துக்கள் பிள்ளைகளுக்கு என்பது அவர்களுக்குச் சரி. பெரியாருக்கு அது பொருந்துமா என்றால் நூறு சதம் பொருந்தாது. பெரியார் தமிழ்ச் சமுதாயத்தின் தமிழர்களின் ஞானத் தந்தை. அவர் ஒருபோதும் குடும்பத் தந்தையாக, பிள்ளைகளின் தந்தையாக இருந்தது இல்லை. தமிழக மண்ணில் அவர்நிலை பெற்றதால், பாடுபட்டதால் தமிழர்கள் அனைவருமே அவர் உடைமைக்கு உரியவர்களாகிறார்கள். பெரியார் எவ்வாறு சமூகச் சொத்தோ அங்ஙனமே அவர் படைப்புகளும் சமூகச் சொத்தே ஆகும்.

சகல பார்ப்பனீய ஒடுக்குமுறைகளுக்கும் எதிராக, சாதி இழிவுகளுக்கு எதிராக, சமநீதி மானுடத்துக்கு ஆதரவாக, உண்மை ஜனநாயகம் பேசும் கருத்தாயுதர்கள், இந்தியாவுக்குள் இருவரே உளர். ஒருவர் அம்பேத்கர், மற்றவர் பெரியார். இவர்களது புத்தகப் பக்கங்களிலேதான் ஆதிக்கக் கோட்டைச் சுவர்களைத் தகர்க்கும் மருந்துகள் இருக்கின்றன. இவற்றை மக்களிடம் கொண்டு சேர்ப்பதே நம் முதல் பணியாக இருக்க முடியும். பெரியார் ஒரு எரி நெருப்பு. அதைப் பொட்டலம் கட்ட முடியாது.

# கிராமப் பிரச்சாரம் : திருப்பூர் மாவட்டக் கழகம் முடிவு


திருப்பூர் மாவட்டக் கழக முதல் கலந்துரையாடல் கூட்டம் 30.08.09 ஞாயிறு மாலை 4 மணிக்கு திருப்பூர் அன்னபூர்ணா ஹோட்டல் அரங்கத் தில் நடந்தது. கழகப் பொதுச் செய லாளர் கு.இராமகிருட்டிணன் தலைமையில் தலைமை செயற்குழு உறுப்பினர் இல. அங்ககுமார் முன்னிலையில் நடந்த கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் கா.கருமலை யப்பன் வரவேற்புரை கூறிட, திருப்பூர், பல்லடம், உடுமலைப்பேட்டை, பொங்கலூர் காங்கேயம் தோழர்கள் இயக்கத்தின் செயல்பாடுகள் குறித்து கருத்து கூறினர். மாவட்டத் தலைவர் சு. துரைசாமி, தோழர்களின் கருத்துகளுக்கேற்ப மாவட்டக் கழக செயற்பாடுகள் பற்றி பேசினார். கூட்டத்தில் முடிவு செய்யப்பட்ட தீர்மானங்கள்:

தந்தை பெரியாரின் பிறந்த நாள் கொடி யேற்று விழா நிகழ்ச்சியை மாவட்டம் முழுவதும் சிறப்பாக நடத்துவதெனவும்,

தந்தை பெரியாரின் பிறந்த நாளை முன்னிட்டு மாவட்டம் முழுவதும் கிராமப்புற பிரச்சாரத்தை தொடர்ச்சி யாக நடத்துவதெனவும்,

திருப்பூரில் மிகப் பரவலாக ஆதிக்கம் செலுத்தி, தமிழர்களை இரண்டாம் தர குடிமக்களாக நடத்தும் வடநாட்டினரை எதிர்த்து வடவர் ஆதிக்க எதிர்ப்பு பிரச் சாரத்தை முழு

4 ஆம் பக்கம்



*சாதிச் சிறையிலும் சமயச் சிறையிலும்*
*ஆதியில் இருந்தே அடைபட்ட தமிழனின்*
*திறக்காத விழியைத் திறக்கச் செய்ததும்*
*உறைக்காத மனதில் உறைக்கச் செய்ததும்*
*சிந்தையில் புரட்சிச் செந்தீ ஏந்திய*
*தந்தை பெரியார் தடக்கைகள் அல்லவோ!*

*– புலவர் புலமைப் பித்தன்*

தலையங்கம்

## பார்ப்பான் பூணூலும் தமிழன் உயிரும்

நேபாள நாட்டிலுள்ள பிரபலமான பசுபதி நாதன் கோயிலுக்கு நேபாளிகளே அர்ச்சகர்களாக வேண்டும் என்று அங்கே ஆட்சியிலுள்ள நேபாள அரசு, கடந்த டிசம்பர் மாதம் ஒரு நல்ல முடிவை எடுத்தது. அந்தக் கோயிலுக்கு இதுவரை இந்தியாவைச் சார்ந்த பார்ப்பனர்களே சம்பிரதாயம் என்ற பெயரில் அர்ச்சகர்களாக இருந்து வந்தனர். 'இந்து' நாடாக நேபாளம் இருந்தபோது, அங்கே பார்ப்பனியமே ஆட்சிக் கொள்கையாக இருந்தது. மன்னர் ஆட்சி ஒழிக்கப்பட்டு மாவோயிஸ்டுகளின் மக்களாட்சி வந்த பிறகு, பார்ப்பனர்கள், மரியாதையாக தங்களது ஆதிக்கப் பிடிகளை விட்டுவிட்டு வெளியேறுவதுதான் நேர்மையான முடிவாக இருக்க முடியும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு ஆட்சி, தங்களது நாட்டின் மண்ணின் மைந்தன் தான் தங்கள் நாட்டில் கோயில் அர்ச்சகர்களாக இருக்க வேண்டும் என்று கோருவதில் என்ன தவறு இருக்க முடியும்?

தமிழ்நாட்டில் அனைத்து சாதியினரும் அர்ச்சகராகும் சட்டம் வந்தபோது பார்ப்பனர்கள் அதை எதிர்த்து உச்சநீதிமன்றம் ஓடியதுபோல் இந்தப் பிரச்சினையிலும் உச்சநீதிமன்றம் ஓடினார்கள். உச்சநீதிமன்றம் கருநாடக பார்ப்பனர்களையே மீண்டும் அர்ச்சகராக்க ஆணையிட்டு, மக்களாட்சியின் முடிவு செல்லாது என்று அறிவித்தது. தமிழ்நாட்டைப் போல் 'மானமற்றவர்களாக' அமைதி காக்க விரும்பாத மாவோயிஸ்டுகள் நேராக பசுபதி நாதர் கோயிலுக்குள் நுழைந்து, கருநாடக பார்ப்பன அர்ச்சகர்களின் சாதி ஆணவச் சின்னமான பூணூலை அறுத்து, அவர்களின் ஆடைகளைக் களைந்து நிர்வாணப்படுத்தி, தங்கள் எதிர்ப்பை தன்மானத்துடன் பதிவு செய்துள்ளனர்.

உடனே இந்திய பார்ப்பன ஆட்சி அலறுகிறது. ஆயுதம் தாங்கிய போலீஸ் பாதுகாப்புடன் கன்னட பார்ப்பனர்கள் கோயிலுக்குப் போய் அர்ச்சனை நடத்துகிறார்கள். கன்னடத்துப் பார்ப்பனர்கள் தாக்கப்பட்டவுடன் கன்னட மாநிலத்தைச் சார்ந்த வெளியுறவு அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா, உடனே கண்டனம் தெரிவிக்கிறார். இந்திய நேபாள உறவு சீர்குலைந்து விடக்கூடாது என்றும், வழிபாடுகளில் தேசிய இனப் பிரச்சினைகளைக் கொண்டு வரக்கூடாது என்றும் பார்ப்பனர்கள் கூக்குரலிடுகிறார்கள். 'இந்து' பார்ப்பன ஏடு முதல் பக்க தலைப்பு செய்தியாக வெளியிடுகிறது.

ஈழத்தில் பல்லாயிரம் தமிழர்கள் இனப்படுகொலைக்கு உள்ளானபோது வதை முகாம்களில் 3 லட்சம் தமிழர்கள் ஒவ்வொரு நாளும் செத்துக் கொண்டிருக்கும்போது ஒரு கண்டன வார்த்தை கூட தெரிவிக்காத இந்திய பார்ப்பன ஆட்சி, இரண்டு பார்ப்பனர்களின் பூணூல் அறுக்கப்பட்டவுடன் அலறித் துடிப்பதை தமிழர்கள் கவனிக்க வேண்டும்.

நேபாள கோயிலில் நேபாளிகளையே அர்ச்சகர்களாக்க வேண்டும் என்று ரிஷி பிரசாத் சர்மா எனும் நேபாளி பார்ப்பனர் தலைமையில் போராட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டு, இந்தியப் பார்ப்பன அர்ச்சகர் நியமனத்தை எதிர்த்து போராடி வருவதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம். இந்தியாவைச் சார்ந்த ஒரு குடிமகன் நேபாளத்தில் அமைச்சராக முடியாது என்கிறபோது, இந்தியாவைச் சார்ந்த பார்ப்பான் மட்டும் எப்படி நேபாள கோயிலில் அர்ச்சகராக முடியும்? இந்தியாவில் உள்ள ஏதேனும் ஒரு புத்த கோயிலில் சீன நாட்டைச் சார்ந்த ஒருவர், புத்தர் கோயில் வழிபாட்டை ஏற்று நடத்த இந்தியா சம்மதிக்குமா? பார்ப்பன அர்ச்சகர்கள் வெளியேற வேண்டும். 'பூணூல்' அணிந்துவிட்டால் அது உலகத்தையே கட்டுப்படுத்தும் என்று கூறுகிறார்களா?

மானமுள்ள மாவோயிஸ்டுகளின் நடவடிக்கைகளைப் பாராட்டுகிறோம்!

# தமிழர் எழுச்சி பெறுவதை கலைஞர் விரும்பவில்லை

## கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரை

"தமிழ்நாட்டில் தமிழினம் எழுச்சி பெற்றுவிடக் கூடாது என்பதில் தமிழக முதல்வர் கலைஞர் உறுதியாக இருக்கிறார்" என்று 18.8.2009 அன்று சென்னை புரசைவாக்கத்தில் நடந்த கழகக் கூட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி குறிப்பிட்டார். அவரது உரை:

இராணுவ வாகனம் தாக்கப்பட்டதற்காக அப்படி தாக்கிய தோழர்களை பாராட்டிக் கொண்டிருக்கின்றோம். நம்மைவிட பலம் பொருந்திய இராணுவத்தை தாக்கியவர்களை பாராட்டிக் கொண்டிருக்கிறோம் என்றால் அந்த இராணுவம் நம்முடைய இராணுவம் அல்ல என்றுதான் எண்ணுகிறோம். இப்போது மட்டுமல்ல, ஈழத்தில் இந்திய அமைதிப்படை என்ற பெயரால் போன இந்திய இராணுவ வீரர்கள் அங்கு இறந்த போது செய்தித்தாள்களில் 2 பேர் 5 பேர் 15 பேர் இறந்தார்கள் என்று தொடர்ச்சியாக செய்தி வந்தபோது தமிழர்களாகிய நாம் மகிழ்ச்சியாக அதைப் படித்திருக்கின்றோம்.

நம் நாட்டைச் சேர்ந்த இராணுவ வீரர்கள் இறந்தார்கள் என்ற செய்தியை 20 ஆண்டுகளுக்கு முன்னால் கேட்டு மகிழ்ச்சியடைந்திருக்கிறோம். காரணம் அப்போதும் கருதினோம், இந்திய இராணுவம் என்பது நம்முடைய இராணுவம் அல்ல. நமக்கான இராணுவம்அல்ல. நம் மக்களை, நம் உரிமைகளை காக்கிற இராணுவம் அல்ல என்று நாம் நம்பினோம். அதனுடைய இரண்டாவது நிகழ்ச்சியாக இப்போது இராணுவ வாகனத்தை தாக்கியதை பாராட்டியிருக்கின்றோம். இதற்காக தேசிய பாதுகாப்புச் சட்டத்தை இந்த தி.மு.க. ஆட்சி போட்டது.



இதில், தேசத்தின் பாதுகாப்பு எல்லாம் எங்கே இருக்கின்றது என்று நாங்கள் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே கேள்வி எழுப்பியிருக்கின்றோம். பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் ஸ்ரீரங்கத்தில் திராவிடர் கழகம் நிறுவிய பெரியார் சிலையை இந்து வெறியர்கள் தாக்கிய போது எதிர்வினை ஆற்றினார்கள். எப்போதும் வேரைத் தேடி போவதே பெரியார் அணுகுமுறை. எனவே எங்களது தோழர்கள் சிலையை உடைத்த தோழர்களை தேடிப் போகவில்லை. அதற்கான காரணங்களை தேடிப் போனார்கள்.

சங்கர மடத்தைத் தேடிப் போனார்கள். யசூர் வேத பாடசாலையை தேடிப் போனார்கள். அயோத்தியா மண்டபத்தை தாக்கப் போனார்கள். அங்கெல்லாம் தாக்குதல் நடத்தினார்கள். அங்கெல்லாம் வழக்குப் போட்டார்கள். அதில் எங்கள் தோழர்கள் மீதெல்லாம் தேசிய பாதுகாப்புச் சட்டம் பாய்ந்தது.

என்ன குற்றத்திற்காக தேசிய பாதுகாப்பு சட்டத்தைப் போடுகின்றோம் என்று விளக்குகின்ற போது, அதற்காக இந்த அரசு கொடுக்கின்ற ஆணையில் சொன்னார்கள். குறிப்பாக ஈரோட்டில் எங்கள் தோழர்கள் மீது அரசு தந்த குற்றச்சாட்டு மனுவில் பல குற்றங்களை சுமத்தினார்கள். சமூக விரோத செயல்களில் எங்கள் தோழர்கள் தொடர்ந்து ஈடுபட்டு வருவதை கண்காணித்து வந்தோம் என்று சொன்னார்கள். அந்த தேச விரோத செயல்கள் என்ன என்பதை கலைஞர் ஆட்சி பட்டியலிட்டது.

ஈரோட்டில் பெரியார் திராவிடர் கழகத் தோழர்களை 17.3.2006 ஆம் தேதி இராம. இளங்கோவன் மற்றும் 152 நபர்கள் 19.3.2006 அன்று நடைபெற்ற விசுவ இந்து பரிசத் மாநாட்டை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தனர். இது முதல் சமூக விரோத செயல். அடுத்தது, டெல்லியில் இடஒதுக்கீட்டுக்கு எதிராக தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்து வரும் உயர்சாதி மாணவர்களை கண்டித்து ஈரோடு தலைமை தபால்நிலையம் முன்பாக இராம. இளங்கோவன் தலைமையில் 38 நபர்கள் முழக்கம் எழுப்பி போராட்டம் செய்தனர். மூன்றாவதாக 21.12.2006 ஆம் தேதி ஈரோடு நகராட்சி முன்பாக இராம. இளங்கோவன் மற்றும் 32 நபர்கள் இடஒதுக்கீட்டுக்கு எதிரான வீரப்ப மொய்லி தாக்கல் செய்த அறிக்கையினை எதிர்த்துப் போராட்டம் செய்தனர். இந்த மூன்று சமூக விரோத செயல்களை தொடர்ந்து இப்போது சங்கரமடம் சங்கரனுடைய பாதுகை காப்பாற்றப்பட்ட இடத்தைப் போய் தாக்கினார்கள் என்று தி.மு.க. அரசு சமூக விரோத செய்லகளை பட்டியலிட்டது.

தமிழக அரசு பட்டியல் போட்டிருக்கிற மூன்று சமூக விரோத செயல்கள் இந்துமத வெறி அமைப்பை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தது. இட ஒதுக்கீட்டுக்கு ஆதரவாக போராடியது. இட ஒதுக்கீட்டுக்கு எதிராக நின்ற பார்ப்பன மாணவர்களை கண்டித்தது - இவையெல்லாம் இந்த ஆட்சியின் பார்வையில் சமூக விரோத நடவடிக்கைகள்.

அடுத்து பெரம்பலூர் இலட்சுமணன் மீது தேசிய பாதுகாப்பு சட்டம் போட முடிவு செய்தார்கள். அதற்கு அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு என்ன? இலட்சுமணனும் அவரது இரண்டு கூட்டாளிகளும் சாதியைக் குறிப்பிட்டு ரமேஷ் அய்யரை திட்டினார்கள். பூணூலை அறுத்தும் மற்றும் வேட்டியை பொது இடத்தில் கிழித்தும் கொந்தளிப்பை ஏற்படுத்தினார்கள். இந்த ஒரு செயலுக்காக மட்டும் அவர்களின் மீது தேசிய பாதுகாப்புச் சட்டம் போடப்பட்டது. இது தேசிய பாதுகாப்பு சட்டமா? அல்லது பூணூல் பாதுகாப்பு சட்டமா என்ற நியாயமான கேள்வியை வைத்தோம்.

என் மீதும் போட்டார்கள் விடுதலைப்புலிகளை ஆதரித்துப் பேசியதாக ராஜீவ் மரணம் கொலை அல்ல மரண தண்டனை என்று பேசினேன் என்று வழக்கு போட்டார்கள். அந்த வழக்கில் இருந்து என்னை விடுவித்த உயர்நீதிமன்ற நீதிபதி சொன்னார், அப்படியெல்லாம் பேசியதற்காக இந்தச் சட்டத்தை பயன்படுத்தியது தவறு என்று சொன்னார். அந்த சட்டங்களை சொல்லித்தான் இப்போது விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசுவது குற்றம் என்று அறிவிக்கிறார்கள். ஆனால், நாங்கள் சொன்னோம், இது தேசிய பாதுகாப்பு சட்டமல்ல; கூட்டணி பாதுகாப்பு சட்டம் என்று. நாங்கள் கூட காங்கிரசுக்காக அவர்களை திருப்திப்படுத்தவே கலைஞர் ஆட்சி, இந்த சட்டங்களைப் போடுவதாக தவறாகக் கருதிக் கொண்டிருந்தோம். அதுவும் இல்லை என்பது இப்போது அம்பலமாகியிருக்கின்றது.

என்ன காரணம் என்றால், இந்த வழக்கில் 5 பேர் தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் இருந்து விடுதலையாகி இருக்கின்றார்கள். இதில் ஒருவரை மட்டும் தான் உயர்நீதிமன்றம் விடுதலை செய்திருக்கின்றது. இந்த வழக்கு தவறாக புனையப்பட்டிருக்கின்றது என்று கழகப் பொதுச்செயலாளர் இராம கிருட்டிணனை உயர்நீதிமன்றம் விடுதலை செய்தது. மற்ற 4 பேரை யார் விடுதலை செய்தார்கள் என்றால் மத்திய உள்துறை விடுதலை செய்திருக்கிறது.

கோவை மாநகர மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாணவரணி செயலாளர் புதூர் சந்திரசேகரன், குடியரசு தலைவருக்கு ஒரு கடிதம் எழுதினார். "உங்கள் இராணுவ வாகனத்தை தாக்கி, அந்த வழக்கில் என் மீது தேசியப் பாதுகாப்புச் சட்டத்தைப் போட்டது தவறு" என்று முப்படைத் தலைவரான குடியரசுத் தலைவருக்கு கடிதம் எழுதினார். குடியரசுத் தலைவர் உடனே, உள் துறைக்கு அனுப்பினார். உள் துறையின் அமைச்சர் சிதம்பரம். இராணுவ வாகனத்தை தாக்கியபோது, அப்போது தேர்தல் பிரச்சாரத்தில் இருந்த சிதம்பரம் சொன்னார், "நான் மீண்டும் இந்த அமைச்சர் பொறுப்பை ஏற்பேனேயானால், பெரியார் திராவிடர் கழகத்தை தடை செய்வேன்" என்று சொன்னார். ஆனால் குடியரசுத் தலைவர் அனுப்பிய கடிதத்தை உள்துறை அமைச்சகம் படித்துப் பார்த்தது. தி.மு.க. அரசு தவறு செய்து விட்டது; தேசிய பாதுகாப்புச் சட்டத்தை இதற்குப் பயன்

(3 ஆம் பக்கம்)

# எம்.ஜி.ஆர். நடத்திய பெரியார் நூற்றாண்டையும், கலைஞர் நடத்தும் அண்ணா நூற்றாண்டையும் ஒப்பிட்டுப் பாருங்கள்!

*(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

படுத்தியிருக்கக் கூடாது என்று உள்துறை அமைச்சகம் ரத்து செய்தது. ஆக கூட்டணி பாதுகாப்பு சட்டம் என்று நாங்கள் கூறியதுகூட தவறு என்றாகி விட்டது. தன்னைப் பாதுகாத்துக் கொள்ள தி.மு.க. அரசு இந்த சட்டங்களை போட்டிருக்கின்றதோ என்று நாங்கள் கருதுகின்றோம். அவரை பாதுகாத்துக் கொள்ளக்கூடிய அளவுக்கு அவருக்கு என்ன அவ்வளவு ஆபத்து? இதை மக்கள் தான் புரிந்து கொள்ள வேண்டும்.

பெரியார் திராவிடர் கழகத்தை தடை செய்வேன் என்று சொன்ன சிதம்பரத்தின் உள்துறை அமைச்சகம் 4 தோழர்கள் மீது போட்ட தேசிய பாதுகாப்புச் சட்டத்தை ரத்து செய்திருக்கின்றது. தொடர்ந்து இப்படி, என் மீது, சீமான் மீது, மணியரசன் மீது, எங்கள் தோழர்கள் மீது தேசிய பாதுகாப்புச் சட்டத்தைப் போட்டு வருகிறது, இந்த அரசு. ஒவ்வொரு முறையும் நீதிமன்றம் தலையில் குட்டி ரத்து செய்துள்ளது. ஒரு சாதாரண அறிவுள்ளவனுக்குக்கூட உடனே அறிவு வர வேண்டும். இனியும் இப்படி முறைகேடாக சட்டத்தைப் பயன்படுத்தக் கூடாது என்று. ஆனால், இந்த ஆட்சியில் அதையெல்லாம் எதிர்பார்க்கக் கூடாது. இந்த அரசின் கன்னத்தில் ஓங்கி அறைவதைப் போன்று ஆணைகள் வருகின்றன. புதூர் சந்திரசேகர் மீது மத்திய உள்துறை ஆணையை ரத்து செய்தது. அதை அரசு வாங்கிக் கொண்டு, உடனே சூலூர் வீரமணி மீது பாதுகாப்புச் சட்டத்தைப் போட்டார்கள். நான்கு முறை கன்னத்தில் ஓங்கி அறைந்தும் உங்களுக்கு அறிவு வரவில்லையே எனறு நாங்கள் கவலைப்படுகின்றோம். அதைத்தான் சொல்லுகிறேன், என்ன காரணம்?

தமிழ்நாட்டில் ஆட்சியில் இருக்கின்ற கலைஞருக்கு தமிழ்நாட்டில் தமிழின எழுச்சி வளருவதே பிடிக்கவில்லை. அத்தகைய எழுச்சியை அவர் விரும்பவில்லை. ஒரு மாவட்ட ஆட்சித் தலைவர் தேசிய பாதுகாப்புச் சட்டத்தை பிறப்பித்தால், 12 நாளைக்குத்தான் அது அமுலில் இருக்கும். அதன் பிறகு, தமிழக அரசு, உள்துறை ஒப்புதல் கொடுத்தால் தான் அது தொடரும். உள்துறை பொறுப்பில் செயலாளராக யார் இருக்கின்றார் என்றால் மாலதி என்ற பார்ப்பனர் இருக்கின்றார். தலைமைச் செயலாளர் யார் என்றால் அப்போது திரிபாதி என்ற பார்ப்பனர் இருந்தார். இப்போது ஸ்ரீபதி என்ற பார்ப்பனர் இருக்கிறார். டி.ஜி.பி.யாக யாரை வைத்திருந்தார்? அப்போது வங்காளப் பார்ப்பனர், இப்போது வடநாட்டுக்காரர் இருக்கிறார்.

பெரியார் நூற்றாண்டு விழா வந்தது. அப்போது முதல்வராக இருந்தவர் எம்.ஜி.ஆர். அவர் பெரியாரைப் பற்றி அறிந்திராதவர்; பெரியாரோடு பழகியிராதவர். பார்ப்பனர்களே அவரை சூழ்ந்திருந்தனர். அந்த எம்.ஜி.ஆர்., பெரியார் நூற்றாண்டு விழாவை யெப்படி நடத்தினார்? பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தத்தை நடைமுறைக்கு கொண்டு வந்தார். பெரியார் பெயரில் மாவட்டம் அமைத்தார். பெரியார் வாழ்க்கை வரலாற்றை நாடகமாக ஆண்டு முழுவதும் மக்கள் மத்தியில் நடத்தி அவர் கருத்துக்களை எடுத்துச் சொல்ல வைத்தார். பெரியார் புரட்சி மொழிகளை புத்தகமாக லட்சக்கணக்கில் அரசு துறை சார்பில் அச்சிட்டு பரப்பினார். மாவட்ட தலைநகர்களில் பெரியாரின் அறிவுச் சுடர் ஏந்தியிருக்கிற சின்னத்தை வைத்து, அதன் கீழே பெரியாருடைய மொழிகளை கல்வெட்டுகளாக பதியச் செய்தார்.

அவர் பிறந்த ஈரோடு மாவட்டத்துக்கு பெரியார் பெயர் சூட்டினார். ஒரு தலைவரின் பெயரில் மாவட்டம் வைக்க தொடங்கியதே முதன்முதலில் பெரியார் பெயரில் தான். இத்தனையும் செய்த எம்.ஜி.ஆர். மீது கலைஞர் ஒரு விமர்சனம் வைத்தார். பெரியார் பெயரில் மாவட்டம். பெரியார் கொள்கைக்கு 'மா'வட்டம். அதாவது பெரிய வட்டம். ஏனென்றால் அந்த மாவட்டத்திற்கு ஆட்சித் தலைவராக ஒரு பார்ப்பனரை எம்.ஜி.ஆர். நியமித்துவிட்டார் என்றார். உடனே எம்.ஜி.ஆர். பார்ப்பன மாவட்ட ஆட்சித் தலைவரை மாற்றி தியானேஸ்வரன் என்ற பார்ப்பனரல்லாதாரை நியமித்துவிட்டார்.

ஆனால், இப்போது கலைஞர் ஆட்சியின் நிலைமை என்ன? முதலில் அண்ணா நூற்றாண்டை எப்படி கொண்டாடிக் கொண்டிருக்கின்றீர்கள்? ஏதோ அங்கங்கே பதாகைகளில் கலைஞரோடு ஒட்டிக் கொண்டு அண்ணா காட்சித் தருகிறார். அதைத் தவிர, அண்ணாவின் இதயத்தை இரவலாக வாங்கிய நீங்கள் வேறென்ன செய்தீர்கள்? கொள்கை பூர்வமாக என்ன செய்திருக்கின்றீர்கள்? பெரியாருக்கு எம்.ஜி.ஆர். செய்ததையும், அண்ணாவுக்கு கலைஞர் செய்வதையும் ஒப்பிட்டுப் பாருங்கள். நாங்கள் ஒன்றைக் கேட்டோம், ஒரு மாவட்ட ஆட்சித் தலைவராக பார்ப்பனரை போட்டதற்கே பெரியார் கொள்கைக்கு 'மா' வட்டம் என்று சொன்னீர்களே, இன்று தமிழ்நாட்டின் தலைமைச் செயலாளராய், காவல்துறை தலைவராய், உள்துறை செயலாளராய் அத்தனை பேரையும் பார்ப்பனர்களாக வைத்திருக்கின்றீர்களே! அரசு வழக்குரைஞர்களாக இருந்தவர் கூட மிக நீண்ட காலத்திற்கு பின்னால் ஒரு 40, 50 ஆண்டுகளாக பார்ப்பனர்கள் அரசு வழக்கறிஞர்களாக இருந்ததில்லை. இடையிலே வி.பி. இராமன் இரண்டு ஆண்டுகள் இருந்தார். ஆனால் இப்போது அதே வி.பி. இராமனின் மகன் அரசு வழக்குறைஞராக நியமிக்கப்பட்டிருக்கிறார். இட ஒதுக்கீட்டை கொண்டு வந்த முத்தையா (முதலியார்) பேரன் மாசிலாமணியை மாற்றிவிட்டு இப்போது பார்ப்பனரையே அரசு வழக்குறைஞராக நியமித்திருக்கிறார். உங்களுக்கு எத்தனை வட்டங்கள் போட வேண்டும் கலைஞரே என்றுதான் நாங்கள் கேள்வி வைக்க விரும்புகின்றோம். *(கைதட்டல்)* அண்ணா நூற்றாண்டு நிறைகின்ற நாட்களிலாவது அண்ணாவை கொஞ்சம் எண்ணிப் பாருங்கள் என்று கேட்கின்றோம்.

அண்ணா ஆட்சிக்கு வந்தவுடன் அரசு அலுவலகங்களில் கடவுள் படங்கள் இருக்கக் கூடாது என்று ஆணை போட்டார். அகற்றி விடுங்கள் என்று சொன்னார். அண்ணாவாவது பெரியாருடைய மாணவர். ஆனால், பி.ஜே.பி. ஆட்சியில் மதக் கலவரங்கள் எங்கு ஏற்படுகின்றது என்றால், அரசு அலுவலகங்களில்தான் தொடங்கு கிறது. அங்கு இந்து மத கோயில்களை நிறுவுவதும், பூசைகளை செய்வதும், இந்து மத சுலோகங்களை எழுதுவதும் காரணமாக இருக்கிறது என்று பி.ஜே.பி. அரசு எல்லா மாநிலங்களுக்கும் அறிவித்தது. அரசு அலுவலகங்களில் கடவுள்கள் படங்கள் இருக்கக் கூடாது. கோயில்கள் இருந்தால் வழிபாடு நடத்தக் கூடாது. சுலோகங்கள் எழுதக் கூடாது. புதிய கோயில்கள் கட்டக் கூடாது. இதையெல்லாம் பி.ஜே.பி. அரசு சொன்னது. அந்த ஆணையை தமிழக அரசு அதிகாரி அரி.பாஸ்கர் என்பவர் அரசுத் துறைகளுக்கு அனுப்பி வைத்தார். இப்போது பத்திரிகையில் வரக்கூடிய செய்தி பூமி பூசை என்று வருகின்றது. முன்பெல்லாம் அடிக்கல் நாட்டு விழா என்று தான் வரும். மு.க.ஸ்டாலின் துணை முதல்வர் பொறுப்பேற்றுக் கொண்டு கலந்து கொண்ட முதல் நிகழ்ச்சி பார்ப்பனர்கள் சூழ இருந்து மெட்ரோ ரெயில் நிலையத்திற்கு பூமி பூசை செய்து தொடங்கி வைத்ததுதான். இதையெல்லாம் அண்ணா நூற்றாண்டில் நாங்கள் நினைவூட்டுகின்றோம்.

தேசிய பாதுகாப்புச் சட்டம் எங்களுக்கு ஒரு பொருட்டல்ல. இப்பேர்ப்பட்ட ஆயிரம் வழக்குகளை சந்திக்க தயாராக இருக்கின்றோம். சட்டத்தை மீறுவதைப் பற்றி நாங்கள் எப்போதும் கவலைப்பட்டதில்லை. எங்கள் செயல்கள் நியாய விரோதமாக இருக்காது. நான் பெரியாரியக்கத்தைச் சார்ந்தவன். பெரியார் தான் தமிழா நீ யார்? என்று எண்ணிப் பார்க்க வைத்தார். தமிழன் யார் என்பதை உலகினர் எண்ணிப் பார்க்க வைத்தவன் பிரபாகரன். *(பலத்த கைதட்டல்)*

அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் அரசியல் அறிவியல் துறை தலைவர் பழனிதுரை, ஒரு நிகழ்ச்சிக்கு கனடா நாடு சென்றாராம். 1980களில் அங்கே பேசும்போது அங்கே அவரை அறிமுகப் படுத்தும்போது, இந்தியாவில் இருந்து வந்திருக்கும் தமிழர் என்று சொன்னார்களாம். பேசிவிட்டு வந்த பின்னால் கேட்டார்களாம், இந்தியாவிலும் தமிழர்கள் இருக்கின்றார்களா? என்று. தமிழகத்தில் ஆறரை கோடிப் பேர் இருந்தும், தமிழர் என்ற இனம் உலகத்துக்கு தெரியவில்லை; ஈழத்தில் 30 லட்சம் தமிழர்கள் தான். ஆனால் பிரபாகரனால் தான் தமிழ் இனம் ஒன்று இருக்கின்றது என்பதே உலகுக்கு தெரிந்தது. அப்படி எங்கள் உள்ளம் பூரிக்க ஒரு நாடு வேண்டும் என்று பெரியார் சொன்னார். அய்யா அவர்கள் தெளிவாக சொன்னதைப்போல தமிழன் தன்னை இந்து என்று கருதியதால் மானத்தையும், பகுத்தறிவையும் உரிமையையும் இழந்தான். தன்னை இந்தியன் என்று கருதியதால் தமிழ்நாட்டையும், தமிழ் வீரத்தையும், கலையையும், நாகரீகத்தையும் மறந்தான். இரண்டையும் உடைக்க வேண்டும் என்று சொன்னவர் பெரியார்.

எங்களைப் பார்த்துக் கேட்கின்றார்கள், பெரியார் எவ்வளவு அமைதியாக போராடினார்; நீங்கள் வன்முறையாக போராடுகின்றீர்களே என்று. பெரியார் சொன்னார், "நான் நாத்திகன். நான் யாரையும் அடிக்க மாட்டேன். என்னை அடித்தால், அடிக்கத் தூண்டினால் அவனைக் கொல்லும் வேளையில் சாவேன்". இன்னொன்றையும் பெரியார் சொன்னார், "கொள்கைக்காக வாழும் மக்களாக நம்மில் பலர் ஆக வேண்டும். நம்மை கண்டால் தீவிரவாதிகள் இவர்கள், எதற்கும் தயார் என்ற நடுக்கம் எதிரியிடம் ஏற்பட வேண்டும். இதுதான் தியாகம் என்பது"; என்ற முழக்கத்தையும் கொடுத்தார்.

எனவேதான் நாங்கள் செய்ய வேண்டிய காரியத்தில் கவனமாக இருக்கிறோம். சட்டத்தைப் பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. ஒவ்வொரு முறையும் சட்டங்கள் மீறப்பட்டதால்தான், புதிய சட்டங்கள் நமக்கு ஆதரவான சட்டங்கள், நமக்குக் கிடைத்திருக்கின்றன. சட்டத்தை மீறுவதற்கு நாங்கள் தயார் என்பதல்ல. எல்லோரும் தயாராக வேண்டும் என்பதுதான். *(கைதட்டல்)*

தமிழ்நாட்டு தமிழன் விடுதலை பெறாத அடிமை; தமிழ் ஈழத்தில் இன்னும் அவலங்களை கேவலமான அவலங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் நம் தமிழினம். பிச்சைக்காரர்களையே காணாத சமூகம், ஈழத் தமிழர் சமூகம். அவர்கள் இன்று அங்கிருக்கும் அரசிடம் கையேந்தி நிற்கிறார்கள். இது அவலத்திலும் அவலம். ஒரு சிறு மழை பெய்ததற்கே மூன்று முகாம்களில் 1 லட்சத்து 40 ஆயிரம் மக்கள் உள்ள ஒரு முகாம் நீரில் மிதக்கிறது. நீரில் மிதக்கிறது என்றால் தண்ணீர் தானே என்று இருந்துவிடலாம். மலக்குழிகள் வெட்டி வைத்து அதிலேதான் மலம் கழிக்க வேண்டும். நீர் நிரம்பி அது வெளியேறி இருக்கின்றது. அதில் தான் தமிழர்கள் வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள். கேட்டால் அய்.நா. மன்றம் உதவிக்கு வரவில்லை என்று சொல்கிறார் ராஜபக்சே. மற்றதெல்லாம் இவர் பார்ப்பார்.

அய்.நா. மன்றம் ஆள் அனுப்பினால் உள்ளே அனுமதிக்க மாட்டார். அய்.நா.வின் பிரதிநிதிகளை அனுமதிக்க மாட்டார். செய்தியாளர்களை அனுமதிக்க மாட்டார். மலக்குழிகள் வெட்டுவதற்கு மட்டும் அய்.நா. மன்றம் வர வேண்டும் என்று வெட்கம் மானமின்றி கூறுகிறார். ராஜபக்சே இவருக்கு ஆதரவாக இந்தியா. இந்தியாவிற்கு ஆதரவாக தமிழினத் தலைவர் கலைஞர் என எல்லோரும் இருக்கும் அவலத்தில் நாம் அமைதியாக இருக்க முடியுமா? அப்படி இருந்தால், எந்த பாதுகாப்பும் ஈழத் தமிழர்களுக்கு மட்டுமல்ல, நமக்கும் இல்லாமல் போய்விடும். நாம் அதை எதிர்கொள்ள வேண்டுமானால் குறைந்தது 15 நாள் சிறையில் இருக்கவாவது தயாராவோம் என்ற மனநிலையை வளர்த்துக் கொள்வோம். நாமெல்லாம் சடங்கு ரீதியான போராட்டங்ளை விடுவோம். காலை 10 மணிக்கு ஆர்ப்பாட்டம் செய்து மாலை 6 மணிக்கு வெளியே வருவதும் தான், இப்போது போராட்டமாய் விட்டது. அதுவும் இப்போது மாலை 4 மணிக்கு ஆர்ப்பாட்டம் செய்து 6 மணிக்கு வெளி வருவது என சுருக்கிக் கொண்டோம்.

நாம் சிலவற்றை இழக்காமல் எதையும் பெற முடியாது. சில சங்கடங்களை சந்திக்காமல் நாம் விரும்புகிற கொள்கையை நிறைவேற்றி விட முடியாது. சிறை சென்று மீண்ட போராளிகளுக்கு சிறை புதிதல்ல. சிறையைப் பற்றி அஞ்சுபவர்கள் அல்ல. கோவை இராமகிருட்டிணன் 1976 இல் மிசாவில் ஒன்றரை ஆண்டுகள் சிறையில் இருந்தார். அப்போ 24 வயதுதான். ராஜீவ் கொலை வழக்கில் மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக தடா சட்டத்தில் சிறையில் இருந்தார். எனவே அதைப் பற்றி கவலைப்படுபவர்கள் அல்ல. அந்த நோக்கம் எல்லோரும் கையிலெடுத்து போராட முன் வர வேண்டும் என்பதுதான்.

நீங்கள் ஏற்கனவே அமைதியாக இருந்தாலும், போராடாமல் இருந்தாலும் அதைப் பற்றிக் கவலை இல்லை. இனி மேலாவது தமிழின உரிமைக்கு, ஈழத் தமிழன் உரிமைக்கு போராட்டங்கள் எடுக்கிறபோது நோக்கத்தைப் புரிந்த கொண்டு ஆதரவு கொடுங்கள் - என்று கழகத் தலைவர் உரையாற்றினார். ●

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

## மாநாடு போல் நடந்த கழகக் கூட்டம்

# கொளப்பலூரில் ரூ. 50 ஆயிரம் வழக்கு நிதி






16.8.2009 ஞாயிறு மாலை 5.30 மணிக்கு, ஈரோடு மாவட்டம், கோபி வட்டம், கொளப்பலூரிலுள்ள பெரியார் திடலில், "தந்தை பெரியாரின் கொள்கைகளை பின்பற்ற வேண்டும் ஏன்? - ஈழம் - இனி நாம் என்ன செய்ய வேண்டும்?" என்ற தலைப்பில் மாவட்டச் செயலாளர் இராம. இளங்கோவன் தலைமையில் நடைபெற்றது. முன்னதாக மேட்டூர் டி.கே.ஆர். குழுவினரின் பகுத்தறிவு மற்றும் இன உணர்வு இசை நிகழ்ச்சி நடைபெற்றது. மக்கள் வெள்ளம் போல் கூடி இருந்தனர். கொளப்பலூரில் இது போன்ற ஒரு மக்கள் கூட்டத்தை இது வரை எந்த நிகழ்ச்சியும் கூட்டியதில்லை. மிகப் பெரிய ஆர்வத்துடன், எதிர்பார்ப்புடன் மக்கள் கழகத் தலைவர், இனமான இயக்குனரின் உரை கேட்க குழுமி நின்றனர்.

பாடல் நிகழ்ச்சி முடிந்தவுடன் மாவட்டச் செயலாளர் தலைமை உரை நிகழ்த்திய பின்பு மாவட்டத் தலைவர் நாத்திகசோதி, கொளப்பலூர் கிளைத் தலைவர் கொ.கி.சுப்ரமணியன், தலைமை கழகப் பேச்சாளர் கா.சு. வேலுச்சாமி ஆகியோர் உரையாற்றினர்.

தொடர்ந்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரையாற்றினார். அவருடைய உரை வெகுவாக அனைத்து மக்களையும் கவரும் வண்ணம் தெளிவான நடையிலே அமைந்தது. அடுத்த நாள் ஊரிலுள்ள மக்கள், நண்பர்கள் பலர் உங்கள் தலைவரின் பேச்சு மிகத் தெளிவாக அனைவரையும் ஈர்க்கும் வண்ணம் இருந்தது எனப் பாராட்டினார்கள். மேடையில் தலைவர் முன்னிலையில் கோபியைச் சார்ந்த பிரபலமான வழக்கறிஞர் ஜெகதீசன், எம்.ஏ., பி.எல்., தலைவருக்கு சால்வை அணிவித்து, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். இருக்கின்ற அமைப்புகளிலேயே பெரியார் திராவிடர் கழகம் தான் வீச்சாக இருக்கின்ற, போராட்ட குணம் கொண்ட, உண்மையான ஒரு தன்னல மறுப்பு இயக்கமாக உள்ளது. ஆகவேதான் நான் பெரியார் திராவிடர் கழகத்தில் என்னை இணைத்துக் கொள்ள விரும்பினேன். இனி தொடர்ந்து கழகத்தில் சிறப்பாக பணியாற்றுவேன். எனது வழக்கறிஞர் துறையில் பல நபர்களை உறுப்பினர்களாக, பெரியார் கொள்கையாளர்களாக மாற்றுவதே இனி என் வாழ்நாள் பணி என்று உறுதியுடன் தனது கருத்தை தெரிவித்துள்ளார்.

இறுதியாக இனமான இயக்குனர் சீமான், ஒன்றரை மணி நேரம், அய்யாவின் கொள்கைகள் குறித்தும், அவர் இந்த சமூகத்திற்கு ஆற்றிய பணிகள் குறித்தும், தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் குறித்தும் உரை நிகழ்த்தினார். இராணுவ வாகனம் தாக்குதலில், தோழர்களுக்கான வழக்கு நிதி ஈரோடு மாவட்டக் கழகத்தின் சார்பாக ரூ.50000 மேடையில் கழகத் தலைவர் வசம் வழங்கப்பட்டது. அத்துடன் வழக்கு நிதி கேட்டு பொதுக் கூட்டத்தில் மக்களிடம் தோழர்கள் துண்டேந்தி சென்றபோது மொத்தம் ரூ.5535 வசூலானது. அதையும் கழகத் தலைவரிடம் மாவட்டக் கழகத்தின் சார்பாக வழங்கப்பட்டது. இதே மேடையில் நாமக்கல் மாவட்டக் கழகத்தின் கழகத் தலைவர் சுவாமிநாதன், மாதுராசு ஆகியோர் வழக்கு நிதியாக ரூ.14,100-ஐ கழகத் தலைவர் கொளத்தூர் மணியிடம் அளித்தனர். இந்நிகழ்ச்சியில் பிரான்சைச் சார்ந்த தமிழச்சியும் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

### ஈரோடு நகர புதிய பொறுப்பாளர்கள்

ஈரோடு மாநகரக் கழகத்தின் சார்பாக புதிய பொறுப்பாளர்கள் நியமிக்கப் பட்டுள்ளார்கள். மாவட்டச் செயலாளர் இராம. இளங்கோவன் தலைமையில், மாவட்டத் தலைவர் நாத்திகசோதி முன்னிலையில் நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்டத்தில் கீழ்கண்டவாறு தோழர்களுக்கு பொறுப்புகள் புதிதாக வழங்கப்பட் டுள்ளது. ஈரோடு மாநகர - தலைவர் - கராத்தே சண்முகம்; செயலாளர் லெமூரியன், அமைப்பாளர் கு. மாது, இளைஞரணி - தலைவர் சிவா, செயலாளர் இரா. முருகானந்தம், அமைப்பாளர் கு. இரவிக்குமார். செய்தி தொடர்பாளர் இரா. சுப்ரமணி.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

வீச்சில் நடத்துவதெனவும்,

இந்திய இராணுவ வாகன தாக்குதலில் சிறை சென்ற தோழர்கள் மீதான வழக்கை சந்திக்க வழக்கு நிதியை விரைவில் தலைமைக் கழகத்திடம் ஒப்படைப்பதெனவும்

கழகத்தின் வார ஏடான புரட்சிப் பெரியார் முழக்கத்திற்கு அதிகளவில் சந்தாதாரரை சேர்ப்பதெனவும் - தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மாவட்ட கழகத்திற்கும் நகர ஒன்றிய கழகத்திற்கும் பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர்.

பொறுப்பாளர்கள் பட்டியல் வருமாறு:

மாவட்டத் தலைவர் - சு. துரைசாமி, செயலாளர் - கா. கருமலையப்பன்; திருப்பூர் மாநகரம் - தலைவர் ரமேஷ்பாபு, செயலாளர் முகில்ராசு. திருப்பூர் ஒன்றியம் - தலைவர் அகிலன், செயலாளர் கொளத்துப் பாளையம் குமார், அமைப்பாளர் அவினாசியப்பன். பல்லடம் நகரம் - அமைப்பாளர் ஜெகதீசன் பல்லடம் ஒன்றியம் - அமைப் பாளர் விஜயன். உடுமலைப்பேட்டை நகரம் - தலைவர் யாழ் நடராசன், செயலாளர் இரா. பாக்கியநாதன், துணைச் செய லாளர் சிவ. சங்கர், அமைப்பாளர் வேல்முருகன். உடுமலைப்பேட்டை ஒன்றியம் - தலைவர் அரிதாசு, செயலாளர் கோ.விசு. மடத்துக்குளம் - தலைவர் நா.ப. கதிரவன், செயலாளர் சு.சிவானந்தம், துணைச் செயலாளர் மோகன்குமார். தாராபுரம் - அமைப்பாளர் குமார். காங்கேயம் - அமைப்பாளர் பாண்டியன் அவினாசி - அமைப்பாளர் சோமு. பொங்கலூர் - தலைவர் மயில் சாமி, செயலாளர் கார்த்திகேயன்

புதிதாக தொடங்கப்பட்ட திருப்பூர் மாவட்ட கழகத்தின் செயல்பாடுகள் திட்டமிட்டு சிறந்த வகையில் செயல்பட அனைத்து வாய்ப்புகளும் உள்ளதால் தோழர்கள் ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டும் என கழகப் பொதுச்செயலாளர் வலியுறுத்தினார்.

# நன்கொடை

4.9.2009 அன்று கொளத்தூர் கி.இராமமூர்த்தி - இரா. இலாவண்யா ஆகியோரின் 'தம்பி காலனியக'த்தை கழகத் தலைவர் கொளத்தூர் மணி திறந்து வைத்தார். கழக ஏட்டின் வளர்ச்சிக்காக ரூ.500 நன்கொடை வழங்கப்பட்டது.

கழகத் தோழர்கள் சேலம் பாலு - மேட்டூர் சக்தி பங்குதாரர்களாக இணைந்து - சேலத்தில் 'நானோ பவர் நீர் சுத்திகரிப்பு' நிறுவனம் ஒன்றை சேலம் 'சேர்வராய் ஃபுட்மால்' அரங்கில் தொடங்கியுள்ளனர். கழகத் தலைவர் கொளத்தூர் மணி 4.9.2009 அன்று மாலை தொடங்கி வைத்தார். 'புரட்சி பெரியார் முழக்கம்' வளர்ச்சிக்கு ரூ.500 நன்கொடை வழங்கப்பட்டது.

6.9.2009 அன்று பாளையங் கோட்டையில் நெல்லை மாவட்ட கழகச் செயலாளர் காசிராசன் - கோமதி மணவிழாவை கழகத் தலைவர் கொளத்தூர் மணி நடத்தி வைத்தார். கழக ஏட்டுக்கு ரூ.1000 நன்கொடை வழங்கப்பட்டது.

**"புரட்சிப் பெரியார் முழக்கம்"**
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
**தொடர்புக்கு: ஆசிரியர்,**
**29, பத்திரிகையாளர் குடியிருப்பு,**
**திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,**
**சென்னை-41. ✆ 9840940400**


## இயக்குநர் மணிவண்ணன் இல்ல மணவிழா

திரைப்பட இயக்குனரும், சீரிய பெரியாரியலாளருமான மணிவண்ணன் - செங்கமலம் மணிவண்ணன் ஆகியோரின் மகள் ஜோதி - சதிஷ் ரகுநாதன் சுயமரியாதை சாதி மறுப்பு மணவிழா 7.9.2009 அன்று சென்னை ஐஸ்வர்யா மகாலில் சிறப்புடன் நடைபெற்றது. நடிகர்கள் ரஜினிகாந்த், சத்யராஜ், சந்திரசேகர், இயக்குநர்கள் சீமான், சேரன் மற்றும் கழகப் பொதுச் செயலாளர்கள் கோவை இராமகிருட்டிணன், விடுதலை இராசேந்திரன், மணியரசன், தியாகு, கவிஞர் காசி ஆனந்தன் உள்ளிட்ட பலரும் மணமக்களை வாழ்த்தி உரையாற்றினர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 10th September 2009

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2040 செப்டம்பர் 17, 2009 புரட்சி 8 முழக்கம் 36 விலை: ரூ.2.50


**தலையங்கம்**

## அண்ணா

*‘அண்ணா ஒரு அதிசய மனிதர்’ என்றார் பெரியார். அண்ணாவோ பெரியாரை ‘ஒரு சகாப்தம்; ஒரு காலகட்டம்; ஒரு திருப்பம்’ என்றார். பெரியாரின் உறுதியான – சமரசமற்ற கொள்கைகளை மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் சில சமசரங்களை மேற்கொண்டார் அண்ணா. அது ஒரு செயல் உத்தி தான். ஆனாலும், பெரியாரின்அடிப்படையான லட்சிய உறுதியில் அண்ணாவுக்கு முழுமையான உடன்பாடு உண்டு என்பதில் இருவேறு கருத்துகளுக்கு இடமில்லை. அதனால்தான் 1967 இல் – ஆட்சி அதிகாரத்துக்கு வந்தவுடன் கசப்பான உணர்வுகளை மறந்து, பெரியாரை நோக்கி அவரால் பயணிக்க முடிந்தது.*

*பெரியாரோடு ஒன்றாக செயல்பட்ட காலம், தமது ‘வசந்த காலம்’ என்றார் அண்ணா! அந்த வசந்த காலத்தில் அவர் படைத்த நூல்கள், உருவாக்கிய நாடகங்கள், நிகழ்த்திய மேடைப் பேச்சுக்கள் இப்போது, மிகவும் தேவைப்படுகிற மக்களிடம் கொண்டு செல்லப்பட வேண்டிய அறிவாயுதங்கள்.*

*ஆட்சிக்கு வருவதற்காக வெகுமக்களை திருப்திப்படுத்த அண்ணா கொள்கையை முழுமையாக விட்டுக் கொடுக்காது மேற்கொண்ட ‘சமரசங்கள்’ – மெல்ல மெல்ல விரிவடைந்து கொள்கைகள் சுருங்கிப் போய் – சமரசங்கள் அதிகரித்து, இப்போது சமரசங்களே கொள்கைகள் என்ற எல்லைக்கு வந்து நிற்பதை, ஒளிவுமறைவின்றி சுட்டிக்காட்டித்தான் ஆக வேண்டும். அதன் காரணமாகத்தான் அண்ணா தனது ‘வசந்த கால’த்தில் ஏற்றுக் கொண்ட கொள்கைகளை எழுதிய நூல்களை படைத்த நாடகங்களை இன்று மக்களிடையே கொண்டு செல்ல மறுக்கிறார்கள் அல்லது தயங்குகிறார்கள்.*

*இந்த லட்சியங்களை முன் வைத்தே இளைய தலை முறையை ஈர்த்தார் அண்ணா. அவைகள் மறைக்கப்பட்டதால் அல்லது மறக்கப்பட்டதால் இன்றைய தமிழகத்தின் இளைய தலைமுறைக்கு வலை வீச, அண்ணாவால் எதிரிகளாக அடையாளம் காட்டப்பட்ட ‘தேசியங்களின்’ ‘இளம் வாரிசுகள்’ தமிழகத்தில் கால்பதிக்க வருகிறார்கள். ஒரு காலத்தில் அண்ணாவின் லட்சியத்தால் ஈர்க்கப்பட்ட இளம் தலைமுறை இன்று பல தலைமுறைகளைக் கடந்து, அதிகார அரசியலை வரித்துக் கொண்டு – அதற்காக வாரிசு அரசியலை கைகளில் எடுத்துக் கொண்டு தேசிய அரசியலுக்கு ஆலவட்டம் வீசிக் கொண்டிருக்கும் அவலத்துக்கு வந்து விட்டன.*

*அண்ணாவின் ‘ஆரிய மாயை’யும், ‘இந்து கண்ட சாம்ராஜ்யமும்’, ‘தீ பரவட்டும்’, ‘நிலையும் நினைப்பு’ம், ‘பணத் தோட்ட’மும், ‘கம்பரசமும்’ காணாமல் போய் விட்டன. ‘5 ரூபாய் நாணயம்’, ‘ஒரு படி அரிசி’ என்ற பாதுகாப்பான அடையாளங்கள் அண்ணாவின் மீது போர்த்தப்படுகின்றன. ‘படி அரிசி’யும், ‘அய்ந்து ரூபாய் நாணயமும்’ அண்ணாவின் உண்மையான அடையாளங்களும் அல்ல. அண்ணா வின் பெயரால் நடந்த ஒரு சில நூற்றாண்டு விழாக்களிலும்கூட அண்ணாவைத் தேட வேண்டியிருக்கிறது. அண்ணா விழாவை நடத்துவோரின் புகழே காது கிழிய பேசப்படுகிறது.*

*மிகக் குறுகிய காலமே அண்ணா ஆட்சியில் இருந்தார். அக் காலத்தில் சுயமரியாதை திருமணத்துக்கு சட்ட வடிவம்; தமிழ்நாடு என்று பெயர் சூட்டல்; தமிழக பள்ளிகளில் இரு மொழித் திட்டம் என்ற முப்பெரும் சாதனையை செய்து முடித்தார்.*

*அரசு அலுவலகங்களில் கடவுள் படங்கள் வேண்டாம் என்று முதலமைச்சராக இருந்து அண்ணா பிறப்பித்த ஆணையை – இப்போது கடவுள் படங்களுக்குள் தான் தேட வேண்டிய நிலை.*

*அண்ணாவின் பெயரைக் கொண்டுள்ள கட்சிகளுக்கு நாம் வைக்கும்வேண்டுகோள் இதுதான். அண்ணாவின் பகுத்தறிவை – பார்ப்பனிய எதிர்ப்பை – தமிழின உணர்வை – குறைந்தது, கட்சித் தோழர்களிடமாவது கொண்டு செல்லக் கூடாதா?*

*லட்சியங்களால் நிறைந்த அண்ணாவின் வசந்த காலத்தை இளைய சமுதாயத்தின் முன் கொண்டு வந்து நிறுத்தப்படுமா, மீண்டும். இதுவே அண்ணாவின் நூற்றாண்டில் உண்மையாக அவரது தலைமையிலும், நேர்மையிலும், பண்பிலும் ஈடுபாடு கொண்ட ஒவ்வொருவரும் தங்களுக்குள்ளே எழுப்பிக் கொள்ள வேண்டிய கேள்வி.*

# ‘அந்த வசந்தம்’


*அண்ணா முதலமைச்சரான பிறகு ‘விடுதலை’ வெளியிட்ட 89 ஆம் ஆண்டு பிறந்த நாள் மலரில் – எழுதிய கட்டுரை.*

எனக்கென்று ஒரு ‘வசந்தகாலம்’ இருந்தது. நீண்ட நாட்களுக்குப் பிறகு ஆண்டு பலவற்றுக்குப் பிறகு -அந்த வசந்த காலத்தை நினைவிலே கொண்டு, இன்றைய கவலைமிக்க நாட்களிலே எழ முடியாத புன்னகையைத் தருவித்துக் கொள் கிறேன்.

பெரியாருக்கு அந்த ‘வசந்தகாலமும்’ தெரியும். இன்று நான் பொறுப்பேற்றுக் கொண்டிருப்பதால் எழுந்துள்ள கவலையும் நன்கு புரியும்.

‘வசந்த காலம்’ என்றேனே, அந்த நாட்களில் நான் கல்லூரியிலிருந்து வெளியேறி, அவருடன் ‘காடுமேடு’ பல சுற்றி வந்த நிலை.

அந்தக் ‘காடுமேடு’களில், நான் அவருடன் தொண்டாற்றியபோது, வண்ண வண்ணப் பூக்கள் குலுங்கி மகிழ்வளித்ததைக் கண்டேன்; நறுமணம் எங்கும் பரவிடக் கண்டேன்.



அப்போது ‘கலவரம் எழாமல்’ ஒரு பொதுக் கூட்டத்தை ஒழுங்காக நடத்தி முடித்திட முடிந்தால் போதும் - பெரிய வெற்றி என்பதே பெருமிதம் தோன்றும்.

புறப்படு முன்னர் தலை போகும் - தாடி போகும் - தடி போகும் - உயிர்போகும் என்ற மிரட்டல் கடிதங்களை படித்திட வேண்டிய நிலை.

அண்ணாதுரை ! இதைப் பார்த்தாயா என்று ஒரு கடிதத்தை வீசுவார் - ஆமாமய்யா ! என்று பொருளற்ற ஒரு பதில் தருவேன். வருகிறாயா என்று என்னைக் கேட்க மாட்டார் - வருவேன் என்பது அவருக்கு நன்கு தெரியுமாதலால், செல்வோம், பெரியாரின் பேருரை நிகழ்த்தப்படும். வந்தவர்களில், உருட்டல் மிரட்டல் கடிதம் எழுதியவர் இருந்திருப்பின் அடுத்த கூட்டத்திற்கு அவர் அய்யாவிற்காக ‘மாலை’ வாங்கிக் கொண்டுதான் வருவார்; அத்தகைய தெளிவும், வாதத் திறமையும் பேச்சில் கிடைக்கும்.

அத்தகைய தெளிவுரை பெற்றுப் பெற்று, தமிழரில் பலர், பலப்பலர், திருந்தினர் என்பது மட்டுமல்ல, தமிழகத்திலேயே ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டுவிட்டிருக்கிறது.

ஒருவர் புறப்பட்டு, ஓயாது உழைத்து உள்ளத்தைத் திறந்து பேசி, எதற்கும் அஞ்சாது பணியாற்றி ஒரு பெரிய சமூகத்தை விழிப்பும் எழுச்சியும் கொள்ளச் செய்வதில் வெற்றிபெற்ற வரலாறு. இங்கின்றி வேறெங்கும் இருந்ததில்லை.

அந்த ‘வரலாறு’ துவக்கப்பட்டபோது நான் சிறுவன்.

அந்த வரலாற்றிலே புகழேடுகள் புதிது புதிதாக இணைக்கப்பட்ட நாட்களிலே, ஒரு பகுதியில், நான் அவருடன் சேர்ந்து பணியாற்றியிருக்கிறேன். அந்த நாட்களைத்தான் என் ‘வசந்தம்’ என்று குறிப்பிட்டிருக்கிறேன்.

பெரியாருடன் இணைந்து பணியாற்றியவர் பற்பலர். அவருடன் மற்றப் பலரைவிட இடைவிடாது இருந்திடும் வாய்ப்பைப் பெற்றிருந்தவன் நான். அந்த நாட்கள் எனக்கு மிகவும் இனிமையான நாட்கள். இன்றும் நினைவிலே கொண்டு வரும் போது இனிமை பெறுகின்றேன்.

எத்தனை எத்தனையோ கருத்துக்களை உரையாடலின் மூலம் தந்திருக்கிறார்.

எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்பதனை நான் கற்றுணரும் வாய்ப்பும் தந்தார்.

பொதுத் தொண்டாற்றுவதில் ஓர் ஆர்வமும், அகமகிழ்வும், மன நிறைவும் பெற்றிடச் செய்தார்.

கோபத்துடன் அவர் பலரிடம் பேசிடக் கண்டிருக்கிறேன்; கடிந்துரைக்கக் கேட்டிருக்கிறேன்; உன்னை எனக்குத் தெரியும்போ ! என்று உரத்த குரலில் கூறியதைக் கேட்டிருக்கிறோம்; ஒரு நாள்கூட என்னிடம் அவர் அவ்விதம் நடந்து கொண்டதில்லை. எப்போதும் ஒரு கனிவு, எனக்கென்று, தனியாக வைத்திருப்பார். என்னைத் தமது குடும்பத்தில் பிறவாத ‘பிள்ளை’ எனக் கொண்டிருந்தார்.

நான் கண்டதும் கொண்டதும் அந்த ஒரே தலைவரைத்தான் -

இப்போது நான் உள்ள வயதில் அவர் இருந்தார் - நான் அவருடன் இணைந்த போது; முப்பது ஆண்டுகளுக்கு முன்பு. அதற்கு முன்பு முப்பது ஆண்டுகள் அவர் பணியாற்றி வந்திருக்கிறார்.

இந்த ‘ஆண்டுகள்’ தமிழரின் வரலாற்றிலே மிக முக்கியமான ஆண்டுகள்; திடுக்கிட வைக்கிறாரே ! திகைப்பாக இருக்கிறதே ! எரிச்சலூட்டுகிறாரே ! ஏதேதோ சொல்கிறாரே ! - என்று கூறியும் விட்டு வைக்கக் கூடாது ! ஒழித்துக் கட்டியாக வேண்டும் ! நானே தீர்த்துக் கட்டுகிறேன் ! - என்று மிரட்டியும், தமிழகத்துள்ளாரில் பலர் பேசினர்; ஏசினர்; பகைத்தனர்; எதிர்த்தனர்; ஏளனம் செய்தனர்; மறுப்பு உரைத்தனர்; ஆனால் அவர் பேச்சைக் கேட்ட வண்ணம் இருந்தனர்; மூலையில் நின்றாகிலும்; மறைந்திருந்தாகிலும் ! அந்தப் பேச்சு அய்ம்பது ஆண்டுகளுக்கு மேலாக நடந்தபடி இருந்தது; எதிர்த்தவர்கள், ஏளனம் புரிந்தவர்கள், ஏனோ தானோ என்று இருந்தவர்கள் தத்தமது நிலை தன்னாலே மாறிடக் கண்டனர்; கொதித்தவர்கள் அடங்கினர். மிரட்டினோர் பணிந்தனர், அலட்சியம் செய்தோர் அக்கரை காட்டினர்; அவருடைய பேச்சோ ! அது தங்குதடையின்றி, வேகம் குறையாமல், பாய்ந்தோடி வந்தது; மலைகளைத் துளைத்துக் கொண்டு, கற்களை உருட்டிக் கொண்டு காடுகளை கழனி வளம் பெறச் செய்து கொண்டு ஓசை நயத்துடன், ஒய்யார நடையுடன் ! அங்கே பேசுகிறார், இங்கே பேசுகிறார், அதைக் குறித்துப் பேசுகிறார், இது குறித்துப் பேசுகிறார் - என்று தமிழகம் இந்த அய்ம்பது ஆண்டுகளாக கூறி வருகிறது.

*4 ஆம் பக்கம்*

## மதமும் மனிதனும்



● *தமிழக முதலமைச்சராக அண்ணா பதவி யேற்ற பிறகு, காரைக்குடியில் 'இந்து மதாபிமான சங்கத்தின்' பொன் விழாவுக்கு பேச அழைக்கப் பட்டபோது – அதில் இவ்வாறு பேசினார்:*

'அண்ணாதுரை மதத்திற்கு அப்பாற்பட்டவராக இருக்க முடியாது' என்று குறிப்பிட்டார்கள்.

சில வேளைகளில் மதத்திற்கு மனிதன் அப்பாற்பட்டவராக இருக்கிறானா என்பதைவிட, மனிதனுக்கு அப்பாற்பட்டு மதம் இருக்கிறது என்பதுதான் இன்று இருக்கும் மிக முக்கியமான பிரச்சினைகளில் ஒன்றாகும்.

**மனதிற்கு அப்பாற்பட்டு, மனித உணர்ச்சிகளை மதியாமல், மனித குலத்திற்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளைத் தீர்க்காமல், மனித குலத்திலே தோன்றுகின்ற வேற்றுமைகளைக் களையாமல், மனிதர்களின் மனதிலே தோன்றுகின்ற மாசுகளைத் துடைக்காமல் இருக்குமானால், மனிதனுக்கு மாண்பு அளிக்காமல் ஒரு மதம் இருக்குமானால், அப்படிப்பட்ட மதத்தை மனித குலத்திற்கு அப்பாற்பட்ட மதம் என்று நாம் சொல்லலாம்.**

அப்படி சில மதங்கள் காபாலிக மதத்தைப் போன்றவைகள் தமிழகத்திலே இருந்து வந்தன என்பதையும் இந்தியாவில் இருந்து வந்தன என்பதையும் வரலாறு நமக்கு உணர்த்துகின்றது.

மதம் என்று சொல்கின்ற நேரத்தில் மக்களுக்கு, ஒரு ஒழுக்க முறையை ஒரு குறிக்கோளை, ஒரு லட்சியத்தை, ஒரு வாழ்வு முறையை அது அமைத்துத் தருவதென்றால் நான் முழுக்க முழுக்க மதவாதி.

மதம் என்பது மக்களைச் சாதிகளாகவும் குலங்களாகவும் கோத்திரங் களாகவும் பிளவுபடுத்தி ஒருவருக்கொருவர் தாழ்வு, குறைவு ஒருவருக் கொருவர் பார்க்கக் கூடாது. தீண்டுவது கூடாது, ஒருவருக்கொருவர் கலந்து உரையாடக் கூடாது என்பதுதான் மதம் என்றால் என்னைவிட மதத்திற்கு விரோதியாக யாரும் இருக்க முடியாது.

### அழுக்கேறிய கருத்துகள்

● நான் கண்டு இருக்கின்றேன். நம்முடைய இந்த தன வணிக நாட்டிலே தான், தாங்கள் படுத்துக் கொள்வதற்குப் படுக்கை மட்டும் இல்லாமல் விருந்தாளிகளுக் கென்று தனியாகப் படுக்கைகளை ஒதுக்குப்புறத்தில் தொலைவாக வைத்திருப்பார்கள். நாலுபேர் விருந்தாளிகள் வருகிறார்கள் என்றால் அவைகளை எடுத்து விரித்து வந்தவர்களை இருக்கச் செய்வார்கள். அது ரொம்ப நாளைக்கு முன்னாலே பரணில் போடப்பட்டதாக இருந்ததால் தைத்தபோது வெல்வட்டிலே தைத்திருக்கலாம். அது ஒரு வருடம் முதன்முதலாகப் பயன்படுத்தியபோது மிகுந்த மிருதுத்தன்மையாக இருந்திருக்கலாம். ஆனால் பல காலமாக விருந்தாளிகள் வராமல் அந்தப் படுக்கை உயரத்தில் இருந்து இருக்குமானால், அதை எடுத்துப் போடுகின்ற நேரத்தில், விரித்துப் பார்க்கின்ற பொழுது அதில் பூச்சிப் பொட்டுக்கள் இருந்திருக்கலாம்; தேள் பூச்சிகள் நடமாடலாம்; ஒரு பக்கத்து ஆடை நைந்து போய் இருக்கலாம்; இன்னொரு பக்கத்தில் வேறு விதமான கறைகள் எல்லாம் சேர்ந்து விட்டிருக்கலாம். ஆகவே உதற வேண்டும், துடைக்க வேண்டும், பழுது பார்க்க வேண்டும். அப்பொழுதுதான், எந்த நோக்கத்தோடு அந்தப் படுக்கைகள் தயாரிக்கப்பட்டனவோ, விருந்தினர்களின் வசதிக்கென்று அதற்கு ஏற்ற விதத்தில் அதன் பயன் கிடைக்கும்.

ஒரு சாதாரண படுக்கை பல மாதங்கள் பயன்படுத்தாமல் வைக்கப் பட்டிருந்தால் இத்தனை தேவைகளும் இருக்கிறது என்றால், நம்முடைய மதம் நம்முடைய தத்துவங்கள், நம்முடைய நடைமுறைகள், கொள்கைகள், ஈராயிரம், மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே ஏற்பட்டவை என்றால் இடையில் எவ்வளவு அழுக்கேறி இருக்கும் ?

### பச்சைக் கொடியும் — பச்சைப் பாம்பும்

● *அண்ணாமலை பல்கலைக்கழக தமிழ்ப் பேரவை தொடக்க விழாவில் அண்ணா பேசியது. 29.11.1949 – 'மாலை மணி' இதழிலிருந்து.*

தமிழ் எழுத்துக்கள் எழுதப்பட்டது எல்லாம் தமிழ் என்று நான் ஒப்புக் கொள்வதில்லை. பச்சைக் கொடியும் பச்சைப் பாம்பும் பார்வைக்கு ஒன்று போலத் தோன்றும். ஜாதியோ, சாதியோ தமிழிலே கிடையாது என்று தமிழறிஞர்கள் கூறும் போதெல்லாம் நான் பூரித்துப் போவேன். இதுபோலவே திதி,சிரார்த்தம், திவசம், அமாவாசை, கிருத்திகை இவையெல்லாம் தமிழிலில்லை. சீமான் என்றாலும் தமிழென்று ஒப்புக் கொள்ளுவதில்லை. இலட்சுமி என்ற பெயர் தமிழ் எழுத்துக்களால் ஆக்கப்பட்ட சொல் என்பதற்காக. அதை ஒப்புக் கொள்ள முடியுமா ? இலட்சுமியை ஒப்புக் கொண்டால் அதோடு ஒட்டிக் கொண்டுள்ள கற்பனை உருவத்தின் மேல் கட்டப்பட்ட கதைகளையும், கதைகளிலே மறைந்துள்ள மதத்தையும், அந்த மதத்திலே மண்டியுள்ள மௌடீக எண்ணங்களையும் நாம் ஒப்புக் கொள்ள முடியுமா ? அதனால் தான் தமிழ் நெஞ்சம், தமிழ் எண்ணம் வேண்டு கின்றேன். இடையிலே முளைத்த களைகளைக் களைந்துவிட வேண்டு மென்கிறேன். நானும் என்னைச் சார்ந்தவர்களும் இந்தப் பணியில்தான் ஈடுபட்டுள்ளோம்.

களை எடுக்கிற ஆர்வத்தில் எங்கே பயிரைப் பாழாக்கி விடுவோமோ என்று கழனியைச் சேர்ந்தவர்கள் அஞ்சுகிறார்கள். அவர்களின் கண்ணியமான அச்சத்தை நான் ஏற்றுக் கொள்ளுகிறேன். பொறுப்புணர்ச்சி யோடு அவர்களுக்கு உறுதி கூறுகிறேன். பயிரை அழிக்க மாட்டோம். அவசரத்தில் கைகால் பட்டு பயிர் அமிழ்ந்து போகுமே தவிர அழிந்து விடாது!

**நன்றி : 'இளந்தமிழன்' செப். 2009**

### *விஜய் – ராகுலிடம் கேள்விக் கணைகள்*

# கழக சுவரொட்டிகளின் தாக்கம்

சென்னையில் பெரியார்திராவிடர் கழகம் நடத்தி வரும் சுவரொட்டி இயக்கம் - பெரும் தாக்கத்தை உருவாக்கி வருகிறது. அண்மையில் விஜய், ராகுல் காந்தியை எதிர்த்து கழக சார்பில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. ஈழத் தமிழர்களுக்காக ரசிகர்களை அழைத்து, தமிழகம் முழுதும் போராட்டம் நடத்திய விஜய், இனப் படுகொலைக்கு துணை போன காங்கிரசில் சேருவது - ரசிகர்களுக்கு செய்யும் துரோகம் இல்லையா என்ற கருத்தில் சுவரொட்டி ஒட்டப்பட்டிருந்தது. காங்கிரசில் சேரப் போவதில்லை என்று நடிகர் விஜய் செய்தியாளர் கூட்டத்தைக் கூட்டி அறிவித்து விட்டார். செய்தியாளர் சந்திப்பில் கழகத்தின் சுவரொட்டி பற்றி நடிகர் விஜய்யிடம் செய்தியாளர்கள் கேட்டனர். இது பற்றி 'தினத்தந்தி' (செப்.14 - சென்னை பதிப்பு) நாளேடு வெளியிட் டிருக்கும் செய்தி.

"கேள்வி : நீங்கள் காங்கிரஸ் கட்சியில் இணைந்தால், அது ரசிகர்களுக்கு செய்யும் துரோகம் என்று நிறைய சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்ததே?

பதில் : தமிழ் மக்களுக்கு ஒன்று என் றால், நான் களத்தில் இறங்கி போராடுவேன். இலங்கை தமிழர்களுக்காக, நானும் என் ரசிகர்களும் உண்ணாவிரதம் இருந்தோம். எனக்கு எல்லா தமிழர்களும் ஒன்றுதான். உலக தமிழர்களுக்கு ஒரு பிரச்சினை என்றால் வேடிக்கை பார்த்துக் கொண்டு சும்மா இருக்க மாட்டேன்."

இதே போல் ராகுல் காந்தி, ஈழத் தமிழர் இனப் படுகொலையைக் கண்டிக்காததை சுட்டிக்காட்டி, தமிழர்கள் இந்த துரோகத்தை மறக்கமாட்டார்கள் என்ற சுவரொட்டியையும் பெரியார் திராவிடர் கழகம் ஒட்டியிருந்தது.

ராகுல் தமிழகம் வருகையின்போது பத்திரிகையாளர்கள் சந்திப்பில் எழுப்பப் பட்ட பெரும்பாலான கேள்விகள் ஈழத் தமிழர் பிரச்சினைகளையே மய்யம் கொண்டிருந்தது. மத்திய அரசு ஈழத் தமிழர்களைப் பாதுகாக்கவே நடவடிக்கைகளை எடுத்தது என்று சமாதானம் கூறிய ராகுலிடம், 'அப்படி யானால் இலங்கை அரசைக் கண்டித்து, அய்.நா.வில் மேலை நாடுகள் கொண்டு வந்த தீர்மானத்தை, இந்தியா ஏன் எதிர்த்தது' என்ற கேள்விக்கு ராகுல் பதிலளிக்க முடியாமல் திணறினார்.

'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளேடு மட்டும் இந்த செய்தியை மறைக்காது பதிவு செய்துள்ளது. விஜய் - ராகுல் இருவருக்கும் எதிராக கழகம் வெளியிட்ட சுவரொட்டிகளை மய்யமாக வைத்து அதில் எழுப்பியுள்ள கேள்விகளின் நியாயங்களை விளக்கி, 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளேட்டில் (செப்.6) அதன் முதன்மை செய்தியாளர் திருபாபு ஜெயக் குமார் விரிவான கட்டுரை ஒன்றையே எழுதினார் என்பது குறிப்பிடத் தக்கது.

வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்சாமி நாதன் எனும் பார்ப்பனர், ஈழத்தில் தமிழர் பகுதியில் சிங்கள அரசின் 'வடக்கில் வசந்தம்' என்ற தமிழ் மண்ணை ஆக்கிர மிக்கும் திட்டம் ஒன்றை செயல்படுத்த திட்டமிட்டிருந்ததைஅம்பலப்படுத்தி கழகம் சுவரொட்டி ஒட்டியது. அதனைத் தொடர்ந்து திட்டத்தை கைவிடுவதாக எம்.எஸ். சாமிநாதன் அறிவித்தார்.

# கோபியில் தீவிர கழகப் பிரச்சாரம்

30.08.2009 ஞாயிறு மாலை 6 மணியளவில் ஈரோடு மாவட்டம் கோபிசெட்டி பாளையத்திலுள்ள சிவசண்முகம் வீதியில், பெரியார் திடலில், அறிவுலக ஆசான் தந்தை பெரியாரின் 131வது பிறந்த நாள் பொதுக்கூட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. பெயர் பலகை திறப்பு விழா, கொடியேற்று விழாவும் நடைபெற்றது. பொதுக் கூட்டத்திற்கு கோபி ஒன்றிய தலைவர் திரு (எ) திருமுருகன் தலைமை தாங்கினார். கோபி ஒன்றியச் செயலாளர் ஆனந்தராசு, இளைஞரணித் தலைவர் முருகேசன், இளைஞரணி அமைப்பாளர் செ. செகநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியின் முன்னதாக குடந்தை சிற்பி இராசன் 'மந்திரமா? தந்திரமா?' நிகழ்ச்சி நடைபெற்றது. மக்கள் பெருங்கூட்டமாக திரண்டனர். முதலாவதாக அந்தப் பகுதியில் கூட்டம் போடுவதற்கு பேருதவியாக இருந்த பழம்பெரும் நாத்திகர் கன்னியப்பன் உரையாற்றினார். அதற்கடுத்து வழக்கறிஞர் செகநாதன் உரையாற்றிய பின்பு, மாவட்ட கழகச் செயலாளர் இராம. இளங்கோவன் மற்றும் தலைமைக் கழகப் பேச்சாளர் கா.சு. வேலுச்சாமி ஆகியோர் சிறப்புரையாற்றினர். மீண்டும் இரவு 11 மணி வரை சிற்பி இராசன், மந்திரமா? தந்திரமா? நிகழ்ச்சிகளை செய்து காட்டினார்.




பெயர் பலகையை பெரியவர் கன்னியப் பன் திறந்து வைத்தார். கழகக்கொடிக் கம்பத் தில் வழக்கறிஞர் செக நாதன் தோழர்களின் பலத்த கரகோஷங்களுக்கிடையே கழகக் கொடியினை ஏற்றி வைத்தார். இந்தக் கூட்டம் நடைபெற்ற போது அந்தப் பகுதியில் இருந்து மீண்டும் 8 தோழர்கள் புதிதாக கழகத்தில் இணைய இசைவு தெரிவித்தனர். பொதுக் கூட்டம் நடந்த பகுதிகள் முழுவதும் அந்தப் பகுதியைச் சார்ந்த தோழர்கள் பெருமாள், அ. முருகேசன், கிருட்டிணன், கண்ணன்,கார்த்தி, ப. கோபால், சு. முத்துக்குமார் ஆகியோர் தோரணக் கொடிகள் கட்டியும், தட்டிகள் வைத்தும் மிகவும் கடினமாக உழைத்து மிகச் சிறப்பாக மாநாடு போன்று நடத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

6.9.2009 அன்று கோபியிலுள்ள கழக அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடல் கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

வழக்கறிஞர் செகநாதன், ஈரோடு மாவட்ட வழக்கறிஞர் பிரிவு அமைப்பாளராக நியமிப்பது.; புரட்சி பெரியார் முழக்கம் சந்தா தொகையை மாவட்டம் முழுவதும் மீண்டும் இந்த ஆண்டுக்கு புதுப்பித்து அனுப்புவது எனவும்; வருகின்ற செப்.17-ல் தந்தை பெரியார் பிறந்த நாளை கொடியேற்றம், குடும்ப விருந்து ஆகியவற்றுடன் மேளதாளம் முழங்க ஊர்வலமாக சென்று கொண்டாடுவது எனவும்; காங்கிரஸ் - மூடநம்பிக்கை இவை இரண்டையும் மையமாக வைத்து இவை இரண்டுக்கும் எதிரான பிரச்சார இயக்கம் மேற்கொள்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

# பெரியாருக்கு இழைக்கும் வரலாற்றுத் துரோகம்

*‘தி சண்டே இந்தியன்’ வார ஏட்டில்... ‘குடிஅரசு’ தடையை எதிர்த்து பாமரன் எழுதிய கட்டுரை.*



உயர்நீதிமன்ற நீதிபதி சந்துரு அவர்கள் அக்கறையும், ஆதங்கமும் கொண்டு அளித்த அந்தத் தீர்ப்பினை மீண்டும் மீண்டும் வாசித்துப் பார்க்கிறேன். உண்மையிலேயே பெரியார் என்கிற அந்த எளிய மனிதர் மீதுஅவர் வைத்திருக்கிற அளவிடற்கரிய நேசமும், மரியாதையும் அவரது ஒவ்வொரு வார்த்தைகளிலும் துளிர்விடுகிறது.

வழக்கு மன்றத்திற்கு வந்துள்ள விஷயம் இதுதான்.1925 இல் இருந்து 1938 வரையிலும் பெரியாரின் உழைப்பில் விளைந்த ‘குடிஅரசு’ இதழ்களை பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறவனம் தொகுத்து வெளியிடுவதா அல்லது பெரியார் திராவிடர் கழகம் வெளியிடுவதா என்பதுதான்.

தான் பயணப்படுவதற்கு மூன்று மாதம் முன்புகூட “எனக்கு அரசியல் வாரிசு என்று எவரும் கிடையாது.எனது கொள்கைகளும் தத்துவங்களுமே எனக்கான வாரிசுகள்” என்று ஆணித்தரமாக அறிவித்திருந்தார் பெரியார்.

தடைகோரும் இந்த வழக்கு மீதான தீர்ப்பை வாசிக்கும்போதுதான் பெரியார் குறித்த தனது தீர்க்கமான கருத்துக்களை முன் வைத்திருக்கிறார் நீதிபதி. பெரியாரது ‘குடிஅரசு’ எழுத்துக்கள் இரண்டு உலக யுத்தங்களுக்கு இடைப்பட்ட காலங்களில் வந்தவை. இதற்காக காலனியாதிக்க ஆட்சியாளர்களால் பலமுறை சிறைப்படுத்தப் பட்டார்... பிணையாக கொடுக்கப்பட்ட தனது அச்சகத்தையும் தண்டனையாக எண்ணற்ற முறை இழந்திருக்கிறார்.... இந்துமதப் பழமைவாதிகளால் சமுதாயத்திலிருந்து விலக்கி வைக்கப்பட்டிருக்கிறார்... சமூக நீதி என்னும் லட்சியத்திற்காகப் போராட தேசிய இயக்கத்திலிருந்தே வெளியேறி சக்தி வாய்ந்த காங்கிரஸ் கட்சியினது கடும் கோபத்துக்கு ஆளாகியிருக்கிறார்... இவற்றுக்கெல்லாம் பதிலாக எந்தவித பிரதிபலனையும் ஒருபோதும் எதிர்நோக்காது தன் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டு தொடர்ந்தார். பெருமளவு எழுத்தறிவே பெருகாத அக்காலத்தில் கற்றவர்கள் மத்தியில் தனது கருத்துக்கள் போய்ச் சேர வேண்டும் என்கிற எண்ணத்தில் குடிஅரசு இதழ்களை இலவசமாகக்கூட விநியோகித்திருக்கிறார் பெரியார். அவரது 130வது பிறந்தநாளைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் அவரது எழுத்துக்களின் உரிமை யாருக்கென சட்டச் சண்டையில் ஈடுபட்டிருப்பது வேதனையின் உச்சம். இந்தச் சகோதர சர்ச்சையில் சிக்கி அவரது சிந்தனைகள் நீதிமன்றப் பதிவேடுகளில் ஒருபோதும் மூழ்கடிக்கப்பட்டு விடக்கூடாது. நமது உறுதியான குறிக்கோள் ஒன்றே ஒன்றாகத்தான் இருக்க வேண்டும். அது: நூறு பூக்கள் மலரட்டும். ஆயிரம் கருத்துக்கள் மோதட்டும்” என்று தனது வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பினை வழங்கியிருக்கிறார் நீதிபதி. காப்புரிமைச் சட்டங்களால் பெரியாரை முடக்கி வைத்துவிட இயலாது என்று வந்திருக்கிற இந்த தீர்ப்பை எதிர்த்துத்தான் மேல் முறையீடு செய்து மீண்டும் பெஞ்ச் விசாரணைக்குக் கொண்டு சென்றிருக்கிறார் மானமிகு வீரமணி.

வழக்குரைஞர் குமாரதேவன் அனுப்பியிருந்த இந்தத் தீர்ப்பின் நகலை ஒரு முறைக்கு பலமுறை வாசித்து மெய்சிலிர்த்துப் போனேன்.

தந்தை பெரியாரை தலைவர்கள் பின்பற்றுகிறார்களோ இல்லையோ, ஆனால் மக்கள் பின்பற்றிக் கொண்டுதான் இருக்கிறார்கள். அவர்கள் அவரைப் பின்பற்றுவதன் வெளிப்பாடுதான்... பால்ய “திருமணங்களுக்கு” முடிவுகட்டி, “பெண்ணின் திருமண வயது 21” என்று ஆட்டோக்களில் கூட எழுதி வைத்திப்பது... அவரைப் பின்பற்றவதன் வெளிப்பாடுதான்... “25 வயது இனம் விதவைக்கு மணமகன் தேவை. சாதி தடையில்லை” என்று விளம்பரங்களில் அறிவிப்பது... அவரைப் பின்பற்றுவதன் வெளிப்பாடுதான்... “நாமிருவர் நமக்கெதற்கு இருவர்?” என்கிற குடும்பக் கட்டுப்பாட்டு அறிவிப்புகள்...

அவ்வளவு ஏன் இன்றும் அவர் எந்த இனத்துக்கு எதிராகச் சித்தரிக்கப்படுகிறாரோ, அதே இனத்தைச் சேர்ந்த கைம்பெண்கள் மொட்டையடிக்கப்பட்டு மூலையில் அமர வைக்கப்பட்ட துயர்மிகும் காலங்கள் துடைத்தெறியப் பட்டு, இன்றைக்கு மரியாதைக்குரிய மானுடர்களாய் உலா வருகிறார்களே, அதில்கூட அடங்கியிருக்கிறது அவரது அறிவுப் பிரச்சாரத்தின் பலன்.

“அறிவு எவருக்கும் சொந்தமில்லை. அது உலகின் கடைக்கோடி மனிதனுக்கும் கொண்டு செல்லப்பட்டாக வேண்டும்” உரத்துக்குரல் கொடுத்தவனின் சிந்தனைகள் “அறிவுசார்சொத்துரிமைகளின்” பெயராலும் காப்புரிமை சட்டங்களின் பெயராலும் முடக்கி வைக்கப்படுவதென்பது மாபெரும் வரலாற்றுத் துயரம். அவரின்றி 36 ஆண்டுகள் கடந்துவிட்ட சூழலில் உலகின் நிலை பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகியிருக்கிறது. இன்றைக்கு அவர் இருந்திருந்தால் உலக மயமாக்கலையும், தனியார் மயமாக்கலையும், கேடுகெட்ட இந்த அறிவுசார் சொத்துரிமையையும் எப்படி எதிர் கொண்டிருப்பார்... எத்தகைய விமர்சனங்களை வைத்திருப்பார் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். அதுதான் அவர் சொன்ன பகுத்தறிவின் நீட்சி.

தந்தை பெரியார் ஒரு குறிப்பிட்ட இயக்கத்துக்கோ... கட்சிக்கோ... இனத்துக்கோ... சொந்தக்காரரில்லை.... இந்த ஒட்டு மொத்த மனித குலத்துக்குமான உன்னத சொத்து அவர்.

---

## ஒரே குரலில் அ. மார்க்ஸ் – ‘இந்து’ ராம் – ராஜபக்சே

சிங்கள ராஜபக்சேயின் குரலை பார்ப்பன ‘இந்து’ ராம் கும்பலோடு இணைந்து தமிழக மேடைகளில் அ.மார்க்ஸ் ‘முழங்கி’ வருகிறார். ஒவ்வொரு நாளும் அங்கு நிகழும் மனித படுகொலைகளை கண்டிப்பதை விட, தமிழ்நாட்டில் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக குரல் கொடுப்போரை குற்றக் கூண்டில் நிறுத்துவதும், கேலி கிண்டல் செய்வதுமே இவரது முழு நேர பணியாகி விட்டதை வன்மையாக கண்டிக்கிறோம்.

காஷ்மீர் வரை போய் அங்கே மனித உரிமை மீறல்களைக் கண்டு குரல் கொடுப்பவர்கள், ஈழத்தில் நடக்கும் மனித படுகொலைகளை கண்டு மகிழ்ச்சி கூத்தாடுவது ஏன்?

மனித உரிமை பேசுவதிலும் பார்ப்பனீயமா?

இவர்களை பின்னால் இருந்து இயக்குவது யார்?

---

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

1957 பிப்ரவரி 10 வாக்கில் கீழ்க் கண்டவாறு நேரு பேசியதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

“இரண்டு அடிப்படைகளை ஏற்றுக் கொண்டால் ஐ.நா. உடனோ, பாகிஸ்தானுடனோ அல்லது எந்த நாட்டுடனானாலும் சரி, நான் பேசத் தயார். முதல் அடிப்படை, 1947 அக்டோபரில் காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதியாகிவிட்டது என்பதாகும்.

இரண்டாவது அடிப்படை, பாகிஸ்தானின் நியாயமற்ற தன்னிச்சையான காஷ்மீரின் மீதான ஆக்கிரமிப்பாகும்.” (காஷ்மீர் மீதான பாரதத்தின் யுத்தம் ப.29) இதன் பின் ஐ.நா. பற்றிய பேச்சும் வெகுஜன வாக்கெடுப்பு என்ற உறுதி மொழியும் காணாமல் போயின.

1960களில் இருந்து சோவியத் இந்திய அரசியல் நட்பின் அடையாளமாக காஷ்மீர் சிக்கல் பற்றி ஐ.நா. பாதுகாப்புக் குழுவில் எந்தத் தீர்மானமும் (வாக்கெடுப்பு உட்பட) வரவிடாமல் செய்தது சோவியத் யூனியன்.

இந்திய அரசு பல லட்சக் கணக்கானப் படையினரை காஷ்மீரில் நிறுத்தி அம்மக்களின் விடுதலைப் போராட்டத்தை பயங்கரவாதச் செயலாக அடையாளப்படுத்தி, காஷ்மீர் மக்களை இராணுவ ஒடுக்குமுறைக்குள் வாழ நிர்ப்பந்தித்தது.

இந்திய அரசின், நேருவின் துரோகங்களினால் வஞ்சிக்கப்பட்ட காஷ்மீர் மக்கள் அடைந்த துன்ப, துயரங்களின் எதிர்விளைவாகவே காஷ்மீரில் காலப்போக்கில் எண்ணற்ற போராளிக் குழுக்கள் உருவாயின.

காஷ்மீர் மக்களின் பேராதரவுடன் ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணி ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்தது. அவ்வமைப்பின் நிறுவனர் மெக்பூல்ட் மீது, இந்திய அரசு கொலைக்குற்றம் சாட்டி பிப்ரவரி 11, 1984 அன்று தூக்கிலிட்டுக் கொன்றது.

காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமையை மறுத்து, விடுதலை கோரும் அம்மக்களை நரவேட்டை நடத்தும் இந்தியப் படையினர் ஒரு பக்கமும், புதிய புதிய பெயரிலான இஸ்லாமிய விடுதலைக் குழுக்களின் ஆயுதப் போராட்டமுமாக காஷ்மீர் விவகாரம் இந்தியாவிற்குத் தீராதச் சிக்கலை ஏற்படுத்தி வருகிறது. ●

---

## சரித்திரத்தை தடுக்கும் வீரமணி

*தோழர் அருணன் எழுதிய ‘தத்துவ ஞானம்’ என்ற நூலுக்கு, ‘புதிய புத்தகம் பேசுது’ இதழில் எஸ்.ஏ.பி. எழுதிய நூல் விமர்சனத்திலிருந்து...*

கருத்து முதல் வாதமும் பொருள் முதல் வாதமும் இந்தியாவில் சுமார் 2500 ஆண்டுக்காலம் ஒன்றையொன்ற எதிர்த்துப் போராடின. இங்கு அவை இரண்டும் ஆத்திகமாகவும் நாத்திகமாகவும் வெளிப்பட்டன. இறுதிப் போரில் பிராமணியம் ஆளும்வர்க்கத்தினரால் தலைமேல் தூக்கி வைத்துக் கொண்டாடப்பட்டது. இதனால் நாத்திகம் நாசுக்கான முறையிலும், படுகொலைப் பேரழிவுகள் மூலமாகவும் அழிக்கப்பட்டது. கடவுளை மறுத்த புத்தரையும், வர்த்தமான மகா வீரரையுமே கடவுளாக்கி அவற்றுக்குள் மூடநம்பிக்கைகளையும் புகுத்தி உருமாற்றினர்.

நீண்ட நெடுங்காலத்துக்குப் பிறகு பெரியார்தான் மீண்டும் நாத்திகக் கொடியை மூர்க்கமாக ஏந்தி நடைபோட்டார். ‘துரதிருஷ்ட வசமாக’ அவரது கருத்துக்கள் தமிழகத்தைத் தாண்டி இந்தியா முழுவதும் பரவவில்லை. இப்போதும் கூட பெரியாரின் பல கோடி சொத்துக்களைக் கையில் வைத்திருப்பவர்கள்கூட பெரியாரின் கோட்பாடுகளை நாடு முழுவதும் பரப்ப எவ்வித முயற்சியும் செய்யவில்லை. வேறு யாரும் பரப்பிவிடாமல் பெரும் தடைக்கல்லாகவும் நிற்கிறார்கள். தமிழகத்தில் இது ஒரு தரித்திர நிகழ்ச்சி. சரித்திரத்தை முன் கொண்டு செல்லவிடாமல் தடுக்கும் திரு.கி.வீரமணி அவர்கள் செயல் தமிழகத்தின் தரித்திர நிகழ்ச்சியாகும்.
– ‘புத்தகம்பேசுது’ செப். 2009

## பெரியார் கருத்தை தடுப்போருக்கு பெரியார் விருது?

*கேள்வி: தந்தை பெரியார் விருதுக்கு வீரமணி தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது பற்றி?*

பதில்: பெரியாரின், குடிஅரசு இதழில் வெளியான கருத்துக்களை தொகுத்து வெளியிட முயன்ற பெரியார் திராவிடர் கழகத்தினரை எதிர்த்தும், தடுத்தும் நீதிமன்றத்தில் தடை ஆணை கோரி வழக்கு தொடர்ந்ததற்காக தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கலாம். நீதிமன்றம் இந்த விவகாரத்தில், சரியான குட்டு வைத்து பெரியாரின் கருத்துக்களை வெளியிட தடையில்லை என்று கூறிய பிறகும், மீண்டும் பெரியாரின் கருத்து தொகுப்பு வெளியே வந்து விடவே கூடாது என்று மன உறுதியுடன் மீண்டும் நீதிமன்றத்தின் கதவுகளை தட்டியிருப்பதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கலாம்.

ஆக!... பெரியாரின் கருத்துக்கள் வெளிவரவே கூடாது என்கிற கருத்து, பெரியாரின் சீடரான கலைஞர் கருணாநிதிக்கு பிடித்துப் போனதால் ஒரு வேளை தேர்ந்தெடுத்திருக்கலாம். பெரியாரின் கருத்துக்களை தொகுத்து வெளியிடலாம் என்று ஆணை பிறப்பித்த நீதிபதிகள் வானத்தில் இருந்து குதித்தவர்களா என்ன...!

**– ‘அரசியல் ஒற்றன்’ செப். 2009 மாத இதழில் ஆசிரியர் கே.வீ. சௌந்தர்**

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# காஷ்மீர் மக்களுக்கு இந்தியாவின் துரோகம் (2)

காஷ்மீரின் பாதுகாப்பு, வெளி நாட்டு விவகாரங்கள், தகவல் தொடர்பு ஆகிய மூன்று துறைகளை மட்டும் இந்தியா பார்த்துக் கொள்ளும். படையெடுப்பாளர்கள் வெளியேற்றப்பட்ட பின் காஷ்மீர் மக்களின் விருப்பத்தின்படி இறுதி முடிவெடுக்க ஒப்புக் கொண்ட இந்திய அரசின் அன்றைய பிரதமர் நேரு,1947 நவம்பர் 2 அன்றைய வானொலி உரையில், "காஷ்மீரின் எதிர்காலம் இறுதியில் மக்களால் தீமானிக்கப் பட வேண்டும் என்பதை நாங்கள் பிரகடனப்படுத்தியுள்ளோம். இது காஷ்மீர் மக்களுக்கு மட்டுமல்ல. முழு உலகிற்கும் நாங்கள் கொடுத்துள்ள வாக்குறுதியாகும்" என்றார்.

உதட்டளவில் இவ்வாறு பேசிய நேருவின் உள்ளடக்கிடக்கையோ வேறானது. 1947 செப். 27 இல் சர்தார் பட்டேலுக்கு தான் எழுதிய கடிதத்தில் "ஷேக் அப்துல்லாவின் ஒத்துழைப் போடு இந்திய யூனியனுடன் காஷ் மீரை எவ்வளவு விரைவில் இணைக்க முடியுமோ அவ்வளவு விரைவில் இணைப்பதற்கு ஏற்ற வகையில் காரியங்கள் நடந்தாக வேண்டும்" என்று குறிப்பிட்டிருந்தார். (காஷ்மீர் மீதான பாரதத்தின் யுத்தம் ப.23).

காஷ்மீர் மக்களிடம் கருத்து வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று ஜனவரி 3, 1948 தொடங்கி டிசம்பர் 2,1957 வரை 11 தீர்மானங்கள் ஐ.நா.வில் மீண்டும் மீண்டும் நிறை வேற்றப்பட்டுள்ளன. 31.12.1948 இல் பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமான போர் ஓய்வு ஒப்பந்தப்படி காஷ்மீர் இரண்டாகப் பிரிக்கப்பட்டு - ஒரு தற்காலிக எல்லைக்கோடு வரையப் பட்டு, கட்டுப்பாடு எல்லைக்கோடு (Line of Control - LOC) வரையப் பட்டது. (கி.வெங்கட்ராமன், கார்கில் போரும் காஷ்மீர் சிக்கலும் ப.7)

ஜம்மு காஷ்மீருக்கு முழு இறை யாண்மை கோரிய ஷேக் அப்துல்லா, 1951 செப்டம்பரில் நடந்த தேர்தலில் வெற்றியடைந்ததன் பின்னரான தன் சட்டமன்ற உரையில் 1951 நவம்பர் 5 அன்று நான்கு கடமைகளை முன் வைத்தார்.

1. காஷ்மீரின் எதிர்காலம் பற்றிச் சட்டமியற்றுவது.
2. மன்னராட்சியின் எதிர்காலம் பற்றி முடிவு செய்வது.
3. முன்னாள் நிலவுடமையாளர்களால் பறிமுதல் செய்யப்பட்ட தமது பாரம்பரிய உரிமையுள்ள நிலங்களுக்கு நட்ட ஈடு கோருவதைப் பற்றிப் பரிசீலிப்பது, இந்தியாவுடன் இணைவதைப் பற்றி முடிவு செய்வது.

தேர்தல் வெற்றியின் சுகம் காஷ்மீர் சிங்கமான ஷேக் அப்துல்லாவையும் விட்டு வைக்கவில்லை. இதன் பயனாகவே - இந்திய வரலாற்றில் அப்பட்டமாக காஷ்மீரிகளுக்கு துரோகமிழைக்கப்பட்டு, காஷ்மீர் மக்களின் விருப்பத்திற்கு எதிராக 1955 ஜூலை 7 அன்று ஸ்ரீநகரில் இந்திய உள்துறை அமைச்சராக இருந்த கோவிந்தவல்லபபந்த். "காஷ்மீருடைய இணைப்பு என்பது ஒரு யதார்த்தம் ஆகிவிட்டது. இனி அதை மாற்ற முடியாது. ஏனெனில் அரசியல் நிர்ணய சபையில் உள்ள தங்களுடைய பிரதிநிதிகள் மூலமாக இந்தியாவுடன் இருப்பதென காஷ்மீர் மக்கள் முடிவு செய்து விட்டார்கள் என்றார்" (நுராணி. ஏ.ஜி. The Kashmir Question, P.69) பக்ஷிகுலாம் முகமது தலைமையில் இயங்கிய ஜம்மு காஷ்மீர் அரசியல் நிர்ணய சபை 1956 நவம்பர் 17 அன்று இயற்றிய தீர்மானம் கீழ்வருமாறு கூறியது.

'ஜம்மு-காஷ்மீர் இந்தியாவின் பிரிக்க முடியாத பகுதியாக இருக்கிறது. இனிமேலும் இருக்கும்'.

ஆனால் இந்த அறிவிப்பை ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சில் நிராகரித்து 1957 ஜனவரி 24 அன்று இயற்றப்பட்ட தீர்மானம், 'ஐ.நா. தீர்மானத்திற்கு இணங்க செய்யப்படாத இவ்வறிவிப்பு அதாவது கருத்து வாக்கெடுப்பின் வழி செய்யப்படாத இந்த முடிவு செல்லத் தக்கதல்ல' என்று கூறியது.

ஆனால் நேருவும் தன் குரலை வெளிப்படையாக மாற்றிக் கொண்டு, "காஷ்மீரானது அய்யத்திற்கிடமின்றி சட்டப்பூர்வமாகவும், வரலாற்றுப் பூர்வமாகவும், அரசியலமைப்புச் சட்ட மூலமாகவும் இந்தியாவின் ஒரு பகுதியே" என்று 1957 ஜூலை நவம்பர் இந்தோ ஜப்பானிய இதழில் வந்த பேட்டியில் கூறினார். (காஷ்மீர் மீதான பாரதத்தின் யுத்தம் ப.68)

தேசிய மாநாட்டுக் கட்சியும், ஷேக் அப்துல்லாவினுடைய அரசும் காஷ்மீரின் சுதந்திரத்தை நோக்கி நகரத் தொடங்கிய நிலையில் 1953 ஆகஸ்ட் 8 இல் சேக் அப்துல்லா கைது செய்யப் பட்டார். 1947க்குப் பின் இந்திய வரலாற்றில் முதன்முறையாக பொய் வாக்கு போட்டு சேக் அப்துல்லாவை தனிமைச் சிறையில் (10 ஆண்டுகள்) அடைத்ததன் மூலம் - எந்த விசாரணையும் இன்றி அரசியல் தலைவர்களை ஆண்டுக்கணக்கில் சிறை வைக்கும் நடைமுறையை ஆசிய ஜோதியான நேரு தொடங்கி வைத்தார்.

(3 ஆம் பக்கம்)

(முதல் பக்கத் தொடர்ச்சி)

மனதிற்பட்டதை எடுத்துச் சொல்வேன் - எது நேரிடினும் - என்ற உரிமைப் போர் அவருடைய வாழ்வு முழுவதும். அதிலே அவர் கண்ட வெற்றி மிகப் பெரியது. அந்த வெற்றியின் விளைவு அவருக்கு மட்டும் கிடைத்திடவில்லை; இன்று அனைவரும் பெற்றுள்ளனர் அந்த வெற்றியின் விளைவுகளை. இந்தத் தமிழகத்தில் தூய்மையுடன் மனதிற்குச் சரியென்று பட்டதை எவரும் எடுத்துரைக்கலாம் என்ற நிலை உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. அறிவுப் புரட்சியின் முதல்கட்ட வெற்றி இது ! இதற்கு முழுக்க முழுக்க பொறுப்பாளர் பெரியார் ! இந்த வெற்றி கிடைத்திட அவர் ஆற்றிய தொண்டின் அளவு, மிகப் பெரிது.

தமிழகத்தில் இன்று அவரால் ஏற்பட்டுள்ள இந்த நிலை இந்தியாவில் வேறு எங்கும் காண முடியாது, பிற பகுதியினர் இது பற்றிக் கேள்விப்படும்போது, வியர்த்துப் போகின்றனர். அப்படியா ! - முடிகிறதா ! - நடக்கிறதா ! - விட்டு வைத்திருக்கிறார்களா ! - என்று கேட்கிறார்கள்; சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டு.

அரித்துவாரம், கல்கத்தா, பாட்னா, கான்பூர், காசி, லாகூர், அலகாபாத், அமிர்தசரஸ் மேலும் இது போன்ற பல நகர்களில், என்னையும் உடன் அழைத்துக் கொண்டு பெரியார் சுற்றுப்பணம் செய்தபோது ஒவ்வொரு ஊரிலும் இதுபோலத் தான் கேட்டனர். யார் ? அந்த ஊர்களிலே உள்ள பகுத்தறிவுவாதிகள் ! !

அந்த இடத்துப் பகுத்தறிவுவாதிகள் படிப்பார்கள் - பெரிய பெரிய ஏடுகளை ! எழுதுவார்கள் அழகழகான கட்டுரைகளை ! கூடிப் பேசுவார்கள் சிறிய மண்டபங்களில், போலீஸ் பாதுகாப்புப் பெற்றுக் கொண்டு ! இங்கு ?

இங்கா ! அவர் பேசாத நாள் உண்டா ? குரல் கேட்காத ஊர் உண்டா ? அவரிடம் சிக்கித் திணறாத 'பழமை' உண்டா ? எதைக் கண்டு அவர் திகைத்தார் ! எதற்கு அவர் பணிந்தார் ? எந்தப் புராணம் அவரிடம் தாக்குதலைப் பெறாதது ! ஏ ! அப்பா ! ஒரே ஒருவர், அவர் நம்மை அச்சு வேறு, ஆணி வேறாக எடுத்தெடுத்து வீசுகிறாரே, என்று இந்நாட்டை என்றென்றும் விடப் போவதில்லை என்று எக்காளமிட்டுக் கொண்டிருந்த 'பழமை' அலறலாயிற்று ! புதுப்புது பொருள் கொடுத்தும், பூச்சு மெருகு கொடுத்தும் இன்று பழமையின் சில பகுதிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன என்றாலும், விழுந்த அடியால் அடித்தளம் நொறுங்கிப் போய் விட்டிருக்கிறது என்பதனை அறியாதார் இல்லை !

எனவேதான் பெரியாருடைய பெரும் பணியை, நான் ஒரு தனி மனிதனின் வரலாறு என்றல்ல. ஒரு சகாப்தம் ஒரு காலகட்டம்... ஒரு திருப்பம்... என்று கூறுவது வாடிக்கை.

அக்கிரமம் தென்படும்போது, மிகப் பலருக்கு அது தன்னைத் தாக்காதபடி தடுத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணமும், ஒதுங்கிக் கொள்வோம் என்ற பாதுகாப்பு உணர்ச்சியுந்தான் தோன்றும். எதிர்த்து நிற்க வேண்டும் என்ற எண்ணம் எளிதில் எழுவதில்லை.

பெரியார், அக்கிரமம் எங்கு இருந்திடக் கண்டாலும், எந்த வடிவிலே காணப்படினும், எத்துணை பக்கபலத்துடன் வந்திடினும், அதனை எதிர்த்துப் போரிடத் தயங்குவதில்லை.

அவர் கண்ட களம் பல; பெற்ற வெற்றிகள் பலப்பல ! அவர் தொடுத்த போர் நடந்தபடி இருக்கிறது ! அவர் வயது 89 ! ஆனால் போர்க்களத்திலேதான் நிற்கின்றார் !

அந்தப் போரில், ஒரு கட்டத்தில் அவருடன் இருந்திடும் வாய்ப்பினைப் பெற்ற நாட்களைத்தான் 'வசந்தம்' என்று குறிப்பிட்டேன்.

மேலும் பல ஆண்டுகள் அவர் நம்முடன், நமக்காக, வாழ்ந்திக்க வேண்டும். தமிழர் வாழ்வு நல்வாழ்வாக அமைவதற்கு பன்னெடுங்காலமாக இருந்துவரும் கேடுகள் களையப் படுவதற்கு அவருடைய தொண்டு தொடர்ந்து அளிக்கப்பட்டுவரும் என்பதில் அய்யமில்லை.

வாழ்க பெரியார்.

## சென்னை மாவட்ட கழகம் நடத்தும் பெரியார் பிறந்த நாள்; அண்ணா நூற்றாண்டு விழா பொதுக் கூட்டம்

29.9.2009 செவ்வாய் கிழமை மாலை 5 மணியளவில் சென்னை மந்தைவெளி மார்கெட் அருகில் ஈரோட்டு பூகம்பம் முரசொலி முகிலனின் கலை நிகழ்ச்சியுடன் துவங்கும் இக்கூட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர்கள் கோவை கு. இராமகிருட்டிணன், விடுதலை இராசேந்திரன், இயக்குநர் சுந்தரராஜன், வழக்கறிஞர் செ. துரைசாமி மற்றும் பொறுப்பாளர்கள் உரையாற்றுவர். மக்கள் உயிரோடு விளையாடும் சாமியார்களை கைது செய் என்ற முழக்கத்தோடு நடக்கும் பகுத்தறிவு விழிப்புணர்வு ஊர்வலம் மற்றும் தீமிதி நிகழ்ச்சியினை கழகத் துணைத் தலைவர் ஆனூர் ஜெகதீசன் துவக்கி வைப்பார். பேரணி, பொதுக் கூட்ட வெற்றிக்காக சென்னை கழகத் தோழர்கள் பம்பரமாக சுழன்று பணியாற்றி வருகிறார்கள்.

## வில்லிவாக்கம் குணசீலன் மறைந்தார்; ஆனூரார் இறுதி மரியாதை

வடசென்னை மாவட்ட திராவிடர் கழக தலைவரும், நீண்ட நாள் பெரியார் தொண்டருமான அ.குணசீலன் (80) 12.9.2009 அன்று வில்லிவாக்கத்தில் அவரது இல்லத்தில் முடிவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். கழகத் துணைத் தலைவர் ஆனூர் ஜெகதீசன் மற்றும் கழகத் தோழர் சேத்துப்பட்டு ராசேந்திரன் இல்லம் சென்று இறுதி மரியாதை செலுத்தினர்.

## நன்கொடை


கழகத் தோழர்கள் சேலம் பாலு - மேட்டூர் சக்தி ஆகியோர் பங்குதாரர்களாக இணைந்து - சேலத்தில் 'நானோ பவர் நீர் சுத்திகரிப்பு' நிறுவனம் தொடங்கியதையொட்டி கழக ஏட்டிற்கு ரூ.5000/- நன்கொடையாக கழகத் தலைவரிடம் வழங்கியுள்ளனர். கடந்த இதழில் ரூ.500 என்று தவறாக வந்துள்ளதற்கு வருந்துகிறோம். - (ஆர்)

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. ✆ 9840940400

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 17th September 2009

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.




# புரட்சிப் பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2040 செப்டம்பர் 24, 2009 புரட்சி 8 முழக்கம் 37 விலை: ரூ.2.50


# கழகம் எடுத்த பெரியார் பிறந்த நாள் விழா!





### சேலம்

தந்தை பெரியார் 131வது பிறந்த நாள் விழா சேலம் மாவட்டம் முழுவதும் இரு சக்கர வாகன பேரணி மூலம் கொண்டாடப்பட்டது. மாவட்டம் முழுவதும் தோழர்கள் 131 என திட்டமிடப்பட்டதற்கு மேலாக 160 இரு சக்கர வாகனங்களுடன் சேலத்தில் கூடினர். முன்னதாக ஒலிபெருக்கிப் பொருத்தப்பட்ட ஒரு வாகனத்தில் பிறந்த நாள் குறித்தும், பெரியார் குறித்தும் விளக்கியபடி முன் செல்ல கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் ஊர்வலமாக சென்று பெரியார் சிலையை அடைந்தனர். காலை 8.30 மணியளவில் பெரியார் சிலைக்கு கழகத்தலைவர் கொளத்தூர் மணி மாலை அணிவித்தார். கழகக் குடும்பத்தினர் பலர் குழந்தைகளுடன் வந்திருந்தனர்.

பாரப்பட்டி, சிந்தாமணியூர், அம்மாப்பேட்டை, அம்மாபேட்டை பேருந்து நிறுத்தம், தாதகாபட்டி, பெரியார் நூலகம், தாதகாபட்டி பேருந்த நிறுத்தம், உத்திரப்பன் காடு, அண்ணா நகர், அன்னதானப் பட்டி, தாதகாபட்டி சீரங்கன் தெரு, ஜங்ஷன், பெத்தாம்பட்டி, முருங்கப்பட்டி, இலகுவம்பட்டி பேருந்து நிறுத்தம், ராசி கவுண்டனூர், வனவாசி, நங்கவள்ளி, மேச்சேரி பேருந்து நிறுத்தம், மல்லிகுந்தம், மேட்டூர் திலீபன் நகர், மேட்டூர் பேருந்து நிலையம், மேட்டூர் படிப்பகம் ஆகிய இடங்களில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி கொடியேற்றி வைத்தார்.

நங்கவள்ளி பெயர்ப் பலகையையும், மேட்டூர் திலீபன் நகர் பெயர்ப் பலகையையும், திலீபன் நகரில் புதிதாக நிறுவப்பட்டுள்ள பெரியார் பிறந்த நாள் விழா பெரியார் புரட்சி மொழிகள் கொண்ட கல்வெட்டையும் கழகத் தலைவர் திறந்து வைத்தார்.

மேலும் கீழ்க்கண்ட இடங்களில் -

பவளத்தானூர் - செ. மார்ட்டின்; பனங்காடு - கே.செந்தில்குமார்; இராமன் நகர் - பழ. ராஜசேகர்; சாம்பள்ளி - ஆ. ஜம்பு; என்.எஸ்.கே. நகர் - மா. மாதேஸ்; தேசாய் நகர் - பெ. செல்வம்; ஆர்.எஸ். - செ. மார்ட்டின்; தங்கமாபுரிப்பட்டணம் - சு. முருகேசன்; தெர்மல் - ந. பிரகாஷ்; மாதயன் குட்டை - வே. சித்ரா; பெரியார் தெரு - இரா. இளவரசன்; ஐ.சி.ஹெச் - கோ. சண்முகம்; தூக்கணாம்பட்டி - செ. கணேஷ்; காவேரி நகர் - த. இளமதி; பழைய மார்க்கெட் - அ. சக்திவேல்; சிறிய பூங்கா - சி. கோவிந்தராசன்; பெரியார் நகர் - கதிரேசன்; பாரதி நகர் - இரா. முத்துராஜ்; குமரன் நகர் - செ. மார்ட்டின்; சதுரங்காடி - செ. மார்ட்டின் ஆகியோர் கொடியேற்றினர்.

சேலம் நகரில் பல்வேறு பகுதிகளில் கொடியேற்றிவிட்டு புறப்பட்ட இரு சக்கர வாகன பேரணி இளம்பிள்ளை, தாரமங்கலம், நங்கவள்ளி, மேச்சேரி, மல்லிருந்தம், கந்தனூர், குஞ்சாண்டியூர் வழியாக மேட்டூர் வந்தடைந்தது. சேலத்தில் காலை சிற்றுண்டி சேலம் வீரமணி வீட்டில் வழங்கப்பட்டது. மதிய உணவை மல்லியகுந்தத்தில் செட்டியூர் வழக்கறிஞர் இராஜன் ஏற்பாடு செய்திருந்தார். கொடியேற்றிய இடங்களிலெல்லாம் இனிப்புகள், பிஸ்கெட்டுகள், குளிர் பானங்கள் தோழர்களுக்கு வழங்கப்பட்டன.

சேலம் மாவட்டம் கந்தனூரில் 'நாம் தமிழர் இயக்கம்' சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது. நாம் தமிழர் இயக்கத்தைச் சார்ந்த தோழர்கள், தேனீர், பிஸ்கெட் ஆகியவற்றை தோழர்களுக்கு வழங்கினர். இரு சக்கர வாகன பேரணியில் சேலம், மேட்டூர், கொளத்தூர், காவலாண்டியூர், ஆர்.எஸ்., இளம்பிள்ளை, நங்கவள்ளி மற்றும் நாம் தமிழர் இயக்கத் தோழர்கள் 10 இரு சக்கர வாகனங்களிலும் கலந்து கொண்டனர். அனைத்து நிகழ்வுகளிலும் ஆத்தூர் சண்முகம் கலந்து கொண்டார். ஏற்காடு தோழர்கள் தனி வேனில் வந்து கலந்து கொண்டனர்.

மாவட்டம் முழுவதும் அய்யா பிறந்த நாள் பதாகைகள் மிகச் சிறப்பாக கட்டப்பட்டிருந்தன. பெரியார் கருத்துகளையும், கழகம் கடந்த 8 ஆண்டு களில் செய்த களப் பணிகளையும் குறிப்பிட்டு 5000 துண்டறிக்கைகள் பொது மக்களிடம் விநியோகிக் கப்பட்டன.

விழாவிற்கான ஏற்பாடுகளை மாவட்ட தலைவர் செ. மார்ட்டின், மாவட்ட செயலாளர் அ. சக்திவேல் ஆகியோர் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

*மேலும் செய்திகள் 4 ஆம் பக்கத்தில்*

## 'குடிஅரசு' வழக்கு மீண்டும் அக்.6–க்கு தள்ளி வைப்பு

# கி.வீரமணி வழக்கறிஞரிடம் நீதிபதி கண்டிப்பு

'குடி அரசு' தொகுப்புகளை பெரியார் திராவிடர் கழகம் வெளியிடக் கூடாது என்று பெரியார் சுயமரியாதை பிரச்சார நிறுவனத்தின் சார்பில் கி.வீரமணி தொடர்ந்த வழக்கு செப். 17 ஆம் தேதி சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிபதிகள் எம். சொக்கலிங்கம், ஆர். சுப்பையா அடங்கிய அமர்வின் முன் விசாரணைக்கு வந்தது. கி.வீரமணி சார்பில் நேர்நின்ற (ஆஜரான) வழக்கறிஞர் வீரசேகரன், தங்களது மூத்த வழக்கறிஞர் வர இயலாத காரணத்தால் வேறு தேதிக்கு தள்ளி வைக்கக் கோரினார். கழக சார்பில் நேர் நின்ற மூத்த வழக்கறிஞர் தியாகராசன், ஒவ்வொரு முறையும் இப்படி வழக்கை நடத்தாது தள்ளி வைக்கவே கி.வீரமணி தரப்பினர்கோரி வருவதை சுட்டிக்காட்டி எதிர்ப்பு தெரிவித்தார்.

"பதிப்புரிமை சட்டத்தின் கீழ் உரிமை கோர முடியாத வழக்கு இது; பெரியார் பதிப்புரிமை எதையும் எழுத்து பூர்வமாக எழுதித் தரவில்லை; தங்களுக்கு பதிப்புரிமை உண்டு என்று அவர்கள் வாதிடுவதை ஏற்றுக் கொண்டாலும், சுயமரியாதை பிரச்சார நிறுவன நிறுவப்பட்ட காலத்தின் - சட்டப்படி பதிப்புரிமையின் ஆயுள்காலம் 25 ஆண்டு காலம் தான். பெரியார் இறந்தே 36 ஆண்டுகள் ஆகிவிட்டது. எனவே எந்த சட்ட உரிமையும் இல்லாத ஒரு வழக்கில் தடை வாங்கிக் கொண்டு வழக்கு விசாரணைக்கு வரவிடாது, ஒவ்வொரு முறையும் தள்ளி வைப்பு கேட்டு வருகிறார்கள்" என்று குறிப்பிட்டார்.

வீரமணி வழக்கறிஞர் வீரசேகரனிடம், நீதிபதி எம்.சொக்கலிங்கம் அவர்கள் தனது கண்டனத்தைத் தெரிவித்தார். "நீங்கள் தடையை பெற்றுக் கொண்டு வழக்கு விசாரணைக்கு வரும் போதெல்லாம் தள்ளி வைக்க வேண்டும் என்று கோருவது நியாயமல்ல; இதனால் எதிர்தரப்பினர் மீதான தடை நீடித்துக் கொண்டே வருவதால், அவர்களின் உரிமை மறுக்கப்படுகிறது. வேண்டுமானால் நான் தடையை நீக்கி விடுகிறேன். பிறகு, நீங்கள் வழக்கை உங்கள் வசதியான நேரத்தில் நடத்திக் கொள்ளுங்கள். அதற்குத்தயாரா என்று நீதிபதி கேட்டார். வீரமணி வழக்கறிஞர் அதை ஏற்க மறுத்தபோது, தடையையும் நீக்கக் கூடாது, வழக்கையும் நடத்தக்கூடாது என்று கூறுவது நீதிமன்ற செயல்பாடுகளை முடக்குவதாகும். அதை அனுமதிக்க முடியாது என்று நீதிபதி கண்டிப்பாகக் கூறினார்.

வழக்கை அக்டோபர் 6 ஆம் தேதிக்கு ஒத்தி வைப்பதாக கூறிய நீதிபதி, "அன்று நீங்கள் வழக்கில் வாதாட முன்வரவில்லையானால், உங்களது வழக்கு மனுவை தள்ளுபடி செய்து விடுவேன்" என்று கண்டிப்பாகக் கூறினார். கழக சார்பில் வழக்கறிஞர் துரைசாமி, இளங்கோ ஆகியோர் நேர்நின்றனர். வழக்கறிஞர் குமாரதேவன், விடுதலை இராசேந்திரன், உமாபதி உள்ளிட்ட தோழர்கள் நீதிமன்றம் வந்திருந்தனர்.

**தலையங்கம்**

## உலகத் தமிழ் மாநாடா?

கோவையில் அடுத்த ஆண்டு (2010) 9வது உலகத் தமிழ் மாநாட்டை தமிழக முதல்வர் கலைஞர் அறிவித்துள்ளதோடு, மாவட்ட அதிகாரிகள் உடனடியாக அதற்கான பணிகளைத் தொடங்கிட வேண்டும் என்று அறிவுறுத்தியிருப்பதாக செய்திகள் வந்துள்ளன.

உலகத்திலே தமிழனுக்கு ஒரு நாடு வேண்டும் என்பதற்காக போராடிய மகத்தான விடுதலை இயக்கத்தை முற்றிலும் ஒழிப்பதற்கு துணை நின்றது இந்திய பார்ப்பன ஆட்சி. இந்த துரோகத்தைத் தட்டிக் கேட்காமல் பல்லாயிரம் தமிழர்களை இனப்படுகொலைக்கு உள்ளாக்கிய இந்திய பார்ப்பன ஆட்சியின் ரத்தக்கறை படிந்த கரங்களோடு நேசக்கரம் நீட்டி ‘கூட்டணி தர்மங்களை’ உயர்த்திப் பிடித்துக் கொண்டிருந்தது – கலைஞர் தலைமையிலான தி.மு.க. ஆட்சி. இந்த மகத்தான துரோகம் அரங்கேறி, தமிழினத்தின் மரண ஓலங்கள் அடங்கிடாத நிலையில் தமிழ்நாட்டில் உலகத் தமிழ் மாநாடு என்ற கேளிக்கை கொண்டாட்டங்களை நடத்தினால் உலகத் தமிழினம் கைகொட்டி நகைக்குமே தவிர, தமிழின் பெருமையை பேசப் போகிறார்கள் என்று தலை நிமிர்ந்து நிற்காது.

1967 ஆம் ஆண்டு அண்ணா ஆட்சிக்கு வந்தவுடன் உலகத் தமிழ் மாநாடு நடத்திய போதே அதை கடுமையாக விமர்சித்தவர் தந்தை பெரியார். “பல கோடி ரூபாய் அரசு பணம் வீண் விரயமாவதைத் தவிர, இந்த மாநாடுகளால் காதொடிந்த ஊசிப் பயனும் ஏற்படப் போவது இல்லை” என்று கூறிய பெரியார் மற்றொரு மகாமகத் திருவிழா என்றார்.

தஞ்சையிலே தமிழுக்காக ஒரு பல்கலைக் கழகம் நிறுவப்பட்டுள்ளது. அந்தப் பல்கலைக் கழகத்துக்கு முறையான தேவையான நிதி ஒதுக்கீடு இல்லாமல் அது பெயரளவுக்கு ஒரு பல்கலைக்கழகமாக இருக்கிறது. அவ்வளவு தான். உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தை உலகத் தமிழ் மாநாட்டின் நினைவாக முதல்வர் அண்ணா சென்னை அடையாறு – தரமணியில் தொடங்கினார். அதுவும் முடங்கிப் போய் கிடக்கிறது. இப்போது தமிழ் செம்மொழியாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அதற்கான ஆய்வு நிறுவனம் சென்னையில் தொடங்கப்பட்டது. கடற்கரை சாலையில் அதன் பெயர் பலகையைப் பார்க்க முடிகிறதே தவிர, நிறுவனம் எந்தப் பணியையும் செய்வதாகத் தெரியவில்லை.

சமூக சீர்திருத்தக் குழு ஒன்று பேராசிரியர் நன்னன் தலைமையில் முதல்வர் கலைஞர் கருணாநிதி உருவாக்கினார். அந்தக் குழுவும் குறட்டை விட்டு உறங்கிக் கொண்டிருக்கிறது. தம்முடைய ஆட்சி காலத்தில் உலகத் தமிழ் மாநாட்டை நடத்திய ‘வரலாற்றுச் சிறப்பை’ புகழ் மகுடத்தில் சூட்டிக் கொள்வதற்கு வேண்டுமானால் இந்த மாநாடுகள் பயன் பெறுமே தவிர, வேறு எந்த சாதனைகளையும் இது நிகழ்த்தப் போவது இல்லை.

தமிழைப் பயிற்சி மொழியாக்கவும், அறிவியல் மொழியாக வளர்க்கவும், மக்களின் அன்றாடப் பயன்பாட்டுக்கு தமிழை வளர்ப்பதில் தனிக்கவனம் செலுத்தவும் எந்த முயற்சிகளும் மேற்கொள்ளாத நிலையில், ஈழத்தில் தமிழினம் அழிந்தொழிக்கப்பட்டு நிற்கும் அவலச் சூழலில் இத்தகைய கொண்டாட்டங்களை நடத்துவது மக்களின் கவனத்தை திசை திருப்பும் நடவடிக்கையாகவே கருத வேண்டியிருக்கிறது.

அண்ணா நூற்றாண்டில் கலைஞர் புகழ் மாலைகள் சூட்டப்பட்டு ஓய்ந்த நிலையில், இனி உலகத் தமிழ் மாநாட்டின் வழியாக பாராட்டு மாலைகள் அவர் தோள் மீது குவியப் போகிறது; அவ்வளவுதான்!

# முடக்கப்படும் புரட்சிக் கருத்துக்கள்

***தோழர்கள் பிரபஞ்சன், பாமரன் கட்டுரைகளைத் தொடர்ந்து, ‘தி சண்டே இந்தியன்’ வார ஏட்டில் (ஆகஸ்டு 14) அதன் செய்தியாளர் சுந்தரபுத்தன் எழுதியுள்ள கட்டுரையை வெளியிடுகிறோம் – ஆர்.***

பெரியார் மறைந்து பல ஆண்டுகளுக்குப் பிறகும் அவரது எழுத்தும் பேச்சும் சகோதர மோதலில் சிக்கியுள்ளது. ‘குடிஅரசு’ இதழ்களில் வெளிவந்த அவரது கட்டுரைகளையும் பேச்சுக்களையும் தொகுத்து பெரியார் திராவிடர் கழகம் நூல்களாக வெளியிட முயன்று வருகிறது. ஆனால், இதற்கு திராவிடர் கழகம் மறுப்புத் தெரிவித்ததுடன் வழக்கும் தொடர்ந்தது. இது தொடர்பாக உயர்நீதிமன்றம், ஜூலை 27 ஆம் தேதியன்று வழங்கிய தீர்ப்பில் பெரியார் எழுத்துக்களை வெளியிடுவதற்கு எந்தத் தடையுமில்லை என்று உத்தரவிட்டது. இதைத் தொடர்ந்து மேல் பெஞ்சுக்கு சென்று காப்புரிமை பெறாமல் நூலை வெளியிடக் கூடாது என்று நீதிமன்றத்தில் திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி தடையாணை பெற்றுள்ளார்.

தமிழகத்தில் பாரதியார் தொடங்கி பல படைப்பாளர்கள் மற்றும் சிந்தனையாளர்களின் நூல்கள் நாட்டுடைமை யாக்கப்பட்டுள்ளன. அவற்றை யாரும் வெளியிடுவதற்கான உரிமை வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் ஒரு சமூகத்தையே தன் எழுத்தால் பேச்சால் விழிப்புணர்வு பெற வைத்த சமூகச் சிந்தனையாளரான தந்தை பெரியாரின் எழுத்துக்கள் நாட்டுடைமையாக்கப்படுமா? அவை ஏன் நாட்டுடைமையாக்கப்படவில்லை என்ற கேள்வி இன்று தமிழ்ச் சிந்தனைக் களத்தில் எழுந்துள்ளது.

கடந்த சில நாட்களாக திராவிடர் கழக நாளிதழான ‘விடுதலை’யில் பெரியாரின் எழுத்துக்களை வெளியிடுவதற்கான உரிமை யாருக்கு இருக்கிறது என்பது பற்றிய தொடர் கட்டுரைகள் வெளியிடப்பட்டு வருகின்றன. “மாபெரும் புரட்சியாளரின் கருத்துக்களில் ஓர் அரைப் புள்ளியை மாற்றினால்கூட கருத்துகள் மாறுபட்டுவிடும். புத்தருக்குப் பின் தோன்றிய ஜாதகக் கதைகள் என்கிற அனுபவம் ஏற்கெனவே எச்சரித்துக் கொண்டு இருக்கிறது. பெரியாரின் கொள்கைகளில் அக்கறையும் மதிப்பும் உடையவர்கள் அவரது கருத்துக்குத் திரிபுவாதம் வந்துவிடக் கூடாது; இடைச் செருகல் வந்துவிடக் கூடாது என்பதிலே கவனமாக இருப்பார்கள்” என்றும் தசஇ (தி சண்டே இந்தியன்) யிடம் பேசும்போது தி.க. பொதுச் செயலாளர் கலி.பூங்குன்றன் சுட்டிக் காட்டினார். பெரியார் நூல்களை யாரும் வெளியிடலாம் என்று அதிகார பூர்வமாக திறந்துவிட்டால் என்ன ஆகும்? ஈ.வி.ராமசாமி நாயக்கர் வரலாற்று நூல் என்று சிப்பி புக்ஸ் வெளியிட்டுள்ளது. 1927 ஆம் ஆண்டி லேயே தம் பெயரிலிருந்து சாதி அசிங்கத்தைத் தூக்கி யெறிந்தவரை இதைவிட எப்படி கொச்சைப்படுத்த முடியும். இப்படித்தான் நூல்கள் வெளிவரும் என்று சான்று காட்டுகிறார் அவர்.

சமூக ஆர்வலரும் எழுத்தாளருமான அ. மார்க்ஸ் இக்கருத்தை மறுக்கிறார். “திராவிட இயக்கத்தின் நிறுவனரான பெரியாரின் எழுத்துக்கள் முப்பது வருடங்களுக்கும் மேலாக முடங்கிக் கிடப்பது வருத்தத்திற்குரியது. அவரது எழுத்தைத் திரித்து விடுவார்கள் என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. திராவிடர் கழகம் தயாரித்த பெரியார் படத்தில் ‘பார்ப்பனர்’ என்கிற வார்த்தையையே பயன்படுத்தாத இவர்கள் இப்படிப் பேசுவதற்கு எந்த உரிமையுமில்லை. சிலர் திட்டமிட்டு உருவாக்கிய பெரியார் ஒரு தலித் விரோதி என்ற பிம்பம் வடநாடுகளில் பரவியிருக்கிறது. அதை முறியடிப்பதற்கு பெரியாரின் தீண்டாமை ஒழிப்பு மற்றும் தலித்துகள் குறித்த எழுத்துக்கள் ஆங்கிலத்தில் பெரிய அளவில் வெளியிடப்பட வேண்டும். பெரியாரின் எழுத்துக்களை நாட்டுடைமையாக்குவதில் தமிழக அரசுக்கு மிகப் பெரிய கடமை இருக்கிறது. இந்திய மரபில் தோன்றிய மிக முக்கியமான சிந்தனையாளர்களான புத்தர், அம்பேத்கர், பெரியார் ஆகியோர்தான் மாற்றுச் சிந்தனை மரபை உருவாக்கியவர்கள். அதில் மிக முக்கியமாக தமிழ்நாட்டு அரசியலின் முகத்தை மாற்றிய பெரியாரின் சிந்தனைகள் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் கொண்டு செல்லப்பட வேண்டும்” என்றார்.

பெரியார் எழுத்துக்களை முழுமையாக வெளியிடவில்லை என்ற குற்றச்சாட்டை திராவிடர் கழகம் மறுக்கிறது. கடவுள், மதம், பெண்ணுரிமை, சாதி, தீண்டாமை என்ற தலைப்புகளில் பெரியார் களஞ்சியம் என்ற பெயரில் 31 தொகுதிகளை கொண்டு வந்துள்ளதாகச் சொல்கிறார்கள். ஒவ்வொரு நூலும் 300 பக்கங்களைக் கொண்டது. ஒரு நூலின் விலை 50 ரூபாய். ஆனால் இப்படி திராவிடர் கழகம் வெளியிட்டுள்ளதாகச் சொல்லும் பெரியார் களஞ்சியம் நூல்களைக்கூட, நாங்கள் குடிஅரசு இதழ்த் தொகுப்புப் பற்றிய அறிவிப்பைச் செய்த பின்னர்தான் அவசர அவசரமாக வெளியிட்டனர் என்று தசஇயிடம் பேசும்போது பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தெரிவித்தார்.

முதலில் 2003 ஆம் ஆண்டுதான் பெரியார் தி.க.வினர் 1925 ஆம் ஆண்டைய ‘குடிஅரசு’ இதழில் வெளிவந்த பெரியார் எழுத்து மற்றும் பேச்சுக்களைத் தொகுத்து 250 பக்க நூலாகக் கொண்டு வந்தனர். அதன் பின் 2005 இல் குடிஅரசு இதழ்களில் வெளிவந்த பெரியாரின் எழுத்துக்களை நானூறு பக்க அளவில் இரு தொகுப்புகளாக வெளியிட்டனர். ஆண்டுக்கு ஒரு நூல் என்ற அளவில் வெளியிட்ட பெரியார் தி.க.வினர், அடுத்தடுத்த ஆண்டுகளில் (2006, 2008) கிடைக்காத குடிஅரசு இதழ்களையும் சேர்த்து திருத்திய பதிப்பாக 27 தொகுதிகளாக வெளியிட திட்டமிட்டனர். இதுதான் சர்ச்சையின் ஆரம்பப் புள்ளி. அதோடு பெரியார் ஆங்கிலத்தில் 1928-29 ஆண்டில் நடத்திய ‘ரிவோல்ட்’ இதழ்களின் கட்டுரைகளையும் தொகுத்து 650 பக்கங்களில் வெளியிட பெரியார் தி.க. திட்டமிட்டது. அவர்களுக்கு 55 இதழ்களில் 42 இதழ்களே கைக்குக் கிடைத்தன. இந்நூல்கள் பற்றிய அறிவிப்பை அவர்கள் 2008 ஜூலையில் வெளியிட்டனர். இதைக் கண்ட திராவிடர் கழகம் தடையாணை வாங்கியது.

இச்சர்ச்சைப் பற்றி விரிவாகப் பேசிய கொளத்தூர் மணி, “1978 ஆம் ஆண்டு மணியம்மையார் தலைவராக இருந்தபோது பெரியார் கடவுள் பற்றி பேசிய கருத்துக்களையெல்லாம் தொகுத்து நூலாக வெளியிட்டார். 1995 இல் நான்கு தொகுப்புகளை வெளியிட்டார்கள். அதன் பிறகு பல ஆண்டுகள் எந்தத் தொகுப்பும் வெளிவரவில்லை. கால வரிசைப்படி எழுத்துக்களை வெளியிடும்போதுதான் பெரியார் சிந்தனைகளின் பரிணாம வளர்ச்சியை அடைய முடியும். 1983 இல் பல ஆய்வாளர்களைக் கொண்ட குழு அமைக்கப்பட்டு பெரியார் எழுத்துக்களை தொகுக்கும் பணி நடந்தது. ஆனால் இது வரையில் ஏன் அவற்றை வெளியிடவில்லை? முதல் குடிஅரசு இதழ்கூட திராவிடர் கழகத்திடம் இல்லை. இப்படி பல இதழ்கள் இல்லை. அதற்கான முயற்சிகளையும் செய்யவில்லை” என்றார்.

மேலும் தொடர்ந்த அவர், “ஏற்கெனவே ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் பெரியாரின் குடிஅரசு இதழ்களைத் தொகுக்க ஒப்புதல் பெற்றது. ஆனால், அப்போது அ.தி.மு.க.விடம் நெருக்கமாக இருந்த கி.வீரமணி அந்தப் பணியை நடைபெறவிடாமல் தடுத்துவிட்டார். பதிப்புரிமை சட்டவிதிகள்படி பொது இடங்களில் ஆற்றிய உரைகள் காப்பிரைட் சட்டத்திற்குள் வராது என்று அறிவிக்கிறது. இச்சட்டப்பிரிவுகளைக் கொண்டே நாங்கள் மீண்டும் நீதிமன்றம் செல்வோம்” என்று உறுதியான குரலில் வாதிடுகிறார்.

சட்டமேதை பி.ஆர். அம்பேத்கரின் நூல்களை அரசின் தன்னாட்சி நிறுவனமான அம்பேத்கர் பவுண்டேஷன் வெளியிடுகிறது. வி.பி. சிங் பிரதமராக இருந்த காலத்தில்தான் அவரது பெயரில் பவுண்டேஷன் தொடங்கப்பட்டது. “ஆனால் வெளியில் பலரும் அம்பேத்கரின் நூல்களை வெளியிட்டாலும் நம்புவதற்குரியதாக அவையே இருக்கின்றன. பெரியாரின் எழுத்துக்கள் எல்லோராலும் வெளியிடுப்படும் போது, அவரது அடிப்படையான கொள்கைகள் திரிபுடுத்தப்படும் வாய்ப்புகள் நிறைய இருக்கின்றன. பெரியாரது நூல்களை அரசு முறையாக வெளியிடும் என்று அறிவித்தால் அதை வரவேற்கலாம். ஆனால் எதார்த்தத்தில் நாட்டுடமையாக்கிய எல்லோரது நூல்களையும் அரசு வெளியிடுவதில்லை” என்று மாற்றுக் கருத்தை வைக்கிறார் ‘தலித் முரசு’ இதழின் ஆசிரியர் புனித பாண்டியன்.

பெரியார் மறைந்து 36 ஆண்டுகள் கடந்த பின்பும் அவரது கொள்கைகள் சமுதாயத்தின் பல தரப்பிடமும் போய் சேரவும், சிந்தனைகள் மக்களை அடையவும் முழுமையான முயற்சிகள் செய்யப்படவில்லை என்பதும், அதோடு காந்தி, நேரு, அம்பேத்கர், விவேகானந்தரின் நூல்களைப்போல கால வரிசைப்படி பெரியாரின் எழுத்துக்களும், பேச்சுக்களும் கிடைக்கவில்லையே என்பதும் பலரது கவலையாக மிஞ்சியிருக்கிறது. ●

## ராணுவ வாகன மறிப்பு போராட்டம் ‘வைகோ’ பாராட்டு

# மரணத்தை கருதாது தமிழர்களின் மானம் காத்த வீரர்கள்

***அடக்குமுறை சட்டங்களைத் தகர்த்து, சிறை மீண்ட போராளிகளுக்கு வரவேற்பு அளிக்கும் பொதுக் கூட்டம், பெரியார் திராவிடர் கழகத்தின் சார்பில் 18.8.2009 அன்று, சென்னை புரசைவாக்கத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பங்கேற்ற மறுமலர்ச்சி தி.மு.கழகப் பொதுச் செயலாளர் வைகோ, சிறை சென்ற தோழர்களுக்குப் பொன்னாடை அணிவித்து பாராட்டுத் தெரிவித்தார். அவரது உரையிலிருந்து:***



மே திங்கள் இரண்டாம் நாள் கொங்கு மண்டலத்தில் மாநகர் கோவையை அடுத்துள்ள நீலம்பூர் சாலையில், ‘ஈழத் தமிழர்களை அழிப்பதற்கு இந்திய அரசால் அனுப்பப்படவிருந்த இந்திய ஆயுதங்களை ஏந்தி வந்த இராணுவ வாகனங்களைத் தடுக்க வாரீர்’ என்று முழங்கி, உயிருக்கு ஆபத்து நேரும் என்றபோதும் அஞ்சாமல், மரணத்தைப் பற்றிக் கவலைப்படாமல், தமிழ்நாட்டின் தன்மான உணர்வை நிலைநாட்டிய வீரர்களான கோவை இராமகிருட்டிணன், அருமைத் தோழர் மானமிகு இலட்சுமணன், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோவை மாநகர் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தம்பி சந்திரசேகரன், கழகத்தின் கண்மணி வேலுசாமி, அந்தப் போர்க்களத்துக்குத் துணிந்து சென்ற குட்டிமணி என்கின்ற வீரமணி ஆகிய தோழர்கள் தேசப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சிறைக் கொட்டடியில் அடைக்கப்பட்ட அக்கிரமத்தைக் கண்டித்து, கோவை மாநகரில் பெரியார் திராவிடர் கழகத் தோழர்களோடு இணைந்து ஒரு மாபெரும் பொதுக் கூட்டத்தை நடத்தினோம்.

ஏறத்தாழ 90 நாட்கள் கோவை நடுவண் சிறையில் அடைபட்டு மீண்டு வந்துள்ள தோழர்களின் தன்மான உணர்ச்சியையும் வீரத்தையும் பாராட்டுகின்ற விதத்தில், தலைநகர் சென்னையில் இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்த பெரியார் திராவிடர் கழக நிர்வாகிகளுக்கு என்னுடைய இதயம் நிறைந்த பாராட்டுகளைத் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.

அடக்குமுறையை எதிர்த்துப் போராடிச் சிறை சென்று மீண்டு வந்த தோழர்களுக்கு தலைநகர் சென்னையில் பாராட்டுக் கூட்டம். ஏற்பாடு செய்து இருக்கின்ற அமைப்பு பெரியார் திராவிடர் கழகம். என்ன இருந்தாலும் பழைய பாசம் கலைஞருக்கு இல்லாமலா போகும்? அவர் பெரியார் குருகுலத்தில் வளர்ந்தவர் என்று தானே கூறுகிறார்? பெரியாரின் சுட்டு விரலைப் பற்றித்தான் பெரியார் மாளிகையில் உலவினேன் என்று பலமுறை கூறுகிறாரா?

ஆகவே, ஒரு வீரனை எப்படி பாராட்டுவது என்று அவருக்குத் தெரியும் என்பதால்தான் இந்தக் கூட்டம் நடைபெறுகிற இந் நாளில், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளருடைய அறிவிப்பு ஏடுகளில் வெளியாகி இருக்கிறது. நாங்கள் பிரபாகரனின் படத்தைக் காட்டினாலோ, பெயரைப் பயன்படுத்தினாலோ மேடை நிகழ்ச்சிகளில் ஒலி பரப்பினாலோ, ஒளிபரப்பினாலோ, தொலைக் காட்சி சின்னத்திரைகளில் இடம் பெறச் செய்தாலோ மீண்டும் அடக்குமுறைச் சட்டம் பாயும் என்ற அறிவிப்பு மிகப் பொருத்தமாக இந்த நாளில் வந்திருப்பதால், சிறை சென்று மீண்டு வந்த தோழர்களை உரிய முறையில் தமிழக முதலமைச்சர் வரவேற்று இருக்கிறார் என்றுதான் நான் கருதுகிறேன்.

நம்முடைய அருமைச் சகோதரர் கோவை இராமகிருட்டிணன் மிகத் தெளிவாகச் சொன்னார்கள். இராணுவ வாகனங்களில் பாதுகாப்புக் கடமையைச் செய்வதற்காக வந்த இந்தியச் சிப்பாய்களைத் தாக்குவது எங்கள் நோக்கம் அல்ல. இந்திய இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்துகின்ற திட்டம் எங்களிடம் இல்லை. ஆனால், எடுத்துச் செல்லப்படுகின்ற ஆயுதங்கள், எங்கள் ஈழத் தமிழர்களை அழிப்பதற்காக கொலை வெறியன் ராஜபக்சேவின் கைகளை வலுப்படுத்துவதற்காக, அந்தக் கொலைகாரக் கூட்டத்துக்கு அனுப்பப் படுகிறது என்பதால் அதைத் தடுப்பதற்காகச் சென்றோம்’ என்று குறிப்பிட்டார்.

இந்திய இராணுவ வாகனங்களை எதிர்த்து அணிவகுத்து நிற்கிறார்கள். அவர்கள் கைகளில் ஆயுதம் இல்லை. ஆனால், நெஞ்சில் பாய்ந்துவரும் துப்பாக்கிக் குண்டுகளாயினும் ஏந்துகிற வீரம் அந்தத் தோழர்களுக்கு இருந்தது. (பலத்த கைதட்டல்) மரணத்துக்கு அஞ்சாமல் அந்த மாவீரர்கள் களத்தில் நின்றார்கள். அந்த வாகனங்களில் வந்த சிப்பாய்கள் அவர்கள் துப்பாக்கிகளைப் பயன்படுத்தி இருந்தால், வீரக்களச் சாவைத்தான் என் அருமைச் சகோதரர்கள் அன்றைக்கு அடைந்து இருப்பார்கள். அதைப் பற்றி அவர்கள் கவலைப்படவில்லை. நான் அன்றைக்குச் சென்னையில்தான் இருந்தேன். அந்தச் செய்தியை அறிந்த அடுத்த நிமிடத்தில் கைத்தொலைபேசியில் கோவை இராமகிருட்டிணன் அவர்களை அழைத்து, ‘தமிழ்நாட்டில் தன்மானம் செத்து விடவில்லை என்று நீங்கள் நிரூபித்து இருக்கிறீர்கள். மொத்தத் தமிழகமும் உங்களுக்கு நன்றிக்கடன் பட்டு இருக்கிறது’ என்று சொன்னேன்.

தமிழக மக்கள் ஒன்றைச் சிந்திக்கக் கடமைப்பட்டு இருக்கிறார்கள்.

இந்திய நாட்டின் எல்லையைப் பாதுகாப்பதற்குச் சென்றதா இந்திய இராணுவம்? தமிழர்களின் வாழ்வின் துயரத்தை எண்ணி ஓலமிடுகிற வங்கக் கடலில், நம் கடற்கரை ஓரத்தில் கடலோரக் கிராமங்களில் இருந்து செல்கின்ற தமிழக மீனவர்களை கடலிலேயே சுட்டுக் கொல்கிற கொடியவர்களை, சிங்களக் கடற்படையை எதிர்த்து தடுப்பதற்குச் சென்றதா இந்திய இராணுவம்? இந்தியக் கடற்படை?

2004 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்புக்கு மன்மோகன் சிங் வந்தநாள் முதல் அந்த அரசை ஆட்டுவித்துக் கொண்டு இருக்கிற அம்மையார் சோனியா காந்தியாரின் உத்தரவின் பேரில் ஏவுதலின்பேரில், இலங்கை அரசோடு ஒப்பந்தம் போட்டுக் கொண்டு, ஈழத் தமிழர்களின் உரிமைக் குரல்வளையை அறுப்பதற்காகப் போடப்பட்ட எழுதப்படாத ஒப்பந்தத்தின்படி ஆயுதங்களை அள்ளித் தந்தார்கள். எத்தனையோ முறை நாம் அதைச் சுட்டிக்காட்டி இருக்கிறோம்.

இந்த நிகழ்ச்சியில் பேசுகிறபோது நமது வழக்கறிஞர் துரைசாமி, கொளத்தூர் மணி குறிப்பிட்டார்களே, இன்றைக்கு மூன்று இலட்சம் மக்கள் முள்வேலிகளுக்குள் அடைக்கப்பட்டு வதைபடுகிறார்கள். பெருமழை பெய்து விட்டால், சகல பாதுகாப்போடு வாழுகிற மக்களுக்கே துன்பம் என்றால், வீடிழந்து, தங்கள் சொந்த நாட்டில், சொந்தத் தாயக மண்ணில் அடிமைகளைப்போல் அடைபட்டுக் கிடக்கிறார்களே, நம் தமிழ் ஈழத்து உறவுகள், அவர்களுடைய நிலையை எண்ணிப் பாருங்கள்.

இந்த வேளையில் இங்கே மழை இல்லை; கூட்டம் பாதுகாப்பாக நடக்கிறது. அங்கே மழை கொட்டுகிறது. மலக்குழிகளில் இருக்கிற அசுத்தங்கள் அனைத்தும் வெளியேறிக் கலந்த தண்ணீர், அவர்கள் படுத்துக் கிடக்கின்ற கூடாரத்துக்கு உள்ளேயும் புகுந்துவிட்டது. உண்பதற்கு உணவு இல்லை, குடிப்பதற்குத் தண்ணீர் இல்லை, நோய்க்கு மருந்து இல்லை. ஒரு நாளல்ல, இரு நாளல்ல, மாதக் கணக்கில். உலகில் எந்த இனமாவது இதைச் சகிக்குமா? எந்த இனத்திலாவது இந்தக் கேடு நடக்க முடியுமா? நாதியற்றுப் போய் விட்டார்களா ஈழத் தமிழர்கள்? தமிழக மக்களே அருள்கூர்ந்து சிந்தியுங்கள்.

இலங்கை நாட்டில் சிங்களக் கூடாரத்தில் இருந்து வந்த உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி பார்வையிட்டுச் சொல்கிறார்: ‘மனிதப் பேரழிவு நடக்கிறது. மனித உரிமைகள் அழிக்கப்பட்டுவிட்டன என்று, அரசில் உயர் பதவி வழக்கறிஞராக இருந்தவர் சொல்கிறார் என்று அங்கிருந்து வந்த சிங்களப் பெண்மணி இங்கே பேட்டி தருகிறார்.

உலகில் எங்கே யுத்தம் நடைபெற்றாலும், யுத்தத்தில் பிடிபடுகிற கைதிகள் ஒரு பக்கத்தில் கைது செய்யப்படுகின்றவர்கள் போர்க் கைதிகளாக நடத்தப்படுகிறபோது, அவர்கள் மனித உரிமைகளோடு நடத்தப்பட வேண்டும் என்று ஜெனீவா கன்வென்ஷன் சர்வதேச விதிமுறைகள் சொல்கிறது. சர்வதேச மன்றங்கள் சொல்கின்றன. அவை எல்லாம் அங்கே மண்ணில் குழி தோண்டி புதைக்கப்பட்டு விட்டனவா?

நிமல்கா ஃபெர்னாண்டோ என்ற சிங்களப் பெண்மணி சொல்கிறார்: “முள்வேலி முகாம்களுக்குள் இந்த மக்கள் வதைபடுகிறார்கள். அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாமல், சித்திரவதைகளுக்கு ஆளாகி மடிகிறார்கள்” என்று. அப்படியானால், போராளிகளின் நிலைமை என்ன? போராளிகள் சித்ரவதைகளுக்கு ஆளாக்கப்பட்டுக் கொல்லப்படுகிறார்கள். ஈழத் தமிழ் இளைஞர்கள் அங்கிருந்து பிரித்து எடுக்கப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டு காடுகளில் தூக்கி வீசி எறியப்பட்டும், புதைக்கவும்படுகிறார்கள். நம் ஈழத் தமிழ் சகோதரிகள் நாசமாக்கப்படுகிறார்கள்.

போரின்போது சிங்களவர்களை விடுதலைப் புலிகள் கைது செய்து வைத்து இருந்தார்கள். அவர்கள் விடுவிக்கப்பட்டார்கள். அப்படி மீண்டு வந்த யாராவது ஒரு சிங்களக் கைதியாவது, விடுதலைப் புலிகள், எங்களைத் துன்புறுத்தினார்கள். சித்திரவதை செய்தார்கள் என்று சொல்லவில்லையே? விடுதலைப் புலிகள் மனிதாபிமானத்தோடு அவர்களை நடத்தினார்கள். இன்றைக்குத் தமிழக அரசு அறிவித்து இருக்கிறது. தலைமைச் செயலாளர் அறிவிக்கின்றார். தடை செய்யப்பட்ட ஒரு இயக்கத்தைப் பற்றி பேசக் கூடாது என்கிறார்.

இந்தக் கூட்டத்துக்கு இன்றைக்கு ஏராளமான துப்பறியும் வீரர்கள் வந்து இருக்கிறார்கள். மத்திய அரசில் இருந்தும் வந்து இருக்கிறார்கள். ஏனென்றால் அது ரொம்ப முக்கியமான இடம். இயக்குநர் பாரதிராஜாவின் அலுவலகம் தாக்கப்பட்டதைக் கண்டித்து இந்த இடத்தில்தான் நான் பேசினேன். அடுத்து 48 மணி நேரத்தில் என் மீது ஒரு வழக்குப் பதிந்தது. அதற்காக நீதிமன்றப் படிக்கட்டுகளில் ஏறி இறங்குகிறேன். அதைப் பற்றிக் கவலைப்படவில்லை.

நம்முடைய தோழர்கள் அக்கறையாக எடுப்பதைவிட அவர்களுடைய வீடியோ காமிராக்கள் மிகக் கவனமாக இந்தப் பேச்சுக்களைப் பதிவு செய்து கொண்டு இருக்கின்றன. ஒவ்வொரு அசைவையும் பதிவு செய்கிறார்கள். இதுநாடா அல்லது காடா? எந்த அடக்குமுறைச் சட்டத்தைக் கொண்டும் எங்களை மிரட்ட முடியாது என்று முதல் அமைச்சருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வரிசையாக வாதங்களை எடுத்து வைத்தாரே கொளத்தூர் மணி. தடை செய்யப்பட்ட ஒரு இயக்கத்தை ஆதரித்துப் பேசுவது தவறு அல்ல என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு தந்தது.

வேலூர் மத்திய சிறையில் இருந்து உச்சநீதி மன்றத்தில் அந்த வழக்கை நான் தொடுத்தேன். அந்த வழக்குக்குத் தீர்ப்பு தருகிறபோது நீதிபதிகள் சொன்னார்கள், “ஒரு தடை செய்யப்பட்ட இயக்கத்தை ஆதரித்துப் பேசுவதில் தவறு இல்லை. அந்த இயக்கத்திற்காகப் பேசுவதில் தவறு இல்லை. அந்த இயக்கத்துக்கு ஆதரவாக இங்கே ஓர் ஆயுதப் போராட்டத்துக்கு தயார் செய்தாலோ அல்லது இங்கே இருக்கக் கூடிய பொது அமைதியைக் குலைப்பதற்காக திட்டமிட்டுக் காரியங்களில் ஈடுபட்டாலோ, அந்த அமைப்பின் நோக்கத்தை அந்த அமைப்பு என்ன செயல்பட விரும்புகிறதோ அதை இங்கேயே நடத்திக் காட்டுவதற்கான வேலைகளில் ஈடுபட்டாலோ, அப்பொழுதுதான் அது தவறு என்று கூற முடியுமே த0விர, இந்தச் சட்டத்தின் கீழ் வருமே தவிர, கருத்துக்களைக் கூறுவதோ அதனுடைய இலட்சியங்களைப் பற்றிப் பேசுவதோ சட்டப்படி குற்றம் அல்ல” என்று உச்சநீதிமன்றம் தீர்ப்புச் சொன்னதை, இதே சட்டமன்றத்தில்தான் முதலமைச்சர் மேற்கோள் காட்டினார்.

ஆக, தமிழ்நாட்டில் எதற்காக இப்பொழுது இந்த அறிவிப்பு?

ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு நோக்கம் இருக்கின்றது. (தொடரும்)

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# பேரணி; பெரியார் சிலைக்கு மாலை



நங்கவள்ளி திலீபன் நகரில் கல்வெட்டு திறப்பு

## மதுரை



பெரியார் 131 பிறந்த நாள் செப். 17 காலை 10 மணியளவில் மதுரை மாவட்டச் செயலாளர் ஆ. முருகேசன் தலைமையில், வழக்குரைஞர் கு.ஞா. பகத்சிங், அ. பெரியசாமி, த. இளங் கோவன், மு. தமிழ்ப்பித்தன், வெண் மணி, விடுதலை சேகர், ஸ்டாலின் மற்றும் தோழர்கள் தந்தை பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தனர்.

## திருநெல்வேலி



பெரியார் 131 பிறந்த நாள் செப்.17 காலை 10 மணியளவில் பாளை பேருந்து நிலையம் முன்புள்ள பெரியார் சிலைக்கு கழகம் சார்பில் மாலை அணிவிக்கப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டச் செய லாளர் சி.ஆ.காசிராசன் தலைமையில், தலைமை செயற்குழு உறுப்பினர் பால்.பிரபாகரன் மாலை அணிவித்தார். நிகழ்வில் தூத்துக்குடி மாவட்டத் தலைவர் பொறிஞர் சி. அம்புரோசு, மாவட்ட செயலாளர் கோ.அ.குமார், துணைச் செயலாளர் க.மதன், தமிழ் நாடு மாணவர் கழக பொறுப்பாளர் வ. அகரன், நெல்லை ராசா, பிரபு, திராவிட இயக்க தமிழர் பேரவை தோழர்கள் கிருபா, செல்லப்பா, கழகத்தோழர்கள் செந்தில், கனகராசு, ரவிசங்கர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## காவேரிப்பட்டினம்

கழகத்தின் சார்பில் தந்தை பெரியார் 131-வது பிறந்த நாள் விழா 17.09.2009 அன்று காவேரிப்பட்டினம் அருகே பையூர் கிராமத்திலுள்ள தந்தை பெரியார் சிலைக்கு மாவட்ட செயலாளர் தி.குமார் தலைமை யேற்க, ஆனந்தன், மதிமணி ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செய்தனர். தமிழர் தேசிய இயக்கத் தோழர்கள் முருகேசன், சிவா, குமார், சிவாஜி ஆகியோர் பங்கேற்றனர்.



ஈழத் தமிழர்களின் வாழ்வுரி மையை பாதுகாக்க வலியுறுத்தி கண்ணைக் கட்டிக் கொண்டு இருசக்கர வாகனப் பரப்புரைப் பிரச் சாரம்

கழகத்தின் சார்பில் 12.09.2009 சனிக்கிழமை காலை 10 மணியளவில் கிருட்டினகிரி புதிய பேருந்து நிலையத்தில் தொடங்கி ஏரிக்கரை, பழையப் பேட்டை, காந்தி சிலை, ரவுண்டானா, சேலம் முக்கிய சாலை, கிளைச் சிறைச் சாலை, வழியாக மதியம் 2 மணியளவில் கார் நேசன் திடலை வந்தடைந்தது.

கிருட்டினகிரி மற்றும் காவேரிப் பட்டணத்தில் மாவட்ட செயலாளர் தி.குமார் தலைமையிலும், மாவட்ட செயலாளர் பிரேம்ழுமார் முன்னிலை யிலும், தூத்துக்குடி மாவட்ட செய லாளர் பால். அறிவழகன், இரு கண்களையும் கட்டிக் கொண்டு இரு சக்கர வாகனத்தில் பிரச்சாரம் செய் தார். நிகழ்ச்சியின் தொடர்ச்சியாக தலைமை கழக பேச்சாளர் நங்கவள்ளி அன்பு, தெருமுனைக் கூட்ட சிறப்புரை நிகழ்த்தினார். மந்திரமா? தந்திரமா? கலை நிகழ்ச்சி நடைபெற்றது. தமிழர் தேசிய இயக்கத் தோழர்கள் முருகேசன், சிவா, குமார், சிவாஜி, ஆனந்தன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## சென்னை

தந்தை பெரியார் 131 வது பிறந்த நாளான 17.9.09 அன்று காலை 9.30 மணியளவில் சென்னை அண்ணா சாலையிலுள்ள பெரியார் சிலைக்கும், 9.45 மணியளவில் பட்டாளத்தில் உள்ள பெரியார் சிலைக்கும் கழகத் துணைத் தலைவர் ஆனூர் செகதீசன், பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். பின்னர் சேத்துப்பட்டு, தியாகராயர் நகர், மயிலாப்பூர், இராயப்பேட்டை ஆகிய இடங்களிலுள்ள பெரியார் சிலைகளுக்கு கழகத் தோழர்கள் வாகனங்களில் ஊர்வலமாக சென்று மாலை அணிவித்தனர்.

இந்நிகழ்ச்சியில் கழகப் பொறுப் பாளர்கள் எ.கேசவன், அன்பு தனசேகர், தபசி குமரன், இரா. உமாபதி உள்ளிட்ட 200-க்கும் மேற்பட்ட தோழர்கள் இருசக்கர வாகனம், ஆட்டோ ஆகியவற்றில் அணிவகுத்து வந்தனர்.

காலை 11 மணியளவில் வட சென்னை புது வண்ணை சுனாமி குடி யிருப்பு பகுதியில் கழகத் தோழர்கள் யேசு, டார்வின்தாசன் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்த பெரியார் பிறந்த நாள் நிகழ்ச்சி சி. அருள்தாசு பாடலுடன் துவங்கியது. கழகத் துணைத் தலைவர் ஆனூர் ஜெகதீசன் கழகக் கொடியை ஏற்றி வைத்து உரை யாற்றினார். பின்னர் அப்பகுதி மக்களுக்கு சர்க்கரை பொங்கல் வழங்கப்பட்டன.

தந்தை பெரியார் படத்துடன் தடைகளை தகர்த்து தந்தையின் தத்துவம் பரப்புவோம் என்ற முழக்கத்தோடு நகர் முழுதும் கழக சார்பில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

### நன்கொடை

20.09.2009 அன்று தூத்துக்குடி மாவட்ட செயலாளர் கோ.அ. குமார் தனது 40-வது பிறந்த தினத்தை முன்னிட்டு 'புரட்சிப் பெரியார் முழக்கம்' வளர்ச்சி நிதியாக ரூ.500 வழங்கினார். நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். (ஆர்)

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம்
ரூ.150/-
தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41.
✆ 9840940400

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 24th September 2009

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.